கோகுலம்

GOKULAM • தீபாவளி இதழ் • நவம்பர் '92 • ரூ. 3.00





Catch the Action Spirit for its




- QUALITY
- GENTLE GRIP
- MULTIPLE COLOURS
- DIFFERENT SIZES
- AIRY
- CUSHIONED INSOLE

action® SHOES

கோகுலம்



1992 - நவம்பர் மாத இதழ்
மலர் : 10 இதழ் : 10



அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம். இனிய தீபாவளி வாழ்த்துகள்.

இது குழந்தைகள் தினம் கொண்டாடப்படும் நவம்பர் மாதம் ஆயிற்றே. உங்கள் அனைவருக்கும் குழந்தைகள் தின வாழ்த்துகள். இந்த நாளைக் கொண்டாடக் காரணமாக இருந்த நேருஜி எந்த இலட்சியங்களுக்காக வாழ்ந்தாரோ, அந்த இலட்சியங்களை மனதில் கொண்டு நாமும் நடக்க உறுதிகொள்ள வேண்டும். நேருவைப் பற்றிச் சில சுவையான சிறப்புப் பகுதிகள் இந்த இதழில் வெளியாகின்றன.

குழந்தைகளுக்குப் பிடித்தமான இந்த நவம்பர் மாதத்தில்தான் உங்கள் கோகுலத்தில் முதல் கௌரவ ஆசிரியரும், என்னைப் போன்ற எத்தனையோ குழந்தை எழுத்தாளர்கள் உருவாகக் காரணமாக இருந்தவருமான குழந்தைக் கவிஞர். அமரர். அழ. வள்ளியப்பா அவர்களின் 70வது பிறந்த நாளும் வருகிறது. இறவாத புகழுடைய இவரது பெருமைகளை நினைவுகூறும் ஒரு கட்டுரை இந்த இதழில் வெளியாகிறது. இதை எழுதியுள்ளவர் சாகித்ய அகாதமி பரிசு பெற்றவரும், குழந்தைக் கவிஞரோடு மிக நெருங்கிப் பழகியவருமான அன்பர் பன்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா அவர்கள். இவர் தலைவராக இருந்து நடத்தி வரும் "மணிமேகலை மன்றம்" இராஜபாளையம் பகுதியில் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கும் பெரிதும் தொண்டாற்றி வருகிறது.



'எங்கள் ஊரில் நடந்தது' பகுதிக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. ஏராளமானவர்கள் எழுதியிருக்கிறார்கள். தகுதியுடையவை கண்டிப்பாக வெளியாகும்.

கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேர வேண்டும் என்று இன்னமும் எத்தனையோ குழந்தைகள் எழுதிக் கேட்கிறார்கள். பலமுறை இதைப் பற்றி எழுதி விட்டேன். இப்படி ஒரு சங்கம் இப்பொழுது இயங்கவில்லை.

'என்னிடம் கதை இருக்கிறது. பாடம் இருக்கிறது. அனுப்பட்டுமா? படங்களையும் நாங்களே போட்டு அனுப்ப வேண்டுமா?' என்று எத்தனையோ குழந்தைகள் எழுதிக் கேட்கிறார்கள். தாராளமாக அனுப்பலாம். அனுப்புவதற்கு முன், உங்கள் நண்பர்கள், பெற்றோர்களிடம் காட்டி அவசியமானால் மாற்றம் செய்து ஆசிரியர் கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 97 என்ற முகவரிக்கு அனுப்புங்கள். படங்களை நீங்கள் போட வேண்டாம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுங்கள். உங்கள் முழு முகவரியையும் எழுத மறக்காதீர்கள்.



அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.


கோகுலம்
நவம்பர் '92
இந்த இதழில்...




பாம்புத்தலை அரக்கி
பக்கம் 41

★ அருமைச் சிறுவர் சிறுமியரே 1
★ இந்த இதழில் 2
★ அருமை நேரு 4
★ எங்கள் ஊரில் நடந்தது 5
★ பல் கூறிய பதில் 8
★ உங்கள் நூலகம் 95
★ எனக்கு மட்டும் எதற்கு? 11
★ தாய்லாந்தில் தீபாவளி 13
★ கோபக்கார ராஜா 15
★ வால்கள்
– சித்திர அறிவியல் 17
★ பிருந்தாவனக்
கவியரங்கம் 20
★ நீதானா? 23
★ பிருந்தாவனம் 27
★ கேட்கட்டுமா
டாக்டர்? 30
★ சிரிப்... 33
★ தீபாவளி
(பாடல்கள்) 34





ஈ கால்களைத் தேய்ப்பது ஏன்? பக்கம் 81



தாய்லாந்தில் தீபாவளி - பக்கம் 13



வால்கள் - பக்கம் 17

★ அழகு ராஜா நான்தாங்க! 35
★ திட்டியது பலித்தால்! 39
★ பாம்புத் தலை அரக்கி - வண்ணப்படக்கதை 41
★ நூறு ரூபாய் இரகசியம் - தொடர்கதை 57
★ நீயா நண்பா? 65
★ தங்கம்தான் எனக்கு (படக்கதை) 69
★ கேளுங்கள் சொல்லப்படும் 72
★ நெருவை ஏன் பிடிக்கும்? - 6 பேர் பேட்டி 76
★ ஈ கால்களைத் தேய்ப்பது ஏன்? 81 - அறிவியல்
★ புலியோ புலி! 85
★ பிழைத்துப் போ - அயல்நாட்டுக் கதை 87
★ நீ மட்டும் போ! 92
★ பந்து எங்கு உள்ளது? - போட்டி 94
★ அறிவியல் போட்டி முடிவு 10
★ சார் தபால் 96

அருமை நேரு!

அன்னை நாட்டின் விலங்கொடிக்க
அண்ணல் காந்தி வந்தார் - அவர்
அருமை நேரு தன்னைத் தமது
வாரிசாகத் தந்தார்!

கண்ணைக் காக்கும் இமையைப் போல
காவல் காத்து நின்றார் - நேரு
தன்னை ஈந்து புகழை நாட்டில்
தழைக்க விட்டுச் சென்றார்!

சீரழிக்கும் போர் அழிக்கத்
திட்டம் தீட்டித் தந்தார் - நெஞ்சில்
ஊறி நின்ற சமத்து வத்தை
உலகம் காணச் சொன்னார்!

எண்ணிரண்டு ஆண்டுகள் தாம்
இந்தியாவை ஆண்டார்! - அதில்
என்றும் வாழும் பேறு பெற்று
இதயங்களை வென்றார்!

பாரதத்தின் தவப்பயனாய்
வந்துதித்த நேரு - இந்தப்
பாரில் என்றும் உயர்ந்திலங்கும்
பனி படர்ந்த மேரு!

- வெற்றியூர் சுப. திருஞானம்.






"மாமா" என்றால் "நேரு" தான்!

"மாமா" என்றால் "நேரு"தான்! - நம்
மனத்தில் நிற்கும் "பேரு"தான்!
ஆமாம்; நவம்பர் மாதம்தான்! - குழந்தைகள்
அனைவருக்கும்பிர மாதம்தான்.

தலையில் காந்திக் குல்லாதான்! - நீண்ட
சட்டையில் "ரோஜா" நல்லாதான்!
விலையில்லாத நல்தொண்டு - செய்த
வீரர்! என்ற பெயர்! உண்டு!

காந்தித்தாத்தா சீடர்தான்! - உலகம்
கண்டுகளித்த வீடர்தான்!
மாந்தர்க்குள்ளோர் மாணிக்கம் - நாம்
மகிழ்ந்தே போற்றும் ஜவஹர்லால்!

- நெல்லை ஆ. கணபதி



ஜீனியஸ் ஆவேன்!

எங்கள் தந்தை அவ்வப்போது, எனக்கும் என் தம்பிக்கும் பெரிய அறிஞர்களின் சிந்தனைகளையும், கருத்துக்களையும் கூறி உற்சாகப்படுத்துவார். ஒரு நாள் தாமஸ் ஆல்வா எடிசனின் மேற்கோளான "Genius is 1% inspiration. 99% persipiration" என்பதன் பொருளில் ''சிறந்த அறிவாளியாக வேண்டுமானால் 1% ஊக்கமும், 99% வியர்வை சிந்தும் கடின உழைப்பும் வேண்டும்'' என்று கூறினார். உடனே என் தம்பி, ''இனிமேல் நான் மின்விசிறி போடாமல், சன் னல்களை சாத்திக் கொண்டு படிக்கப் போகிறேன். அப்பத்தான் நிறைய வியர்க்கும். நானும் ஜீனியஸ் ஆவேனே!'' என்றதும் அனைவரும் சிரித்து விட்டோம்.

- பா. கபாதேவி, திண்டுக்கல்.



காணாமல் போன பூமாலை!

சென்ற வாரம் மாமாவிற்கு திருமணம் நடந்தது. முகூர்த்த நேரம் நெருங்குவதால் மாப்பிள்ளையை மணவறையில் வந்து அமரச் சொன்னார்கள். திடுக்கென்று மாப்பிள்ளையின் கல்யாண மாலையைக் காணவில்லை. முகூர்த்த நேரம் வேறு நெருங்கிக் கொண்டிருந்தது. எல்லோரும் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டு இருந்தனர். இங்கேதானே கொண்டு வந்து வைத்தார்கள். எங்கே போயிடுத்து

என்று சொன்னார் பெரிய மாமா. எல்லோரும் என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தனர்.



மொட்டை மாடியில் இருந்து இறங்கி வந்தாள் ஐந்து வயது நீபிகா. அவளைப் பார்த்ததும் எல்லோருக்கும் அதிர்ச்சி. காரணம், தேடிக் கொண்டிருந்த மாப்பிள்ளையின் மாலை அவள் கழுத்தில் இருந்தது!

- எம். மனோஜ், திண்டுக்கல்.

பைகாரா இறங்கு!

திருப்பரங்குன்றத்திலுள்ள உறவினர் வீட்டிற்கு பஸ்ஸில் சென்று கொண்டிருந்தோம். பஸ்ஸில் ஒரு மாமா எங்களோடு பேசிக் கொண்டு வந்தார். ''பசுமலையில் இறங்க வேண்டும்'' என்றார்.

பைகாரா ஸ்டாப்பிங் வந்தது. கண்டக்டர் ''பைகாரா இறங்கு'' என்று குரல் கொடுத்தார்.

உடனே அந்த மாமா இறங்கப் போனார். ''மாமா, பசுமலை இன்னும் வரலியே?'' என்று கேட்டேன். ''கண்டக்டர்தான் பைக்காரா இறங்குன்னு சொன்னாரே!!'' என்று கேட்டார் அவர்.



அப்போதுநான் கவனித்தேன். அவர் தோளில் பை மாட்டியிருந்தார். பஸ்ஸில் ஒரே சிரிப்பு.

- ஹேனாசெல்வகுமாரி,
தாசில்தார் நகர்.

அமெரிக்கா தெரியுமா?

ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறேன். எங்கள் சமூக அறிவியல் ஆசிரியர் ஒரு வரைபடத்தைக் காட்டி, ''இதில் அமெரிக்கா எங்கே இருக்கிறது'' என்று ஒரு மாணவனிடம் கேட்டார். மாணவன் தெரியாது என்று சொல்லவே, பெஞ்சி மேல் ஏறி நிற்கச் சொன்னார். உடனே அவன் ''பெஞ்சி



மேலே ஏறி நின்னால் அமெரிக்கா தெரியுமா சார்?'' என்று கேட்டானே பார்க்கலாம். வகுப்பே சிரிப்பொலியால் அதிர்ந்தது.-

- கு. ஆசைத்தம்பி,
சோழன்மாளிகை.

என்னமா பேசுது!



சமீபத்தில் எங்கள் குடும்பத்தினர் எல்லாம் ஒரு ஹிந்தி மொழிப் படத்திற்குச் சென்றிருந்தோம். அந்தத் திரைப் படத்தில் ஒரு சிறிய குழந்தை மூச்சுவிடாமல் மிக அழகாகப் பேசி நடித்தாள். வகுப்பில் நடத்தப்படும் ஹிந்தி வகுப்பில் நான் சரியாகக் கவனிப்பது இல்லை. எனவே, ஹிந்தி மொழிப் பயிற்சியின் போது சிறிது கஷ்டப்பட்டேன். இதை மனத்தில் வைத்துக் கொண்டிருந்த சினிமா பார்த்துக் கொண்டிருந்த என்னுடைய தாத்தா, ''டேய் அதோபார், ஒரு சின்னக் குழந்தை என்னமாக ஹிந்தி பேசுகிறாள், நீ என்னடா என்றால் திணறுகிறாயே!'' என்று கேட்டார். ''ஹிந்தி படக் குழந்தை இந்தியில் பேசாது தமிழிலா பேசும்!'' என்று கேட்டேன். அமைதியாக இருந்த அந்த அரங்கமே கொல்லென்று சிரித்தது.

– ஜெ. ஜேசுதாசன் வினோத்குமார்
சார்லஸ், பழநி.



பந்தா ராமு

ராமு ஒரு பந்தா பேர்வழி. தன்னிடம் இல்லாததை இருப்பது போல் காட்டிக் கொள்வான். அவனது பெற்றோரும் நண்பர்களும் அவனைத் திருத்த முயன்று தோற்றனர். பெற்றோர் கவலைப்பட்டனர்.

ராமு வளர்ந்து பெரியவனானான். சட்டப்படிப்பு படித்து முடித்தான். வக்கீல் தொழில் செய்ய ஆரம்பித்தான். பல கேஸ்களை தன் வாதத் திறமையால் வென்றான். பணம் சேரச் சேர தொலைபேசி வைத்துக் கொள்ள ஆசைப்பட்டான். அதற்காக விண்ணப்பித்தான். பணம் கட்டிவிட்டுப் போகுமாறும் ஆளை அனுப்புவதாகவும் பதில் வந்தது.

நாட்கள் நகர்ந்தன. ஒருநாள் ராமு வெளியில் போயிருந்த நேரம் தொலைபேசி நிலையத்திலிருந்து பணியாளர் வந்து அவனது வீட்டிற்குத் தொலைபேசித் தொடர்பு கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டுச் சென்றார். இணைப்பு இன்னும் தரவில்லை.

வெளியில் சென்றிருந்த ராமு வந்து பார்த்தான். அவனுடைய அறையில் யாரோ ஒருவர் அமர்ந்திருந்தார். அவனுக்காகக் காத்திருந்தார். அவரைப் புதிய கட்சிக்காரராக நினைத்து, அவர் தன்னைப் பற்றிப் பெருமையாக நினைத்துக் கொள்ள எண்ணினான் பந்தா ராமு. புதிய தொலைபேசி வந்திருப்பதைக் கவனித்தான்.

ராமுவுக்கு பளிச்சென்று ஒரு எண்ணம் தோன்றியது. இணைப்புக் கொடுக்காத தொலைபேசியை எடுத்து 'ஆமாம் இது வக்கீல் வீடுதான். நான் வக்கீல் ராமுதான் பேசுகிறேன். அந்தக் கொலைக் கேசில் அரசுக்குச் சாதகமாக வழக்காடி வெற்றி பெற்று விட்டு வந்திருக்கிறேன்' என்று மனம் கூசாமல் அந்தப் புதியவர் எதிரில் பெருமை பேசினான்.

ராமு தொலைபேசியை வைத்து விட்டு வந்திருந்தவரைப் பார்த்து 'யார் நீங்கள்? என்ன விஷயமாக வந்திருக்கின்றீர்கள்?' என்று கேட்டான். வந்தவர், 'தொலைபேசி நிலையத்திலிருந்து வருகிறேன். காலையில் உங்கள் வீட்டில் தொலைபேசி தொடர்புக்கான ஏற்பாடுகளைப் பணியாளர்கள் செய்து விட்டுச் சென்றிக்கிறார்கள். இப்போது தொடர்பு கொடுத்து விட்டுச் செல்வதற்காக வந்திருக்கிறேன்' என்று சிரித்தார். ராமுவின் முகத்தில் அசடு வழிந்தது.

பந்தா ராமு அன்றிலிருந்து தன் தற்பெருமையை விட்டொழித்து நல்லவனானான்!

- வீ. ஆனந்த திருமுருகன்,
ஆரணி.

அறிவியல் போட்டி முடிவு

■	■	1 க	9 லி	லி	யோ	2 எ	டி	ச	ன்
■	கி	■	ஸ்	11 ஜெ	■	3 பெ	ல்	ஐ	■
4 நி	யூ	ட்	ட	ன்	■	■	■	ன்	■
■	ரி	■	ர்	ன	■	5 மோ	ர்	ஸ்	■
13 து	■	■	■	ர்	■	■	■	டி	■
ம்	14, 6 ஹா	ப்	கி	ன்	ஸ்	■	7 ஹெ	ன்	றி
பா	ர்	■	■	■	■	15 பா	■	■	■
■	வி	■	■	8 க	ல்	பா	க்	க	ம்

இப் போட்டியில் எதிர்பார்த்த அளவுக்கு வாசகர்கள் ஆர்வம் காட்டவில்லை! ஏன்? அறிவியல் என்பதாலா? இது அறிவியல் யுகமாயிற்றே? ஆனாலும் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் சரியான விடை எழுதியிருந்தார்கள். குலுக்கல் முறையில் தேர்வு செய்யப் பட்டு ரூ. பத்து பரிசு பெறுவோர் :

1. ஆர். உமாபதி, தாராபுரம்
2. ஆர். சத்யப்பிரியா, சென்னை – 14.
3. ஆர். விஷ்ணுப்ராணேஷ், திண்டுக்கல்.
4. கோ. மங்களேஸ்வரி, குடந்தை.
5. ராம்ராஜா, திருச்சி.
6. எஸ். சிவக்குமார், சேலம் – 9.
7. சி. பாரதிராஜா, புதுக்கோட்டை.
8. ராஜராஜன், குற்றாலம்.
9. ஆர். பாலாஜி, உடுமலை.
10. ஆர். ஜெசிந்த், திருநெல்வேலி.
11. வி. அபிதா, திருச்சி.
12. க. இராஜேஸ்வரி, சேலம் – 7.
13. எஸ். நசிகேதன், சின்ன காஞ்சிபுரம்.

பரிசு பெற்றவர்களுக்கு கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

எனக்கு மட்டும் எதற்கு?

பன்மொழிப் புலவர் ஜகந்நாத ராஜா

சென்னையிலிருந்து டெல்லிக்கு விரைந்து கொண்டிருந்த அந்த எக்ஸ்பிரஸ் ரயிலுக்குத் தலை கொள்ளாத கர்வம்! எழுத்தையே ஆட்டிப் படைக்கும் சக்தி மிக்க எழுத்தாளர்களையல்லவா அது சுமந்து கொண்டு செல்கிறது. மூன்று பெட்டி நிறையத் தமிழ் எழுத்தாளர்கள்! அவரவர் அவரவர்களுடைய நண்பர்களுடன் பேசி, பயண அலுப்பே தோன்றாது மகிழ்ந்திருந்தனர்.

எல்லா எழுத்தாளர்களையும், அவர்கள் பிரபலமானவர்களாக இருந்தாலும் சரி, ஆரம்ப நிலையில் இருந்தாலும் சரி அனைவரையும் பேச்சில் கலந்து கொள்ள வைத்து கல கலப்புக் குறையாமல் பார்த்துக் கொண்டார் ஒரு கதர்சட்டைக்காரர். தங்களுக்கு என்ன தேவை இருந்தாலும் நேராக அவரிடம் வந்து கூறி உரிமையோடு உதவி பெற்றனர் பயணம் செய்தவர்கள். அந்த அளவுக்கு கதர்சட்டைக்காரர் எல்லோருக்கும் வேண்டியவராக இருந்தார்.


பேசி மகிழும் வாய்க்கு, அதுவும் நெடுந்தொலைவு பயணத்தின் போது, ஏதாவது சிறுதீனி இருந்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணுவது நியாயம் தானே? அதையும் அந்த இன்முகம் நிறைந்த கதர்சட்டைக்காரரே கவனித்துக் கொண்டார். நேரத்தில் உணவு சிற்றுண்டி வந்ததோடு, அவ்வப்பொழுது முறுக்கு, சீடை, தேன்குழல் எல்லாம் மாறி மாறி எழுத்தாளர்களைத் தேடி வந்தன. எல்லாம், எல்லோருக்கும் வேண்டியவராக இருந்த கதர்சட்டை புன்சிரிப்புக்காரின் கவனிப்புத்தான்!

ரயில் வண்டி டெல்லியை அடைந்தது. அவ்வளவு எழுத்தாளர்களையும் ஒரே இடத்தில் காண்பது பெரிய வாய்ப்பு அல்லவா? எல்லோரையும் பொதுவாக ஓர் இடத்தில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்தப் புன்சிரிப்புக்காரருக்கு மட்டும் தனியாக வசதியாக ஓர் இடத்தை அவருடைய அபிமானிகள் ஏற்பாடு செய்திருந்தனர். அவரை மட்டும் ஏற்றிப் போகத் தனிக் கார் வந்து காத்திருந்தது.

''எதற்காக இந்தத் தனி ஏற்பாடு? என்னைக் கேட்காமல் யார் உங்களை இதற்கெல்லாம் ஏற்பாடு செய்யச் சொன்னது? நான் உங்கள் வீட்டுக் கல்யாணத்திற்காகவா வந்திருக்கிறேன்? எழுத்தாளர் விழாவுக்காக நெருங்கின நண்பர்களுடன் வந்திருக்கிறேன்? அதனால், அவர்களோடுதான் நான் போகப் போறேன்; தங்கப் போகிறேன். காரை எடுத்துக் கொண்டு போங்கள்'' என்றார் புன்சிரிப்பு.

''எல்லோருடனும் ஒன்றாக வந்து விட்டு, தனியாகச் சென்று தங்குவது பண்பல்ல என்று நீங்கள் மறுப்பது நியாயம்தான். சாதாரணமாக இருந்தால் உங்களை அழைத்திருக்க மாட்டோம். நீங்கள் உடல் நிலை சரியில்லாதவர். அதைக் கருத்தில் கொண்டாவது

மணிமேகலை மன்ற நிகழ்ச்சியில் குழந்தைக் கவிஞர், வானொலி நிலைய இயக்குநர், ஜெகந்நாதராஜா மற்றும் பலர்.



எங்களோடு வாருங்கள்'' என்றார் காரைக் கொண்டு வந்தவர்.

''அப்படியே பார்த்தாலும், என்னைப் போலவே உடல் நலம் சரியில்லாதவர்கள் பலர் எங்கள் குழுவில் இருக்கிறார்கள். அதனால், எப்படிப் பார்த்தாலும் நான் இங்கு இவர்களுடன் இருப்பதுதான் எனக்கு மகிழ்ச்சி தரும். நான் இதற்காகவேதான் வந்திருக்கிறேன். மன்னியுங்கள்'' என்று உறுதியாக முடிவாகக் கூறினார் புன்சிரிப்புக்காரர்.

அவருடன் பயணம் செய்தவர்கள் கூட, ''பரவாயில்லை நீங்கள் உடல் நலமில்லாதவர். உங்களிடம் பால் உள்ள அன்பால் அவர்கள் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். நாங்கள் உங்களைத் த வ றா க எண்ணமாட்டோம். அவர்னோடு சென்று சற்று வசதியாகத் தங்குங்கள்'' என்று வற்புறுத்தினர். ஆனால் புன்சிரிப்புக்காரர் நகரவில்லை.

அந்த மனிதநேயம் மிக்க கதர்ச் சட்டைக்காரர் வேறு யாருமல்ல. கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியரான குழந்தைக் கவிஞர் அமரர் அழ. வள்ளியப்பா அவர்கள்தான். ஒரு சிறு குழந்தை தனக்குப் பிறந்த நாள் என்று அழைத்தால் கூட எந்த கௌரவத்தையும் பார்க்காமல் வந்து கலந்து கொண்டு மகிழ்விக்கும் பண்பின் சிகரம் அவர். இராஜபாளையத்தில் மணிமேகலை மன்றத்தின் சார்பில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளில் அவர் கலந்துகொண்டிருக்கிறார். தேசிய ஒருமைப்பாட்டைக் குழந்தைகள் மனதில் மிக அழகாக வலியுறுத்திப் பேசி இருக்கிறார். மிகப் பெரிய பதவிகள் வகித்த போதிலும் காட்சிக்கு எளியவராக, குழந்தைகள் கொண்டாடும் அன்பு மனம் கொண்ட பண்பாளராக அவர் இருந்தார். குடும்பப் பிரச்னை முதல் எழுத்தாளர் சங்கப் பிரச்னைகள்வரை எத்தனையோ பிரச்னைகளை நண்பர்கள் எடுத்துக் கொண்டு அவரிடம் வருவார்கள். நியாயமான பிரச்னைகளுக்கு எளிதில் தீர்வு கண்டு உதவுவார் அவர். ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் ஒரு மகாகவி தோன்றுவான் என்பார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறையே தோன்றக்கூடிய காலத்தை வென்ற குழந்தைக் கவிஞர் அவர்.

தாய்லாந்தில் தீபாவளி

தீபாவளி என்றால் எல்லோருக்கும் மகிழ்ச்சி. குறிப்பாகக் குழந்தைகளுக்கு அளவிட முடியாத மகிழ்ச்சி! பட்டாசைப் பற்றி எத்தனை கனவுகள் காண்பார்கள்!

இந்தியாவில் தீபாவளிப் பண்டிகை கொண்டாடுவது போலவே தாய்லாந்திலும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.

தீப ஒளிப் பண்டிகையை அவர்கள் ''லோய் கிரதோங்'' என்று அழைக்கிறார்கள். இந்தப் பண்டிகை நவம்பர் மாதத்தில் வருகிறது. அந்த வருடத்தில் வரும் பன்னிரெண்டாவது பௌர்ணமியன்று, நிலவொளியில் தீபங்களை ஏற்றி இதை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். ''லோய் கிரதோங்'' என்று அழைக்கப்படுவதற்கு ஏதாவது பெயர்க் காரணம் இருக்க வேண்டுமல்லவா? நிச்சயமாக உண்டு. ''லோய்'' என்றால் மிதக்க விடுதல் என்றும் ''கிரதோங்'' என்றால் இலையினால் செய்யப்பட்ட கிண்ணங்கள் என்றும் பொருள். பண்டிகையன்று இரவு, நிலவொளியில், இலையால் செய்யப்பட்ட கிண்ணங்களில் தீபங்களை ஏற்றி வைத்து, ஓடை அல்லது ஆற்றில் மிதக்க விடுவார்கள்.

பண்டிகை என்றால், அதைக் கொண்டாடுவதற்கு உரிய காரணம் வேண்டுமல்லவா? நம் வாழ்வின் அத்யாவசியப் பொருட்களில் ஒன்றான நீர், இந்த உலக ஜீவராசிகளையெல்லாம் வாழ்விக்கிறது இல்லையா? நாம் தண்ணீரை உபயோகப்படுத்துவதோடு நிற்காமல் எத்தனையோ முறைகளில் அதை அசுத்தமும் செய்கிறோம். அந்தப் பாவத்திற்காகக் கடவுளிடம் மன்னிப்புக் கேட்கவே இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இங்கு ஓடும் நர்மதை ஆற்றின் கரையில் புத்த பகவானின் புண்ணிய பாதங்கள் பட்டனவாம். அந்த இடத்தை புண்ணியத்தலமாகவும் நினைத்து அவ்வாற்றங்கரையினிலே வழிபாடு செய்கிறார்கள்.

பண்டிகையை எப்படிச் சிறப்பாக கொண்டாடுகிறார்கள் தெரியுமா?

முதல் நாளே வீடுகளைச் சுத்தமாகக் கழுவி அலங்காரம் செய்கிறார்கள். மறு நாள் பண்டிகைக்கு உறவினர், நண்பர் என்று எல்லோரையும் தங்களுடன் பண்டிகையில் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுகிறார்கள். தின்பண்டங்கள், புதுத் துணிகள், பட்டாசு வகைகள் அனைத்தும் வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். வாழை இலையைக்





கொண்டு, அதில் தங்களுக்குப் பிடித்த வடிவில் (பூ, படகு) கிண்ணங்களைச் செய்து வைத்துக் கொள்கிறார்கள். அக்கிண்ணங்களை அலங்காரம் செய்து நடுவில் மெழுகுவர்த்தி வைப்பதற்காக இடமும் விடுகிறார்கள்.

பண்டிகைக்கு என ஏற்பாடாகத் தயார் செய்து வைத்திருக்கும் பொருட்களை ''சாலா'' என்று கூறப்படும் சின்னச் சின்னக் குடில்களில் (இவை நர்மதை ஆற்றின் ஓரத்தில் இருக்கும்) கொண்டு சேர்த்து வைத்துக் கொள்கிறார்கள்.


பண்டிகை தினத்தன்று ஆற்றோரத்தில் மக்கள் குடும்பத்தினரோடு கூடியிருப்பார்கள். புத்தாடை உடுத்தி, தின்பண்டங்கள் சாப்பிட்டு கேளிக்கைகளில் ஈடுபட்டு இருப்பார்கள். பௌர்ணமி தினத்தன்று கொண்டாடுவதால் முழு நிலவு எப்பொழுது வானில் வரும் என்று காத்திருப்பார்கள். முழு நிலவு தோன்ற ஆரம்பித்தவுடன் எல்லோரும் மகிழ்ச்சியுடன் ஆரவாரித்து, விளக்கை ஏற்றி, கிண்ணங்களில் வைத்து மிதக்க விடுவார்களாம். ஏற்றிய விளக்கு கண்ணுக்கு எட்டும் தூரம் வரை அணையாமல் மிதந்து சென்றால், தாங்கள் நினைத்த காரியம் நிறைவேறும் என்கிற நம்பிக்கையும் உண்டு.

கடவுளை வணங்கி, தெய்வத்திடம் மன்னிப்புக் கேட்டு, கடவுள் மன்னிப்பார் என்கிற திருப்தியோடு ஆற்றங்கரையில் வாண வேடிக்கைகளை நிகழ்த்தி, பட்டாசுகளைக் கொளுத்தித் தங்கள் நன்றியையும் தெரிவிப்பார்கள். பின் ஒருவருக்கொருவர் வாழ்த்தி, மகிழ்ச்சியுடன் வீடு திரும்புவார்கள்.

தாய்லாந்து மக்கள் ''லோய் கிரதோங்''கைக் கொண்டாட நாமும் வாழ்த்துவோமா?

- மாலதி சந்திரசேகரன்

அட்டையில் : ஸ்ரீவித்யா
அட்டை வண்ணப்படம் : யோகா




கோபக்கார ராஜா



சோனாபுரி நாட்டின் அரசர் மிகவும் நல்லவர். ஆனால் ரொம்பவும் முன் கோபக்காரர். அவருடைய கெட்ட குணம் அவருக்குத் தெரிந்திருந்தும் கோபத்தைக் கட்டுப்படுத்தத் தெரியாமல் தவித்தார். அந்த குணம் அவருடைய சிறு வயது முதலே தோன்றியது. எவ்வளவோ பேர் முயன்றும் மன்னரின் முன் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அரண்மனையில் ஏற்படும் சிறு சிறு செயல்களுக்குக் கூட மன்னர் மிகவும் கோபப்படுவார். நல்ல குணமுடைய தங்கள் மன்னர், இப்படி முன் கோபத்தால் சீரழிந்து, குடிமக்களின் வெறுப்புக்கும் ஆளாவதைக் கண்டு, அமைச்சர் வருந்தினார். புத்திசாலியான அவர் அரசரின் கோபத்தை மாற்ற ஒரு திட்டம் போட்டார்.

அதன்படி தங்கக் குவளை ஒன்றைச் செய்து கொண்டார். பின், அரசரது பூஜையறையில் அரசர் கண்ணில் படுமாறு குவளையை வைத்து, மறைந்து கொண்டார்.



அரசர் பூஜை செய்யும்போது அக்குவளை இருப்பதைக் கண்டார். வியந்தார். மறைந்திருந்த மந்திரியார் ''அரசே நான்தான் உங்கள் குல தெய்வம் பேசுகிறேன். உன்னிடம் உள்ள முன் கோபத்தால் உனக்கு அழிவு நேரிடப் போகிறது. அதிலிருந்து உன்னைக் காக்க வேண்டும் என்பதற்காக மந்திர தங்கக் குவளை ஒன்றை வைத்துள்ளேன். அது மிகவும் மந்திர சக்தி வாய்ந்தது. உன்கையிலேயே அதை வைத்திரு. உனக்கு எப்போதாவது முன்கோபம் வந்தால், உடனே அக்குவளையில் மூன்று முறை நீர் நிரப்பி அதைக் குடி. உன் கோபம் பறந்து போகும்'' என்று கத்தி விட்டு என்ன நடக்கப் போகிறது என்பதை அறிய ஆவலாய் இருந்தார்.

அரசர் குவளையை மிகவும் பய பக்தியோடு எடுத்துக் கொண்டார். கோபம் வரும் போல் இருந்தால் குவளையில் மூன்று முறை நீர் நிரப்பிக் குடித்தார். அவரது கோபம் சிறிது சிறிதாகக் குறைந்து கோபம் கொள்ளும் குணமும் முழுமையாக மறைந்து விட்டது!

ஒரு நாள் மந்திரியிடம் குவளையின் சக்தி பற்றியும் தனது கோப குணம் மறைய அந்த மந்திரக் குவளைதான் உதவியது என்றும் பெருமையோடு கூறினார் மன்னர்!

மந்திரி, ''அரசே, அந்தக் குவளையை உங்கள் குல தெய்வம்தானே கொடுத்தது?'' என்று கேட்டார்.



''ஆமாம்! அது எப்படி உங்களுக்குத் தெரியும்?'' என்று கேட்டார் அரசர்.


''அந்தக் குல தெய்வம் நான்தான், அந்தக் குவளையும் சாதாரணமானது தான்,'' எனப் பணிவோடு எல்லாவற்றையும் கூறினார் மந்திரி.

''அப்படி என்றால் அது எப்படி என் கோபத்தைப் போக்கியது?'' என வியப்போடு கேட்டார் அரசர்.

''அரசே! கோபம் வரும்போது சிந்திக்க நேரம் இருக்காது. சிந்தனை வந்தால் கோபம் தானாகவே குறையும். தண்ணீரை ஊற்றிக் குடிக்கும் பொழுது, சிந்திக்க உங்களுக்கு நேரம் கிடைக்கிறது. அப்பொழுது சிந்திக்க முடிவதால் புலன்கள் அமைதி பெறுகின்றன. ஆத்திரம், நியாயத்திற்குத் தன் இடத்தைக் கொடுத்து ஓடியே போகிறது.'' ஆத்திரத்திற்கு இடம் கொடுக்காது நடந்து கொண்டால் உலகத்தையே வெல்லலாம். நீங்கள் வீரம் மிக்கவர். நீதி நெறி தவறாதவர். குடிமக்களிடம் அன்புள்ளம் கொண்டவர். இருந்தும் உங்களுடைய நற்பண்புகள் வெளியே தெரியாது ஆத்திரமும், முன்கோபமும் உங்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தன. நீங்கள் அவைகளை வெல்ல வேண்டும் என்றே நான் இப்படிச் செய்தேன்'' என விளக்கினார் அமைச்சர்.


அரசர் அகமகிழ்ந்து மந்திரியாருக்குப் பரிசுகள் பல வழங்கி சிறப்பித்தார். நாடும் மந்திரியைப் போற்றியது.

- ஜ. சலீம், வந்தவாசி.



வால்கள்

ஆழி



அணில், மரத்துக்கு மரம் தாவும்போதும், குறுகலான மரக்கிளையில் நடக்கும் போதும், தனது வாலை 'பாலன்ஸ்' கோலாகப் பயன்படுத்துகிறது. மேலிருந்து குதிக்கும் போது, வாலை 'பாராசூட்' போலப் பயன்படுத்துகிறது. இதனால், 20 மீட்டர் உயரத்திலிருந்து குதித்தாலும் அதற்கு அடி படுவதில்லை!



'பீவர்' என்னும் பிராணியின் வால், பட்டையாக இருக்கும். இந்த வால், நீந்தும்போது துடுப்பாகவும், சுக்கானாகவும் பயன்படுகிறது. எதிரிகளைக் கண்டுவிட்டால், தன் வாலினால் நீரில் படபடவென்று அடித்து மற்ற பிராணிகளை எச்சரிக்கும். இந்தச் சத்தம் பல மைல்கள் தூரத்துக்குக் கேட்கும்!



ஆப்பிரிக்கப் பாலைவனப் பகுதிகளில் 'ஜெர்போ' என்னும் எலி இருக்கிறது. இதன் முன்னங்கால்கள் குட்டை; பின்னங்கால்கள் நீளம். இது தன் இரையைத் தன் வாலில் வைத்துச் சுருட்டிக் கொண்டு, தன் வளைக்குப் பாய்ந்து ஓடும்!





நியூகினியாவில் 'மீன் பிடிக்கும் எலி' இருக்கிறது. அது தன் வாலையே தூண்டிலாகப் பயன்படுத்துகிறது. எப்படி? நீரின் கரையிலிருந்து கொண்டு, தன் வாலை நீருக்குள் விடுகிறது. வாலைப் புழு என்று எண்ணி மீன் கடிக்கும்போது, சட்டென்று வாலை மேலே இழுக்கும். அதனுடன் வரும் மீனைப் பிடித்துத் தின்னும்.

திபெத்தில் உள்ள 'யாக்' என்னும் எருதின் வாலை அங்கே உள்ளவர்கள் துடைப்பமாகப் பயன்படுத்துகிறார்கள்!




ஆப்பிரிக்காவில் உள்ள 'ஹாவ்லர்' குரங்குகள் சண்டையிடும் போது, வாலை, மரக்கிளையில் சுற்றிக் கொண்டு தொங்கி, ஊசலாடியபடியே கைகளாலும் கால்களாலும் தாக்கி, ஒன்றுடன் ஒன்று சண்டை போடும்!






அமெரிக் காடுகளில் வாழும் 'கிங்கி கார்னிவோர்' என்னும் பிராணி இரை தின்பதே ஒரு வேடிக்கை தான். அது மரக்கிளையில் தன் வாலைச் சுற்றிக் கொண்டு, நான்கு கால்களாலும் பழங்களைப் பறித்துச் சாப்பிடும்!



ஒரு கங்காரு, தன் நான்கு கால்களையும் தூக்கியபடி தன் வாலின் மீது மட்டுமே நிற்க முடியும்! அதன் வால் அவ்வளவு உறுதியானது! கங்காரு வேகமாகப் பாய்வதற்கு அதன் வாலும் உதவுகிறது. அதன் வால் உயர்ந்தால், அது வேகமாகப் பாயப் போகிறது என்பது பொருள். வாலை இழந்து விட்டால் அதனால் சரியாக நடக்கக்கூட முடியாது!

உலகில் வாலின் எடை அதிகமாக உள்ள பிராணி ரஷ்யாவில் வளர்க்கப்படும் 'ஹிஸ் ஸார்ச்' செம்மறி ஆடு. உடலின் மொத்த எடையில் வால் மட்டும் மூன்றில் ஒரு பங்கு இருக்கும்! வால் கொழுப்பு நிறைந்தது. இந்த ஆடுகள் இறைச்சிக்காகவும், கொழுப்புக்காகவும் வளர்க்கப் படுகின்றன!






'பங்கோலின்' என்னும் எறும்புத் தின்னி, தன் பொந்துக்குள் நுழைந்து கொண்டு, தன் வாலைப் பந்துபோல் சுருட்டிக் கொண்டு பொந்தின் வாசலை அடைத்துக் கொள்ளும். நிம்மதியாகத் தூங்கும். கடினமான செதில்களால் ஆன அதன் வாலை எந்தப் பிராணியும் கடித்துவிட முடியாது!

நரிக்கு மிகவும் பிடித்த இரை நண்டுதான். நரி, ஒரு நண்டின் வளைக்குள் தன் வாலை நுழைத்து அசைக்கும். உள்ளே உள்ள நண்டு, நரியின் வாலை இறுகக் கவ்விக் கொள்ளும். உடனே நரி தன் வாலை வெளியே இழுக்கும்; வாலுடன் வரும் நண்டைப் பிடித்துத் தின்றுவிடும்!





விரியன் பாம்பில் 'கிலுக்குப் பாம்பு' என்று ஓர் இனம் இருக்கிறது. இதன் வாலின் கடைசியில் சுமார் 10 எலும்புத் துண்டுப் பகுதிகள் இருக்கின்றன. இந்தப் பாம்பு ஊர்ந்து வரும்போது கிலு கிலு என்று ஓசை எழுவதால் இந்தப் பெயர்.

கடலில் 'ஸ்டிங் ரே' என்னும் கொடுக்குத் திருக்கை மீன் இருக்கிறது. இது எதிரியைத் தன் நீண்ட வாலினால் அடித்துத் தாக்கும். அப்போது, அதன் வாலின் நுனியிலிருந்து விஷம் வெளிப்பட்டு, எதிரிக்கு வலியையோ, மரணத்தையோ ஏற்படுத்தும்!







ஆழ்கடலில் வாழும் 'தூண்டில் மீனின் வால் நுனியில் பிரகாசமான வெளிச்சம் வந்து கொண்டேயிருக்கும். அந்த வெளிச்சத்தினால் கவரப்பட்டு, சிறு மீன்கள் வரும்போது இந்த மீன் பிடித்து விழுங்கிவிடும்!




'லையர்' பறவையின் வால் 'லையர்' என்னும் இசைக் கருவியைப்போல் இருப்பதால் அதற்கு அந்தப் பெயர்!



மரங்கொத்திப் பறவை, மரத்தைப் பற்றிக் கொண்டு கொத்தும் போது, மீள் விசை உள்ள உறுதியான அதன் வால், மரத்தில் பதிந்து, முக்காலி மாதிரி இருக்க உதவுகிறது!




உலகில் மிகவும் நீளமான வாலை உடைய பறவை எது தெரியுமா? ஜப்பானில் உள்ள 'யோகோ ஹாமா' கோழிதான்!



பறவை என்றால் வால் இருக்கும். ஆனால், வாலே இல்லாத பறவை நியூஸிலாந்தில் உள்ள 'கிவி' தான்!

பிருந்தாவனக் கவியரங்கம்





முருகன்

முருகன் எங்கள் முதல் தெய்வம்
முறுவல் பூக்கும் நல் தெய்வம்
கருணை புரியும் தமிழ்த் தெய்வம்
கேட்டதை வழங்கும் அருள் தெய்வம்!

மயிலை வாகனம் கொண்டவனாம்
மலையினில் நின்று அருள்பவனாம்
பாவிகள் கூடப் பணிந்திட்டால்
பாசம் கொண்டு அருள்பவனாம்!

– பா. நா. நாகராஜன்,
நாகமங்கலம்.



சின்னத் தம்பி

சின்னத் தம்பி சின்னத் தம்பி
செல்லக் கண்ணு சின்னத் தம்பி
கண்ணைச் சிமிட்டும் சின்னத் தம்பி
கத்தி அழும் சின்னத் தம்பி

பாட்டி மடியில் குந்திக் கிட்டு
பாட்டுக் கேட்கும் சின்னத் தம்பி
அம்மா இடுப்பில் ஏறிக் கிட்டு
அழகாய் சோறு தின்னும் தம்பி

படிக்கும் போது கிட்ட வந்து
பணிவாய் வம்பு செய்யும் தம்பி!
படுக்கச் சொன்னால் ஓடியாடி
போக்குக் காட்டும் பொல்லாத் தம்பி!

– மா. கிருஷ்ணராஜ், மாத்தூர்.

வீடு



குடி இருக்க வீடு
கூடி வாழ வீடு
வீடு நல்ல வீடு
வசிக்க அதை தேடு

குடிசை கூரை வீடு
காரை மாடி வீடு
ஓடு போட்ட வீடு
உயர்ந்த கான்கிரீட் வீடு

ஏழை மக்கள் வீடு
அறிந்து கொள்வாய் ரோடு!
வாழத் தேவை வீடு
வேண்டும் ஒரு வீடு!

– எஸ். மைதீன், வடகரை.





நண்பர் எவருண்டு?

மரத்தைப் போல் உலகினிலே
மக்கள் நண்பன் யாருமிலை
தருமாம் எல்லா நலன்களையும்
தாய்போல் நம்மைக் காத்திடுமே!

அசுத்தக் காற்றை உறிஞ்சிடுமாம்
ஆக்சி ஜனைத் தந்திடுமாம்!
வீசிக் கிளைகளை அசைத்தசைத்து
வேண்டும் காற்றைத் தந்திடுமாம்

மண்ணில் ஈரம் காத்திடுமாம்
மண் அரிப்பைத் தடுத்திடுமாம்
விண்ணில் பறக்கும் பறவைக்கெல்லாம்
வசிக்க இடமும் தந்திடுமாம்

கனியும் காயும் தந்திடுமாம்
கூரை மேய்ந்திட உதவிடுமாம்
இனிதாய் மழையை அழைத்திடுமாம்
இதைப் போல் நண்பர் எவருண்டு?

– கு. ஸ்ரீராம் பாபு,
இராமசந்திரபுரம்.







மாணிக்கம்

நேரு மாமா என்பவர்
நேசம் மிக்க உத்தமர்
பாரதத்தின் பிரதமராய்
பார் புகழ ஆண்டவர்!

குழந்தை உள்ளம் கொண்டவர்
காந்தி வழி வந்தவர்
அழிக்க உலகை மிரட்டிய
அரக்கன் போரை வென்றவர்!

சிறுவர் நெஞ்சில் நித்தமும்
சிறந்து வாழும் சத்தியர்
மறுப்போர் உண்டோ உலகிலே
மாந்தர் போற்றும் மாணிக்கம்?

- ஈ. இராமநாதன்

மேரு

வெள்ளை உள்ளம் கொண்டவர்
விடுதலைக்கே உழைத்தவர்
கொள்ளைக் கார வெள்ளையர்
கொட்டம் அடக்கி வென்றவர்

நாடு போற்றும் நல்லவர்
நம்மை ஆண்ட வல்லவர்
வாடி நின்ற இந்தியர்
வாட்டம் நீங்கச் செய்தவர்

''பஞ்ச சீலம்'' கண்டவர்
பார தத்தை ஆண்டவர்
''நேரு'' என்னும் பெயரில் நம்
நெஞ்சில் நிற்கும் மேருவாம்!

- இளங்கோ சக்திவேலன்


சிலேட்டு!

சிலேட்டு நல்ல சிலேட்டு
சிறுவர் எழுதும் சிலேட்டு
பலப்பம் கொண்டு அழகாய்
பாலர் எழுதும் சிலேட்டு!

தப்புக் கணக்குப் போட்டால்
துடைத்து எழுத உதவும்.
அச்சு அச்சாய் எழுத
அழகாய் உதவும் சிலேட்டு!

கூட்டல் பெருக்கல் கழித்தல்
கோடி வரை எண்கள்
நீட்டி நீட்டி எழுத
நித்தம் உதவும் சிலேட்டு!

- ஏ.எல். சண்முகம்



பிருந்தாவனக் கவியரங்கம்



குதிக்குமாம்!

சிட்டுக் குருவி கூட்டிலே
சின்ன அழகு முட்டையாம்!
பட்டுச் சிறகில் மூடியே
பாது காக்கும் பெட்டையாம்!

மூடி விழியைப் போலவே
முட்டை அன்று திறந்தது
பாடிக் கொண்டே குருவியும்
பயமில் லாமல் திரிந்தது

பஞ்சுபோல சிறகை விரித்து
பார்க்கும் குஞ்சு அழகுதான்!
பிஞ்சு வாயைத் திறந்துமூடி
பேசும் அழகு கொள்ளைதான்!

அந்தி நேரம் ஆனதும்
அன்னை தன்னைத் தேடுமாம்!
வந்து தாயும் ஊட்டுமாம்
வெளியே வந்து குதிக்குமாம்!

- சு. அரவிந்தன், ஆற்காடு.



படித்தே உயரு!

நாளுக்கு மணியும் இருபத்தி நான்கு
நற்செயல் புரிந்திட பகலும் பாதி
களித்து ஆடிட அதிலும் பாதி
கணக்குப் போட்டால் ஆறே மீதி.

ஆறு மணிதான் அதுவே போதும்
அதிலே ஒழுங்காய் படித்தால் போதும்
மாறி நடந்தால் நடப்பது வேறு
மனதில் வைப்பாய் சொன்னேன் கேளு

இழந்த சொத்தை ஈட்டலாம் அறிவாய்
இருட்டும் ஓர்நாள் விடியும் அறிவாய்
கழிந்த நேரம் மீண்டும் வருமோ?
கவனம் வைத்தே படித்து உயரு!

- இரா. பிரபாகரன்,
பட்டுக்கோட்டை.



மீண்டும் விடுமுறை வந்திருமாம்!

பள்ளிக் கூடம் திறந்தாச்சு
பாடப் புத்தகம் வந்தாச்சு.
எல்லா வகுப்பும் நிறைந்தாச்சு
இன்று பாடமும் எடுத்தாச்சு

பாடத்தில் கவனம் வந்தாச்சு
படிக்கும் மூடும் வந்தாச்சு
இடக்குச் செய்யும் மாணவனை
ஒடுக்கப் பிரம்பும் வந்தாச்சு!

மீண்டும் விடுமுறை வந்திடுமாம்
மகிழ்வை அள்ளித் தந்திடுமாம்
ஆண்டுப் படிப்பை முடித்திடுவோம்
அதற்குப் பிறகு ஆடிடுவோம்!

- இரா. திலிப்



நீதானா?

இன்னும் சற்று நேரத்தில் ஒரு பெரிய அதிர்ச்சியை சந்திக்கப் போகிறோம் என்ற உண்மை அப்பொழுது முரளிக்குத் தெரியாது.

வேகமாக வகுப்புக்குள் நுழைந்தவன் கடைசி பெஞ்சின் ஓரத்தில் அமர்ந்தான். பைக்குள் கையை விட்டு ஆங்கிலப் புத்தகத்தை எடுத்து அக்கறையுடன் படிக்க ஆரம்பித்தான்.

''முரளி...''

திடீரெனக் கேட்ட குரலால் கவனம் கலைந்து பார்வையை உயர்த்தினான்.

மாதவன்! முரளியின் உயிர் நண்பன்.

''என்ன முரளி...! ஒரு வாரமா நீ ஸ்கூலுக்கு வரவே இல்லியே...? என்ன காரணம்?''

''என் அப்பாவுக்கு உடம்பு சரியில்லாம போயிடுச்சி. அதனால தான் வரமுடியலை. இந்த ஒரு வாரத்ல ஸ்கூல்ல ஏதாவது விசேஷம் உண்டா?''

ராஜன்

''விசேஷமா?'' என்று முகத்தைக் கருக்கிய மாதவன், அடுத்த நொடியில் பெரிதாக மலர்ந்தான்.

''நம்ப பழைய தலைமையாசிரியருக்கு மாற்றல் வந்துடுச்சி. அவருக்குப் பதிலா புதுசா ஒருத்தர் வந்திருக்கார்.''

பிரேயர் பெல் அடிக்க... மாணவர்கள் மைதானத்தை ஆக்கிரமிக்க ஆரம்பித்தனர்.

''அதோ... கறுப்புப் பேண்டும் வெள்ளை சர்ட்டும் போட்டிருக்காரே.... அவர்தான் புதுத் தலைமையாசிரியர்'' - கிசுகிசுப்பான குரலில் மாதவன் சொல்ல. ஆர்வத்தோடு பார்த்த முரளி, பெரிதாக அதிர்ந்தான்.

பாட வகுப்பு...

''உங்களுக்கு ஒரு முக்கிய விஷயம். இன்னும் ஒரு மாதத்தில் ஆண்டு விழா வருவது உங்களுக்குத் தெரியும். பத்தாம் வகுப்புப் படிக்கிற நீங்கதான்,

இந்தப் பள்ளியில் பெரிய மாணவர்கள். அதனால, இந்த விழாவைச் சிறப்பா நடத்த நீங்க என்னென்ன செய்ய ணும்னு சொல்ல இன்னும் கொஞ்ச நேரத்ல தலைமை ஆசிரியர் நம்ப வகுப் புக்கு நேராக வரப் போறார்,'' என்று வகுப்பு ஆசிரியர் சரவணன் சொன் னார்.


தலையில் இடி இறங்கியது போல இருந்தது முரளிக்கு. இதயத்தில் பய முரசு வேகமாக ஒலிக்க ஆரம்பித்து!

இப்பொழுது என்ன செய்வது? தலைமை ஆசிரியர் வருவதற்குள் வகுப் பறையை விட்டு வெளியே சென்று விட வேண்டும் என்ற எண்ணம் தோன்ற தயக்கமாக எழுந்து நின்றான்.

''சார்... கட்டுரை நோட்டை எடுத்து வரலே. அதைப் போய் எடுத்துக்கிட்டு வந்துவிடுகிறேன்.''

''ஆசிரியரின் முகத்தில் கோப ரேகைகள் கோலமிட்டன.''

''அதுக்கென்ன இப்ப அவசரம்? எச்.எம். வந்து போகட்டும். அப்புறம் போய் எடுத்துண்டு வா!'' - தளர்வாய் உட்கார்ந்தான் முரளி.



சற்று நேரத்தில் தலைமை ஆசிரியர் வகுப்புக்குள் நுழைய... எல்லோரும் எழுந்து நின்றனர்.

தலைமை ஆசிரியர் ஆண்டு விழா ஏற்பாடுகளைக் குறித்து மாணவர்களிடம் விளக்க ஆரம்பித்தார்.

முரளி பயத்துடன் அப்படியும் இப்படியும் நெளிந்து கொண்டிருந்தான். கூடியவரை தலைமையாசிரியரின் பார்வை தன்மேல் விழாது பார்த்து மறைந்து கொண்டான்.

ஒரு வழியாக தலைமை ஆசிரியர் எல்லாவற்றையும் சொல்லி முடித்து விட்டுப் போக எழுந்தவர் முரளியைப் பார்த்து விட்டார்.

அவர் முகம் மாறியது.

''ஓ... நீதானா? இந்த வகுப்பில தான் படிக்கிறியா! உன் பெயர் என்ன?''

''முரளி.''

''சரவணன்... ஒரு நிமிடம் என் கூட வாங்க'' என்று சொல்லிக் கொண்டே வகுப்பாசிரியரை அழைத்துக் கொண்டு சென்றார் தலைமை ஆசிரியர்.

எல்லா மாணவர்களின் முகங்களிலும் குழப்ப ரேகைகள்!

ஐந்து நிமிடம் பொறுத்து மீண்டும் வகுப்புக்குள் நுழைந்த ஆசிரியர், ''முரளி... உன்னை உடனே எச்.எம். வரச் சொன்னார்,'' என்று அவனைப் போகச் சொன்னார். அவன் எதிர்பார்த்ததுதான்.

கால்கள் தடுமாற, தலைமை ஆசிரியர் அறையை நோக்கி நடந்தான் முரளி.



தலைமை ஆசிரியர் அறை.

சுவர் ஓரங்களில் பெரிய பீரோக்கள். சுவரில் சிரிக்கும் காந்தியின் பெரிய போட்டோ. மேசையின் மேல் நிறைய பைல்கள். தலைமை ஆசிரியரின் தலைக்கு மேலே இருந்த மின் விசிறி சுழன்று கொண்டு இருந்தது.

''வா முரளி!''

தலைமை ஆசிரியர் சொன்னவுடன் முரளி, தடாலென்று கீழே விழுந்து அவருடைய கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

''சார்... என்னை மன்னிச்சிடுங்க. அன்னைக்கு என் அப்பாவுக்கு உடம்பு சரியில்லாம போயிட்டதால, அவருக்குப் பதிலா நான் சைக்கிள் ரிக்ஷா ஓட்டும்படி ஆச்சு. சத்தியமா நீங்கதான் எங்க புது தலைமை ஆசிரியர்'னு எனக்குத் தெரியாது. என் அப்பாவுக்கு மருந்து வாங்கணும்கற காரணத்துக்காக, உங்க கிட்ட கொஞ்சம் கண்டிஷனா பேசி, ஐந்து ரூபா வாங்கிட்டேன். என்னை மன்னிச்சிடுங்க சார். இனி மேல

சத்தியமா இந்த மாதிரி நடந்துக்க மாட்டேன்,'' - அழுது கொண்டே முரளி சொல்ல....


தலைமை ஆசிரியர் முரளியின் தோள்களைப் பிடித்து அவனை எழுப்பி நிறுத்தினார். அவர் கண்களில் கோபம் இல்லை. கருணைதான் பளிச்சிட்டது.

''முரளி... உன்னை இப்ப எதுக்குக் கூப்பிட்டேன்னு தெரியுமா? தண்டனை கொடுக்க இல்லை. பரிசு கொடுக்கத்தான்.''

முரளி ஒன்றும் புரியாது குழப்பத்தோடு அவரைப் பார்த்தான்.

''ஆமாம் முரளி... அன்னைக்கு என்கிட்ட கண்டிப்பா பேசி ஐந்து ரூபாய் வாங்கினப்ப உன் மேல எனக்கு நிறையக் கோபம் இருந்தது. ஆனா, நீ ஒரு மாணவன்னு அப்ப எனக்குத் தெரியாது. இன்னைக்கு உன்னை கிளாஸ்ல பாத்ததும் எனக்கு நிறைய அதிர்ச்சி. உன் ஆசிரியரைக் கூப்பிட்டு, உன்னைப் பற்றிக் கேட்டேன். நீதான் முதல் ரேங்க் வாங்கற பையன்னு சொன்னார். உன் மேல இருந்த கோபமெல்லாம் போயிடுச்சி. பெற்றோரின் கஷ்டத்தைப் பகிர்ந்து கொண்டு வேலை செஞ்சிகிட்டே படிக்கிற உன் மாதிரி மாணவர்கள்தான் இப்ப நம்ப நாட்டுக்குத் தேவை. சைக்கிள் ரிக்ஷா ஓட்றது கேவலம்னு நினைக்காதே. உழைச்சி பணம் சம்பாதிக்கிறது ரொம்பப் பெருமைப் பட வேண்டிய விஷயம். அதைச் செய்யற உன்னை இந்த ஆண்டின் சிறந்த மாணவனா தேர்வு பண்ணி, வர்ர ஆண்டு விழாவுல உனக்கு ஒரு கௌரவமான பரிசைக் கொடுக்கப் போறேன். உனக்கு வேற எந்த உதவி வேணும்னாலும் என்னைக் கேளு. நான் செய்யறேன்.''

முரளியின் உள்ளத்தில் மகிழ்ச்சி மத்தாப்புக்கள் பெரிதாகச் சீற ஆரம்பித்தன!



பிருந்தாவனம்





எப்படி இயற்றுவது?

★ ''சங்கீத மேதை மொசார்ட்டி டம் ஒரு இளைஞன் வந்தான். சிறந்த பாடல்களை எப்படி இயற்றுவது என்று கேட்டான். ''நீ சிறியவன். முதலில் எளிய பாடல்களை இயற்ற முயற்சி செய்!'' என்றார் மொசார்ட்டி.

''நீங்கள் மட்டும் பத்து வயதிலேயே சிறந்த பாடல்களை இயற்றவில் லையா?'' என்றான் சிறுவன்.

''ஆமாம். ஆனால் எப்படி இயற்று வது என்று நான் யாரிடமும் போய்க் கேட்டுக்கொண்டிருக்கவில்லையே என் றார் மொசார்ட்டி.''

- அ. முஸ்தபா, தக்கோலம்.

அடக்கம்



★ மேற்கு வங்கத்தில் ஒரு குக்கிரா மத்தில் ஒரு பண்டிதர் ஆணவத்துடன் சில கவிதை வரிகளைக் கூறி விட்டு 'உங்களுக்கு இதன் பொருள் தெரியுமா' என்று சுற்றியிருந்தவர்களிடம் கர்வத் துடன் கேட்டார். அவ்வூரில் இருந்த அறி ஞர்களுக்கும் கூட அதன் பொருள் தெரியவில்லை. உடனே அப் பண்டிதர், ''யாராவது இதன் பொருளைக் கூற முடியுமா?'' என்று மறுபடி கேட்டார் கர்வத்துடன். ஒரு தாடிக்காரர் ''என் னால் மு டி யு ம்'' என்று எழுந்து பொருள் கூறினார். திகைத்துப் போன

பண்டிதர் ''நீங்கள் யார்?'' என செருக்கு அடங்கியவராகக் கேட்டார்.

''நீங்கள் சொன்ன கவிதையின் சொந்தக்காரன் நான்தான். என் பெயர் இரவீந்தரநாத் தாகூர்'' எனக் கூறி அவர் அமைதியுடன் கூறினார்.

- எஸ். பாபுராஜ், சோழன் மாளிகை.



டிரான்ஸிஸ்ட் I.B. சோன்


★ கடலில் பயணம் செய்பவர்களுக்கு உதவும் பொருட்டு உலகின் முதல் கடல் ஆய்வுச் செயற்கைக் கோள் உருவாக்கப்பட்டது. இதன் பெயர் டிரான்ஸிஸ்ட் 1B. 1960ல் அமெரிக்காவால் அனுப்பப்பட்டது.

- ஜே. சித்ராங்கதன், தரங்கம்பாடி.



★ தற்போதைய நிலவரப்படி உலகிலேயே மிகப் பெரிய சிலை டென்மார்க் நாட்டில் உள்ள லீகோ சிலையாகும். 7.6 மீட்டர் உயரமுள்ள இந்த சிலை 1,50,000 செங்கற்களால் உருவாக்கப்பட்டதாகும் என்று கின்னஸ் புத்தகம் கூறுகிறது.


- ஜெ. சித்ரா, கீழையூர்.



மிகச் சிறிய கௌரவ ஆசிரியர்

★ பிரிட்டனிலிருந்து வெளிவரும் சன் பத்திரிகையின் ஒருநாள் கௌரவ ஆசிரியராக இலங்கையைச் சேர்ந்த கனேஷ்சிற்றம்பலம் என்ற 13 வயதுச் சிறுவன் நியமிக்கப்பட்டுள்ளான். இவன் ஒரு பி.எஸ்ஸி., பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது! இப் பத்திரிகையின் விற்பனை 35 லட்சம்.

- ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர்.



★ வாகனங்களின் முன்னும், பின்னும் பொருத்தப்பட்டுள்ள நம்பர் ப்ளேட்டுகளைக் கவனித்திருப்பீர்கள். எந்த நகரத்தில், எந்த மாவட்டத்தில் யாருடைய வாகனம் என்றெல்லாம் அறியவே இந்த ஏற்பாடு. ஆபத்து நிகழும் போது இதைக் கொண்டு எளிதில் அடையாளம் கண்டறியலாம். 1893-ல் பிரான்சில்தான் முதன் முதலில்

நம்பர் ப்ளேட்டுகள் இருக்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்பட்டது. ஆனால் அவற்றில் நம்பர் எழுதப்படவில்லை. மாறாக, காரின் உரிமையாளர் பெயர், விலாசம் போன்ற விவரங்களை எழுதி வைப்பதுதான் வாடிக்கையாக இருந்தது.

- அ. நிம்ஷா, மொரப்பூர்.



நாய்களுக்கும் ஒரு நகைகடை

★ மனிதர்களுக்கு நகைக் கடை இருப்பது போல் நாய்களுக்கும், பூனைகளுக்கும் கூட சிறிய ஊராக இருந்தாலும் சரி நகைக் கடை இருப்பது அமெரிக்காவில் சகஜம். கழுத்தில் மாட்டிக் கொள்ளும் சாதாரண டாலர் முதற்கொண்டு பெரிய வைர நகைகள் வரை இக் கடைகளில் உண்டு. அனைத்தும் நாய்களுக்கே.


- அ. முஸ்தபா, தக்கோலம்.



ஞாபக சக்தி மன்னர்!

★★ பிரெஞ்சு நாட்டின் மறைந்த ஜனாதிபதி டிகாலேக்கு அபாரமான ஞாபக சக்தி உண்டு. விக்டர் ஹியூகோ நாவலில் ஆயிரக்கணக்கான பக்கங்களை பார்க்காமல் சொல்லுவார் டிகாலே.

- தேனி முருகன், தேனி.



★ நல்ல புத்தகங்களைக் குறைந்த விலையில் தயார் செய்து விநியோகிக்கும் புத்தகப் பதிப்பாளர்களுக்கு யுனெஸ்கோ ஆண்டுதோறும் வழங்கும் விருது, 'சர்வதேசப் புத்தக விருது', இந்த விருதை ஆசிய நாடுகளில் முதன் முதலாகப் பெற்றவர் ஷோச்சிநோம் என்ற ஜப்பானியப் பதிப்பாளர். இது சென்ற ஆண்டுக்கானது.

- வி. பாலாஜி, பண்ருட்டி.



★ துணுக்குச் செய்திகளைக் கொண்டு 'அணு' என்ற 'தபால் அட்டை மாத' இதழ் சிவகங்கையிலிருந்து வெளிவருகிறது. இவ்விதழில் துணுக்குச் செய்திகளோடு வாசகர் கடிதம் (எதிரலை), போட்டி, விளம்பரம் ஆகியவையும் உண்டு. இந்தியாவின் சாதனைகளை வெளியிடும் ""LIMCA BOOK OF RECORDS - 1992" நூலில் இது சிறந்த புதுமைப் பத்திரிகை என்ற சிறப்புக்குரியதாக இடம்பெற்றுள்ளது. இந்த இதழ் சந்தாதாரர்களுக்கு மட்டுமே அனுப்பப்படுகிறது. வருட சந்தா ரூ. 10/- மட்டுமே.

- தா. சிந்துகுமார், திருவட்டார்.



கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர். கு. கணேசன்

இரா.ப. ஜெயகிருஷ்ணன், திருவாரூர்.

? இரத்த வங்கிகளில் இரத்தத்தை நீண்ட நாட்களுக்குக் கெடாமல் எப்படிப் பாதுகாக்கிறார்கள்?

! முதலில் இரத்தத்தை 'A.C.D' எனும் பாதுகாப்புத் திரவத்தில் சேகரிக்கிறார்கள்.. இத் திரவம் இரத்தம் உறையாமல் திரவ நிலையிலேயே இருக்கும்படி பார்த்துக் கொள்கிறது. மேலும் இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்கள் உயிரோடு இருக்கவும் இது உதவுகிறது. இத்திரவம் கலந்த இரத்தத்தை இரத்த வங்கிகளில், குளிர்சாதனப் பெட்டி (Refrigerator)யில், +4 செண்டிகிரேட் குளிர்ச்சியில் வைத்துப் பாதுகாக்கிறார்கள். இவ்வாறு பாதுகாக்கப்படும் இரத்தம் மூன்று வாரங்களுக்கு மட்டுமே கெடாமல் இருக்கும். அதற்குள் அதைப் பயன்படுத்திவிட வேண்டும். இல்லையேல் அது கெட்டுவிடும்.



ந.ஜெ. வெங்கடேஷ், திருவொற்றியூர்.

? பல்லில்தான் உணர்ச்சி மொட்டுகள் இல்லையே.... பிறகு ஏன் டாக்டர் புளி, மாங்காய் சாப்பிட்டால் பல்லில் கூச்சம் ஏற்படுகிறது?

! பல்லின் வேர், ஈறுகளில் புதைந்திருப்பதை நீ அறிவாய்தானே, வெங்கடேஷ்! அங்குதான் பல்லுக்குத் தேவையான சத்துக்களைக் கொண்டு வரும் இரத்தக் குழாய்களும், வலியை உணர்த்தக் கூடிய நரம்புகளும் இருக்கின்றன. இவை பல்லில் சொத்தை விழும் போதும், பல் ஈறுகள் சிதைவடையும் போதும் உணவுடன் நேரடியாகத் தொடர்பு கொள்கின்றன. அதனால் தான் பல் கூச்சம், பல்வலி உண்டாகின்றன. புளி, மாங்காயில் அமிலம் கலந்துள்ளதால், அவை பல் எனாமலை எளிதாக அரித்து, வேர்ப்பகுதியிலிருக்கும் நரம்புகளைத் தூண்டி, பல் கூச்




சத்தை ஏற்படுத்துகிறது. புரிந்ததா, வெங்கடேஷ்?

வீ. கவிதா, முடிகொண்டான்.

? விஷம் குடித்து இறந்தவரின் கண்ணை மற்றவர்களுக்குப் பொருத்தலாமா, டாக்டர்?

! பொருத்தலாமே! கண் தானத்தால் பெறப்படும் முழுக் கண்ணையும் மற்ற வர்களுக்குப் பொருத்துவதில்லை. கண்ணில் இருக்கும் 'கார்னியா' (Cornea) எனும் கருவிழியை மட்டுமே பொருத்துவார்கள். கருவிழியில் இரத்த




நாளங்களோ, நரம்புகளோ இல்லை என்பதை நீ அறிவாய். எனவே, விஷம் குடித்து இறந்தவரானாலும் அவருடைய கருவிழிக்கு விஷம் செல்லும் வாய்ப்பில்லை. மேலும் விஷத்தால் கருவிழி பாதிக்கப்பட்டிருக்குமோ எனும் அச்சத்திற்கும் இடமில்லை. ஆகவே, அவருடைய கருவிழியை தாராளமாக மற்றொருவருக்குப் பொருத்தலாம்!

ந. ரஜினி நரேஷ், குமராட்சி.

? தடுப்பு ஊசி போடுவது நல்லதா, டாக்டர்?

! இதிலென்ன சந்தேகம், தம்பி? மனிதர்களுக்கு வரும் பெரும்பாலான தொற்று



நோய்களைத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்வதின் மூலம் நோய் வருமுன்னரே தடுத்து விடலாமே! தடுப்பு ஊசி நமக்கு என்னவெல்லாம் நன்மைகளைச் செய்கிறது தெரியுமா? உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்கிறது. நோய்க்கிருமிகளை எதிர்த்துப் போராடும் நோய் எதிர் அணுக்களை நம் இரத்தத்தில் ஏராளமாக உற்பத்தி செய்கிறது. இதனால் உடம்புக்குள் நுழையும் கிருமிகள் செயலிழந்து வெளியேறி விடுகின்றன. நோய்கள் நம்மை அண்டுவதற்கு அஞ்சுகின்றன. காசநோய், கக்குவான் இருமல், இசிவு-நோய், இளம்பிள்ளை வாதம், அம்மைக்கட்டு, மணல்வாரி அம்மை, தொண்டை அடைப்பான், காலரா, டைபாய்டு, வெறி நாய்க்கடி நோய் போன்ற பல நோய்களை தடுப்பு ஊசி மூலம் முற்றிலும் தடுத்து விடலாம்! இவ்வளவு ஏன், எட்வர்ட் ஜென்னர் கண்டுபிடித்த தடுப்பு ஊசி மூலம் உயிரை மாய்க்கும் 'பெரிய அம்மை' நோயை உலகம் முழுவதும் ஒழித்து விடவில்லையா? முறையாகத் தடுப்பு ஊசி போட்டுக் கொண்டால் நோய் நொடியின்றி ஆரோக்கியமாக வாழலாம், தம்பி. புரிந்து கொள்.

அ. திருமுருகன், செஞ்சி.

? பிளேடு அல்லது கத்தியால் அறுபட்ட இடத்தில் ஒழுகும் இரத்தத்தை உறிஞ்சுவது நல்லதா? இதனால் இழந்த இரத்தத்தை மீண்டும் பெற இயலுமா?

! ஒழுகும் இரத்தத்தை உறிஞ்சுவதால் இழந்த இரத்தத்தை மீண்டும் பெற இய





செத்துப்போன கோழிக்குஞ்சு!

'நேருஜி' நகைச்சுவை உணர்வுமிக்கவர் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

விருந்து ஒன்று பிரதமரின் இல்லத்தில் நடந்து கொண்டிருந்தது. விருந்தாளிகள் வெகு வேகமாக அள்ளி அள்ளி உண்டார்கள்.

அதில் ஒருவர் விருந்து பரிமாறும் பெரிய பாத்திரத்தில் இருந்து, கோழிக் குஞ்சுக் கறியை வேக வேகமாக எடுத்துத் தன் தட்டில் வைத்துக் கொண்டு உண்ண முனைந்தார்.

நேருஜி அவரது முதுகில் தட்டி கோழிக் குஞ்சுகளெல்லாம் செத்துப் போனவை தான், அவற்றால் ஓட முடியாது மெது வாகவே எடுத்து, வைத்துக் கொள்ள லாம்'' எனக் கூற, விருந்தாளி முகத்தில் எத்தனை லிட்டர் வழிந்திருக்கும் என ஊகித்துக் கொள்ளுங்களேன்.

– விளாங்குப்பம் வி.எம். பாரதி. மிட்டூர்.



சிறப்புக்குக் காரணம்!

நேருஜி பாரதப் பிரதமராகப் பொறுப்பேற்றவுடன் தனக்கு இங்கிலாந்தில் பாடம் சொல்லிக் கொடுத்த பேராசிரியர் ஹேரால்டு லாஸ்கிக்கு கடிதம் எழுதினார், ''நீங்கள் திறமையாகப் பாடம் சொல்லிக் கொடுத்ததால்தான் எனக்குச் சிறப்பு கிடைத்தது என்பதை உணர்கிறேன். அதற்காக நன்றி செலுத்தவும் விரும்புகிறேன்'' என எழுதினார். அதற்கு ஹேரால்டு லாஸ்கி ''நான் சொல்லிக் கொடுத்ததால் தான் உங்களுக்கு இவ்வளவு பெரிய பதவி கிடைத்தது என்று என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. நீங்கள் திறமையாகக் கற்றுக் கொண்டதால்தான் வாழ்க்கையில் உங்களுக்கு இத்தகைய உயர்வு கிடைத்திருக்கிறது என்று பதில் அனுப்பினார் ஆசிரியர்.

- சுகாராஜ், மதுரை -2

லாது. அவ்வாறு உறிஞ்சுவதும் நல்லதில்லை! உமிழ்நீரிலோ, நாக்கிலோ, பல்ஈறு அல்லது பல் சொத்தையிலோ கிருமிகள் இருந்தால், அவை அறுபட்ட இடத்தில் சீழ் பிடிக்க வைக்கும். வம்பை விலைக்கு வாங்குவானேன்? அறுபட்ட இடத்தை உடனடியாக ஒரு சுத்தமான ஈரத்துணியால் அழுத்தமாகக் கட்டுப் போட்டு விட்டால் ஆயிற்று!

ஜெ. நெடுமாறன், குடியாத்தம்.

? அடிக்கடி சோப்புகளை மாற்றுவதால் தோல் நோய் வருமா, டாக்டர்?



! வரலாம், நெடுமாறன். சோப்பிலிருக்கும் ரசாயனப் பொருட்கள் சோப்புக்கு சோப்பு மாறுபடுகிறது. இதனால் ஒவ்வாமை (Allergy) காரணமாக அடிக்கடி சோப்புகள் மாற்றும்போது தோல் நோய் வர வாய்ப்பிருக்கிறது.

கேள்வி கேட்போர் கவனத்திற்கு...

கேட்கட்டுமா டாக்டர் பகுதியில் கேள்வி கேட்க விரும்புவோர் தங்கள் முழு முகவரியையும் தர வேண்டும். ஒரு கடிதத்தில் ஒரே ஓர் கேள்வியை மட்டுமே கேட்கலாம். கேட்ட கேள்விகளையே மீண்டும் மீண்டும்; கேட்காதீர்கள். கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி: ஆசிரியர் கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் பொம்மை வீடு கட்டிடுவீர். ஃபர்னிச்சர்கள் போட்டிடுவீர். கைக்கடக்கமாய் மெத்தெனப் பஞ்சடைத்த மிருக பொம்மைகள், பயமுறுத்தும் முகமூடிகள், மரப் பாச்சிகள்.... மரம், காகிதம், கார்டுபோர்டு, துணிகள் இவற்றின் துணையுடனே...

உங்கள் கற்பனையே வேடிக்கைக்கு எல்லை! உங்கள் ஓய்வு வேளையை உல்லாசமாய்க் கழித்திடச் சிறந்த வழி.


VAMICOL®


ஆர்ட் அண்டு கிராஃப்ட் அட்ஹெஸிவ்



வேம் ஆர்கானிக்
கெமிக்கல்ஸ் லிமிடெட்
ஸ்கைலார்க் ஹௌஸ், 85, நேரு பிளேஸ், புது தில்லி-110 019.







இன்று மட்டும் போதுமா?




பூவாக கொட்டுதுபார் மத்தாப்பு கோலம்
புஸ்வாணம் போகுதுபார் வானிலொரு பாலம்
பாவாக பொங்குதுபார் பாம்புவெடி நீளம்
பட்டென்று கேட்குதுபார் பொட்டுவெடி தாளம்!

சாமிபடம் போட்டவெடி சக்கரமாய் சுற்றுதே
சர்ரென்று ராக்கெட்வெடி விண்முகட்டை எட்டுதே
பூமியதிர புல்லட்வெடி திக்குகளை தட்டுதே
புத்தம்புது பட்டாசு வீதியெங்கும் கத்துதே!

இன்றுமட்டும் தீபாவளி கொண்டாட போதுமா
இன்பமான தீபாவளி விட்டுவிட தோணுமா!
நன்மைதரும் சுற்றுப்புறம் மாசுபட வேணுமா
நல்லதுதான் இன்றுமட்டும் தீபாவளி போதுமா?

- கதி. கதிர்வேலன்.





தீபம் போல் ஒளிரணும்!


விடியலிலே எழுந்திருக்கப் பார்க்கணும் - பின்பு
வெந்நீரில் தலைதேய்த்து முழுகணும்!
துடிப்பாக மனக்குள் இருக்கணும் - பலவும்
தூய்மையோடு இறைவனுக்கு படைக்கணும்!

புத்தாடை நாமெல்லாம் போடணும் - பகிர்ந்து
புதுவகையாம் பலகாரம் சுவைக்கணும்!
மத்தாப்பு, பட்டாசு கொளுத்தணும் - அப்போ
மகிழ்வோடு கவனமாக நடக்கணும்!

துணியெல்லாம் மனக்காட்டும் தூய்மையாய் - வந்த
துயரமெல்லாம் பட்டாசாய்ச் சிதறணும்!
பிணியின்றி நாமெல்லாம் திகழணும் - எங்கும்
பெருமையாய் தீபம்போல் ஒளிரணும்!

இன்றுபோல் என்றும்நாம் மகிழ்ச்சியாய் - ஊரில்
எல்லோரும் ஒற்றுமையாய் இருக்கணும்!
நன்றுசொல்ல வந்ததுதான் பண்டிகை - நாமும்
நன்மை செய்து வழிதொடர்ந்து காக்கணும்!

- வலங்கைமான் நூர்தீன்



அழகுராஜா நான்தான்!



யோகநாதனுக்கு, நினைக்க நினைக்க வேதனையாய் இருந்தது!

அம்மை வடு நிறைந்து, சில்லுசில்லாகக் காட்சி தரும் முகம். அடர்ந்த கறுப்பு நிறம். வற்றல் கொத்தவரை மாதிரி, ஒல்லியான உடம்பு. 'இப்படி என் உருவம் அமைய நான் என்ன பாவம் செய்தேன்?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

வகுப்பில் பையன்கள் யோகநாதனிடம் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. அவர்களின் கேலி நிறைந்த பார்வை அவனைச் சுட்டெரித்தது!

அன்று -

''பனம்பழம் என்ன நிறம் தெரியுமா, பன்னீர்செல்வம்?'' - யதார்த்தமாகக் கேட்பது போல் நெடுமாறன் கேட்டான்.

''தெரியாதே நெடுமாறா!''

''சோறு சமைக்கிற பானையைப் பார்த்ததில்லையோ நீ? அதன் அடிபாகம் எப்படி இருக்கும்?''

''அட்டைக் கரி படிஞ்சு போய்க் கன்னங்கரேல்னு இருக்கும்!''

''அந்த நிறம் இங்க யாருக்கு இருக்கு, சொல் பார்ப்போம்!''

நெடுமாறன் இப்படிச் சொன்னதும், பன்னீர்செல்வம் மட்டுமல்ல, மாணவர் அத்தனை பேரும் யோகநாதனைப் பார்த்து 'கொல்'லென்று சிரித்தனர்.

தாங்க இயலாத அவமானத்தினால் தலைகுனிந்தான் யோகநாதன்.

மாணவரின் சிரிப்புச் சப்தத்தைக் கேட்டபடியே உள்ளே நுழைந்தார் ஆசிரியர் திருநாவுக்கரசு.

''எதுக்காக இந்தச் சிரிப்பு?'' - காரணத்தை வினவினார் அவர்.

மாணவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துத் திருதிருவென்று விழித்தனரே தவிர, ஒருவனாவது பதில் சொல்லவில்லை.

யோகநாதனின் வாடிய முகத்தின் மீது ஆசிரியரின் பார்வை படிந்தது. விஷயம் அவருக்கு ஓரளவு விளங்கியது.

''யோகநாதா, என்ன நடந்தது?''

ஆசிரியரிடம் நடந்ததைச் சொன்னான் யோகநாதன்.

''உலகத்தில் எல்லாரும் ஒரே மாதிரிப் பிறந்து விடுவதில்லை. உருவத்திலும், குணத்திலும் ஒவ்வொருவனும் மாறுபட்டுத்தான் பிறக்கிறான். சிலர் சிவப்பாக இருப்பார்கள். சிலர் கறுப்பாக இருப்பார்கள். மற்றும் சிலர் மாநிறமாகக் காணப்படுவார்கள். சிலருக்குக் கண்ணைப் பறிக்கிற மாதிரி வெளி அழகு இருக்கும். சிலருக்கு மனதைக் கவர்வது போல உள் அழகு - அதாவது குண அழகு அல்லது அறிவழகு இருக்கும். ஒருவனுக்கு ஒரு குறை இருந்தால், அதை ஈடுசெய்கிற மாதிரி அபாரமான திறமை ஒண்ணு அவனிடம் இருந்தே தீரும். ஆனால் புறத் தோற்றத்தை வைத்து ஒருவனை எடை போடுவது மதிகெட்ட செயல். இதைப் புரிந்து கொண்டு, அனைவரும் ஒற்றுமையாக -

புவனை கலைச்செழியன்



உள்ளம் கலந்து - ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல வாழக் கற்றுக் கொள்வதுதான் கல்வியின் பயன்!''

வகுப்பு முழுவதும் ஆசிரியர் சொன்னதை அமைதியுடன் கேட்டது.

''யோகநாதா! மற்ற பிள்ளைகள் உன்னைக் கேவலப்படுத்தி விட்டதற்காக, அவர்களுடைய சார்பில் நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சம்பவத்தை நீ பொருட்படுத்தாதே! அவர்களை மன்னித்து விடு'' என்றார் ஆசிரியர்.

''அவர்களே தப்பை உணர்ந்து திருந்தினால், அதுவே எனக்குப் போதும், சார்!'' - யோகநாதனின் பதிலில் பெருந் தன்மை பிரதிபலித்தது.

''யோகநாதா! நான் ஒரு விஷயம் சொல்வேன். ஆனால், நீ ஆத்திரப்படக் கூடாது. 'நான் அழகில்லாமல் பிறந்து விட்டேன்' என்று நொந்து கொள்வதற்குப் பதிலாக, 'எந்தவிதத்தில், நான் சிறப்பாகப் பயன்பட்டுப் புகழ் அடையலாம்' என்று நீயும் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். உனக்கு என்று அபூர்வத் திறமை ஏதாவது இருக்கிறதா என்று கண்டு பிடி.... உன்னிடம் ஏதாவது ஓர்

தனித்திறமை இருந்தே தீரும். அது என்ன என்பதைக் கண்டுபிடிக்கப் பார்!''

ஆசிரியர் கூறி முடிக்கவில்லை,

''எல்லோரும் என்னை - என் தோற்றத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்து சிரிக்கும்படி நான் பயன்பட்டதை உணர்ந்து இப்போது பெருமைப்படுகிறேன் சார்! இன்னும் நான் சிறப்பான முறையில் உபயோகப்பட முடியுமோ என்று பார்க்க முயல்கிறேன், சார்!'' என்றான் யோகநாதன் பெருமிதத்துடன்.

உண்மையில் இப்போது அவனது வருத்தம் காணாமல் போய் விட்டிருந்தது.

ஆசிரியர் மற்ற மாணவர்களை நோக்கினார்.

''யோகநாதன் அம்மைத் தழும்பு முகத்துடன் அழகின்றி இருப்பதற்காக அவனைக் கேலி செய்தீர்கள். அது அவனுக்கு வேதனை தந்தது. ஆனால், இப்போது அந்த வேதனை, அவனைப் புடமிட்ட பொன்னாக்கும் சோதனையாய் மாறி விட்டது. தன் உருவம் உங்களின் சிரிப்புக்குக் காரணமாகும் அளவு தான் பயன்பட்டிருப்பதை நினைத்துப் பெருமைப்படுகிறான். பண்பு அவனைப் பக்குவப்படுத்தி விட்டது'' என்றார்.

''இந்த விஷயத்தை இதோடு விட்டு விடலாம், சார்!''

யோகநாதனின் சொற்கள் விவகாரத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க, ஆசிரியர் பாடத்தைத் தொடங்கினார்.

அன்று, பள்ளி ஆண்டு விழா.


விழாவில் பல நிகழ்ச்சிகள். கடைசியாக ஒரு நாடகம்.

நாடகத்தில் கோமாளி வேஷம் யோகநாதனுக்கு!

குச்சி மாதிரி உடல்வாகு. புள்ளி புள்ளியாக முகம். தீய்ந்த கறுப்பு. இத்தனையும் கன கச்சிதமாகக் கோமாளி வேஷத்திற்குப் பொருந்தியிருந்தன.

''நான்தாங்க அழகு ராஜா!'' என்று யோகநாதன் தன்னை மேடையில் அறிமுகப்படுத்திக் கொண்ட போது, கூடியிருந்த அத்தனை பேரும் இடி இடித்த மாதிரி வாய் விட்டுச் சிரித்தனர்.

''அதிலே பாருங்கோ... கதாநாயகனாக வர்றதுக்கு அழகான பிள்ளைகள் நிறைய பேர் கிடைப்பாங்கோ. ஆனா, கோமாளியா வேஷம் கட்ட என்னைப் போல ஆள் கிடைக்கிறதுதாங்க ரொம்ப அபூர்வம்! நான் என்னை அழகு ராஜான்னு சொல்லிக்கிட்டதும், நீங்க





ளெல்லாம் எப்பிடி சிரிச்சீங்க! இப்பிடி உங்களைக் கவலை மறந்து களிக்க வைக்கிறதுதாங்க என்னோட லட்சியம்'' - இவ்வாறு சொன்னதோடு மட்டுமின்றி, நாடகம் முழுவதும் வேடிக்கையாகப் பேசி, தன் உடம்பை முறுக்கித் திருப்பி, முகத்தால் கோணங்கி வேலை காட்டி, அவையோரை மேன்மேலும் சிரிக்க வைத்தான்.

ஆசிரியர் திருநாவுக்கரசு மகிழ்ச்சிக் கடலில் மிதந்தார். 'அழகற்றவன் என்று கேலி செய்தீர்களே அந்த யோகநாதனைப் பற்றி இப்போது என்ன நினைக்கிறீர்கள்?' என்று தன் வகுப்பு மாணவர்களைக் கேட்கிற மாதிரி இருந்தது அவரது பார்வை!

விழாவுக்குத் தலைமைவகித்தவர் பிரபல திரைப்பட இயக்குநர் சசிதர். யோகநாதனின் நடிப்பில் தன் மனத்தைப் பறிகொடுத்த அவர், நாடகம் முடிந்ததும் பேசினார்.

''நான் எத்தனையோ படங்களை இயக்கியிருக்கிறேன். பல நகைச்சுவை நடிகர்களையும் உருவாக்கியிருக்கிறேன். ஆனால், தொழில் நடிகர்களான அவர்களை விட, முதன் முதலாக மேடையேறி, சபைக் கூச்சம் எதுவுமில்லாமல், அனாயாசமாக நடித்த இந்தத் தம்பி யோகநாதன் என்னை அதிகமாகக் கவர்ந்து விட்டான்! அவனை என்னுடைய திரைப்பட நிறுவனத்தில் சேர்த்துக் கொள்ளப் போகிறேன். அவனை வைத்து முழு நீள சிரிப்புப் படம் ஒன்று தயாரிக்கத் திட்டம் வகுத்து விட்டேன். அதுவும் அவனது படிப்புக் கெடாதபடி! அவனோட கல்விக்கான செலவு முழுவதையும் நானே ஏற்கிறேன்.''

தன் பேச்சை முடித்து, நடிப்பிற்காகப் பரிசுத் தொகை நூறு ரூபாயை யோகநாதனுக்கு வழங்கினார் இயக்குநர். ''இந்தத் தம்பி தன்னைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறும்படி அனைவர் சார்பிலும் கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

ஊசி விழுந்தால் ஓசை கேட்கும் அளவுக்கு அமைதியாக இருந்த மாணவர், பெற்றோர், ஆசிரியர் அடங்கிய கூட்டத்தைப் புன்னகை தவழ நோக்கினான் யோகநாதன்.


''நான் இன்று இந்தச் சிறப்பை அடைய முழு முதல் காரணமாக விளங்கியவர் மதிப்பிற்குரிய என் ஆசிரியப் பெருமான் அவர்களே ஆவார். என் கோர உருவம் மற்றவர்களின் பரிகாசத்திற்கு இடமாய் இருப்பதை அறிந்து, மனம் நொந்து வாடிப் போன என்னை, அந்த உருவத்தாலும் உபயோகம் உண்டு என்று ஊக்கப்படுத்திய தெய்வம் அவர். என்னுள்ளே மறைந்திருந்த நகைச்சுவை உணர்வைத் தூண்டி விட்ட பேரறிவாளர் அவர். குறையையே, சாமர்த்தியத்தால் நிறைவாக மாற்றிக் காட்டி மகிழ்ச்சியைத் தரவும், பெறவும் முடியும் என்பதை அவர் அறிவுரை மூலம் அறிந்து கொண்ட பாக்கியசாலி நான்!''

வார்த்தைகளை முடித்த அவன், மேடையிலிருந்த திருநாவுக்கரசின் கால்களில் விழுந்து வணங்கினான்.

களிப்புடன் கண்ணீர் சிந்தினார் திருநாவுக்கரசு.

'யோகேஷ்' என்ற இளம் சிரிப்பு நடிகனை நீங்கள் இப்போது திரைப் படங்களில் பார்க்கிறீர்களே, அவன் வேறு யாருமல்ல; யோகநாதன்தான்!

திட்டியது பலித்தால்..!



கருத்து : கே. சோமசேகர்


ஐந்தும் நாலும் எட்டுங்க நாலே யாரவன்
“என்னோட ஒன்னுவிட்ட தம்பி....!”
கதை, கட்டுரை இல்லாது வரும் பத்திரிகை எது?
கல்யாணப் பத்திரிகை
எந்த ஸ்டேஷனில் ரயில் நிற்காது?
போலீஸ் ஸ்டேஷன்ல
“இனிஷியல்” உடைய நாய் எது?
ஓ, நாய்
காகம் ஏன் நீரில் மூழ்குவதில்லை?
அதுதான் கரையுமே, சார்!
சிரிப்பு...
கருத்து: நெல்லை மணியன்
செ


பாம்புத் தலை அரக்கி


கதை - குமரன்


படம் - (கையொப்பம்)





செம்படவன் தாயையும், மகனையும் தன் குடிசைக்கு அழைத்துப் போய்...
நீங்க இங்கே தங்கலாம்...
நாளடைவில் பெர்ஸியஸ் வளர்ந்து...
பெர்ஸி-யஸ் எவ்வளவு அழகு!
கம்பீரம்!
மகா வீரனும் கூட!
பெர்ஸியஸின் புகழ் அந்தத் தீவின் அர-சன் காதுக்கு எட்ட...
என்னை விடப் புகழ் பெற்ற இவனை வாழ விடுவதா?
அரசன் பாலிடெக்டஸ் பொறாமை கொண்டு...
பெர்ஸியஸ்! உனக்கும் உன் தாயாருக்கும் இந்தத் தீவு அடைக்-கலம் தந்தது. இதன் மன்னனாகிய எனக்கு நீ நன்றி செலுத்த வேண்-டாமா?
காத்திருக்கி-றேன் பிரபு...
அப்படியானால் அரக்கி மெடூஸா-வின் தலையைக் கொண்டு வா!



ஒழிந்தான் பெர்ஸியஸ்!
மன்னன் கட்டளைப்படி பெர்ஸியஸ் புறப்பட...
அரக்கி மெடுஸாவின் தலை முடியெல்லாம் பாம்பு!
பாவம், பாம்பு கடித்துச் செத்து விடுவான்...
அது கூட வேண்டாம். மெடுஸாவின் முகத்தைப் பார்த்தாலே போதும், சிலையாகி விடுவான்!
கேட்கக் கேட்க பெர்ஸியஸுக்குக் கவலை...
அம்மாவிடம் சொன்னால், போக அனுமதிக்க மாட்டாளே... கவலைப் படுவாளே...
பெர்ஸியஸின் வளர்ப்புத் தந்தை...
படகு தருகி-றேன்... ஒரு நாள் பயணத்தில், அதோ, அந்த மலை அடிவாரத்-துக்குப் போ... குகைக்-கிலிவர் உனக்கு உதவு-வான். உன் வீரத்தைக் காட்டு!
தாயாரிடம் சொல்லிக் கொள்ளா-மலேயே புறப்பட்டு விட்டான் பெர்ஸியஸ்...
நான் உன் தாயைச் சமாதானப் படுத்துகிறேன், போய் வா!



வளர்ப்புத்தந்தை சொன்னபடி மலை அடிவாரத்தில் யோசனையாக அமர...
பெர்சியஸ்! ஏன் வருத்தமா இருக்கே?
யார் நீ?
என்னைக் குவிக்ஸில்வர் என்பார்கள்...
அப்பா உன்னைப் பத்திச் சொன்னார். நீ நல்லவர்களுக்கு உதவுவாயாமே?
அதுக்குத்தானே வந்திருக்கேன்!
நான் சிலையாகி விட்டால் என் அம்மா வருத்தப் படுவா!
நானும் என் அக்காவும் இருக்கும் போது கவலை வேண்டாம்...
அப்ப, புறப்படலாமா?
அதுக்கு முன்னால உன் கேடயத்துக்கு மெருகேற்றி கண்ணாடி மாதிரி பளபளப்பாக்கு!
பெர்ஸியஸ் சொன்னபடி செய்தான்...
சமர்த்து! இந்தா உன் கத்தியை என்னிடம் கொடு! இதை வைச்சுக்கோ... இது இரும்பைக் கூட வெண்ணெய் போல வெட்டும்!


இப்ப பாம்புத் தலை அரக்கிகளைத் தேடிப் போவோமா?
அதுக்கு முன்னாடி மூன்று ஒற்றைக் கண் கிழவிகளைப் பார்க்கணும்...
யார் அவங்க?
மூணு பேருக்கும் சேர்த்து ஒரே கண்தான். அதைத்தான் மாற்றி மாற்றி நெற்றியில பொருத்திப் -பாங்க!
ஆச்சரியமா இருக்கே!
அவங்கதான் நமக்கு வழி காட்ட முடியும்... கிளம்பு!
அவங்க இரவிலோ பகலிலோ கண்ணுக்குத் தெரிய மாட்டாங்க... மாலை மயங்கப் போகுது. இதுதான் சரியான சமயம்; சீக்கிரம்!
குயிக் சில்வர்! உன்னை நம்பறேன். ஆனா, உன்னைப் போல் வேகமா என்னால் வர முடியாது. உனக்குக் காலிலயும் தலை-யிலும் இறக்கைகள் இருக்கே!



அப்ப இந்தா, இது உனக்கு வேகமாகப் பறக்க உதவும்!
அந்தத் தடி, களைப்பின்றி பறக்க உதவ...
இதோ வந்துட்டோம்; ஜாக்கிரதை! கிழவிங்க உன்னைப் பார்த்துட்டா உஷாராயிடுவாங்க!
மறைந்திருந்து பார்க்க...
தெரியுறாங்களா...?
ஆமா, இப்ப நான் என்ன செய்யணும்?
குறிப்பிட்ட நேரமானதும் ஒரு கிழவி கண்ணைக் கழற்றி இன்னொருத்திக்கிட்டக் கொடுப்பா. அந்தச் சமயத்தில்...
அதன்படி...
அடியே, கோரமா- கணை? உன் கிட்ட பிடிச்சிருக்கியே!
ஆமா! எனக்கும் பார்க்க வேணாமா? கண்ணைக் கழற்றிக் கொடு!
இந்தா!


மூவருக்கும் பார்வையற்று இருந்த அந்தக் கணத்தில், பெர்ஸியஸ் பாய்ந்து...
விஷ்க்
இப்பத்தான் எடுத்துக்கிட்டியே!
அடியே... கண்ணைக் கொடுடி! எத்தனை நேரம்?
இல்லையே!
நானும் எடுக்கலை!
கிழவிகளா! உங்க மூணு பேர் கிட்டயும் கண் இல்லை; என்கிட்டத்தான் இருக்கு!
அடேய்! யாருடா அவன்!
உனக்குத்தான் ரெண்டு கண் இருக்கே, எங்க மூணு பேருக்கும் சேர்த்து ஒண்ணே ஒண்ணு-தானே!
தயவு செய்து கொடுத்துடு!
பறக்கும் செருப்பு, மந்திர மணிப்பர்ஸ், மாயத் தலைப்பாகை மூன்றும் வைத்திருக்கிற தேவதைகளின் இருப்பிடம்



அவ்வாறே பெர்ஸியஸ்...
...மூன்று தேவதைகளும் இருக்குமிடம் சொன்னால் கண்ணைத் திருப்பித் தரேன்!
வேறு வழியின்றி கிழவிகள் விவரம் கூற...
சபக்
இந்தா! தென்றிசையக் காட்டு...
போய் வரேன்!
சீக்கிரமே தேவதைகளின் இருப்பிடம் அடைந்தனர்...
வா, குயிக்ஸில்வர்! எப்படி நாங்க இருக்குமிடம் தெரிஞ்சது?
குயிக்ஸில்வர் நடந்ததைக் கூறி...
பெர்ஸியஸுக்கு நீங்க உதவணும்...
ஆகட்டும்! இவனைப் பார்த்தா நல்லவனாத்தான் தோணுது...




பெர்ஸியஸுக்கு மூன்று தேவதைகளும் பரிசளித்தன..
இந்தா, மந்திர மணி- பர்ஸ். பத்திரம்!
பறக்கும் காலணிகள் இதோ!
பெர்ஸியஸ் அமர்ந்து ஒரு காலணி- யைப் போட்டுக் கொண்ட போது, மற்றொன்று...
பிடி! பிடி!
நல்ல வேளையாக குவிக் ஸில்வர்...
நீ இன்னும் ஜாக்கிரதையா இருக்கணும் பெர்ஸியஸ்... இந்நேரம் இது தப்பிப் பறந்திருக்- குமே...?
இரண்டு காலணிகளையும் போட்டுக் கொண்ட பெர்ஸியஸ்...
குவிக் ஸில்வர்! உன்னைப் போலவே என்னாலும் பறக்க முடியுது!
தேவதைகள் மூன்றாவது பரிசையும் அளித்தன...
இது மாயத் தலைப் பாகை... போட்டுப் பாரு!




கவசத்தலைப்பாகையைப் பெர்சியஸ் அணிய...
பெர்சியஸ்! எங்கே போனே?
இங்கே-தானே இருக்கேன்!
பலே! உன்னை என்னால் பார்க்க முடியாதுன்னா, பாம்புத்தலை அரக்கிகள் மட்டும் எப்படிப் பார்ப்பாங்க? தேவதைகளுக்கு நன்றி சொல்லிட்டுக் கிளம்பு...
இருவரும் பட்சிகள் போல் பறந்தார்கள்...
உயரே-யிருந்து பார்க்கும் போது பூமி எத்தனை அழகு!
அது சரி! யாரோ என் பக்கத்தில் பறப்பது போலிருக்கே?
ஏன், தங்கச்சியா இருக்கும்!
அவ கண்ணுக்குத் தெரிய மாட்டா! ஆனா, நமக்கு வழி காட்ட வந்திருப்பா... அப்படித்தானே தங்கச்சி?
பாம்புத் தலை அரக்-கிகளிடம்தானே போகணும்? பேசாம வா!




சிறிது நேரம் பறந்த பின்...
அதோ...
எங்கே?
ஆ!
நல்ல வேளை, அவங்க நெருக்களிச்சுப் படுத்திருக்காங்க. மெடுஸா முகத்தை முழுசா நீ பார்த்திருந்தா இந்நேரம் கல்லாயிட்டிருப்பே!
பெர்ஸியஸ்! இப்பத் தான் சமயம்! சீக்கிரம்! அவங்க விழித்துக் கொள்ளும் முன் வேலையை முடிச்சுடு!
மூணு பேரில யாரைத் தாக்கறது? இதில யாரு மெடுஸா?
அதோ, நடுவில் புரண்டு படுக்கிறாளே, அவதான்! மற்ற ரெண்டு பேரும் அவ தோழிகள்!
ஜாக்கிரதை! மெடுஸா முகத்தை நேருக்கு நேர் பார்க்காதே! கேடயத்தில் பார்த்தபடியே அவ தலையைச் சீவிடு...!



கேடயத்தை மெருகேற்றி பளப் பளப்பாக்கியது இதற்குத்தானா? மெடுஸா, இதோ வருகிறேன்...
கேடயத்தில் பிரதிபலித்த முகத்தைப் பார்த்தவாறே நெருங்கி..
ஜெய சிவ!
சபாஷ்! சீக்கிரம் அவ தலையை மாந்திர மணி பர்சுக்குள் போடு!
இதோ!
மந்திர மணிபர்ஸ் பெரிதாக வளர...
இப்பவும் அவ முகத்தைப் பார்க்காமலே...
லபக்...
இதற்குள் மெடுஸாவின் தோழிகள் விழித்தெழ...
பெர்ஸியஸ்! சீக்கிரம் இந்த மாயத் தலைப் பாகையைப் போட்டுக்க... புறப்படு!
ஐயோ! மெடுஸா!


மெடூஸாவின் தலையற்ற உடலைப் பார்த்து அவள் தோழிகள் சீறி எழ...
இவங்க முகத்தைப் பார்த்தாலும் நீ கல்லாகிடுவே! சீக்கிரம் வா; ஓடிடலாம்!
எதுக்கு ஓடணும்? மெடூஸாவைத் தாக்கியது போல் இவங்களையும் எதிர்க்கிறேனே?...
அசடே! தூங்கிக்கிட்டிருந்த மெடூஸாவைச் சுலபமா தீர்த்துக் கட்டிட்டே... இவங்க முழிச்சுக்கிட்டாங்களே... இவங்க முகத்தைப் பார்க்காம நேருக்கு நேர் நின்னு சண்டை போட முடியுமா?
இதற்குள் மெடூஸாவின் தோழிகள் பயங்கரமாய் அலறிக் கொண்டு நெருங்க, பெர்ஸியஸ் மாயத் தலைப்பாகையை அணிந்தான்...
எங்கே அவன்?
மாயமாய் மறைஞ்சிட்டான்!
மெடூஸாவின் தோழிகள் பெர்ஸியஸைக் காண முடியாது போனதால்...
தப்பித்தோம்!
சிறகுகளுள்ள செருப்புக்கும் நன்றி சொல்லு!
பாலி டெக்டஸ் ஆண்டு வந்த ஸெரிபஸ் தீவை அடைந்தனர்...
போய் வரேன் ஹெர்மிஸ் அண்ணா! வரேன் தங்கச்சி! உங்க உதவியை என்னிக்கும் மறக்க மாட்டேன்...


வீடு திரும்பிய பெர்ஸியஸ்ஸை
அம்மா!... எங்கே காணோம்? தாத்தா!... எங்கே எனக்கு உதவிய செம்படவ தாத்தா அவும் இல்லையே...?
அக்கம் பக்கத்தில் விசாரிக்க...
எங்கே போனாங்க?
பாலிடெக்டஸ் அவங்களைக் கொடுமைப் படுத்தினார்... அதனால் தப்பி ஓடிட்டாங்க!
ஒரு கிழவர் ரகசியமாக...
கவலைப்படாதே, பெர்ஸியஸ்! அவங்க ஒளிஞ்சிருக்கிற கோயில் எதுன்னு எனக்குத் தெரியும்... நீ வந்தா தெரியப்படுத்தணும்னு சொல்லியிருக்காங்க...
தாயார் பத்திரமாயிருப்பதை அறிந்து நிம்மதி அடைந்த பெர்ஸியஸ்...
முதல்ல பாலிடெக்டஸை பார்த்துட்டு அப்புறம் வர்றேன் கோயிலுக்கு...
ஆச்சரியமடைந்த பாலிடெக்டஸ் வரவேற்றான்...
ஆ! பெர்ஸியஸ்! மாவீரனே! மெடுஸாவிடமிருந்து தப்பி வந்த கதை சொல்லு! உன்னைக் கௌரவிக்கணும்!
நடிக்கிறான்...!


மெடூஸாவின் தலையைக் கொண்டு வந்தியா? எங்கே காட்டு பார்க்கலாம்!
காட்டறேன்! உங்க மந்திரி பிரதானிகள், பிரபுக்கள் எல்லாரையும் வரச் சொல்லுங்க...
முட்டாள் பாலிடெக்டஸ் அரச சபையைக் கூட்டினான், பெருமிதத்துடன்...
என்னைப் போலவே நீங்க எல்லாம் மெடூஸாவின் தலையைப் பார்க்க ஆவலா இருப்பீங்க... அபூர்வமான பாம்புத் தலை அரக்கியாச்சே!
பார்த்துக்குங்க!
ஆ!
ஆ...
ஆ!
ஆ...
அடுத்த கணம் அனைவரும் சிலையானார்கள்...
பாவம் கற்சிலைகள்!
பெர்ஸியஸ் மணிப்பையை மறுபடி மூடி எடுத்துக் கொண்டு புறப்பட்டான். நடுக்கடலில்...
குட்பை, மெடூஸா! இனி நீ தேவையில்லை. உன்னை வைத்திருப்பதும் ஆபத்து...



ஆதாரம்: நதானியல் ஹாதார்ன் (1804-1864) என்ற அமெரிக்கர் எழுதியது.

6. பிறந்த மண்

பரதன் தான் எடுத்த தாளை, புத்தகத்தில் தான் அதுவரை படித்த பக்கத்தில் வைத்துக் கொண்டான். அந்தத் தாள் இரண்டாக மடிக்கப்பட்டு, ஒரு வேஃபர் பிஸ்கட் வடிவத்தில் இருந்தது.

பரதன் வீட்டுக்குச் செல்லப் புறப்பட்டான். வந்த வாயிலை நோக்கி நடந்தான். பாதி தூரம் நடந்தவன், அந்த வாசல் வழியே, முன்பு அவன் கவனத்தைப் புருவத்தால் கவர்ந்த இருவரும் நுழைவதைக் கண்டான். இப்போது அவர்கள் ‘ஓட்டமா நடையா’ என்று சொல்ல முடியாத ஒரு வேகத்தில் வந்து கொண்டிருந்தார்கள்.

பரதன் இப்போதும் அவர்களின் புருவங்களை அதிசயத்தோடு பார்த்தான்.


இருவரும் பரதனைக் கடந்து சென்றார்கள்.

கிழக்கு நோக்கி நடக்க வேண்டிய பரதன் சில அடிகள் நடந்ததும் நின்றான். திரும்பி மேற்குத் திசையில் பார்த்தான். அதிசய புருவ உருவக்காரர்கள், சிறிது நேரத்துக்கு முன்பு பரதன் உட்கார்ந்திருந்த சிமெண்ட் பெஞ்சை அடைந்தனர். இருவரும் கீழே குனிந்து எதையோ தேடுவது தெரிந்தது. ‘பர்ஸையோ, பணத்தையோ தொலைத்திருப்பார்களோ? நாம் அங்கேதானே உட்கார்ந்திருந்தோம். நம் கண்ணில் எதுவும் படவில்லையே?’’ -பரதன் யோசித்தபடி ஒரு நிமிடம் அவர்களைப் பார்த்தான். பிறகு திரும்பி வாயிலை நோக்கிச் சென்றான். வாயிலைக் கடந்து வீட்டுக்குச் சென்று விட்டான்.

பேச்சாளனாக வேண்டும்!
எழுத்தாளனாக வேண்டும்!

நூறு ரூபாய்

டாக்டர் பூவண்ணன்



பரதனின் இந்த இரண்டு இலட்சியங்களில் ஒன்று நிறைவேறியது என்றே சொல்லலாம்.

சென்னையிலிருந்த பழம்பெரும் பள்ளி ஒன்று நூற்றாண்டு விழா கொண்டாடுகிறது. விழாவை முன்னிட்டுப் பள்ளி மாணவர்க்கு மாநில அளவில் பல போட்டிகளை நடத்தியது. அதிலே ஒன்று பேச்சுப் போட்டி.

ஒவ்வொரு மாவட்டத்துப் பள்ளி மாணவர்களில் இருந்தும் சிறந்த இரண்டு பேச்சாளர்களைத் தேர்ந்தெடுப்பது முதல் கட்டம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் சென்னையிலே அந்தப் பள்ளியில் நடக்கும் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும். அதில் வெல்பவர்களுக்கு ஒரு சவரன் தங்கப் பதக்கம் பரிசாகக் கிடைக்கும்.

கோவை மாவட்டத்துப் பள்ளி மாணவர்களுக்கு நடந்த பேச்சுப் போட்டியில் பங்குகொள்ள பரதனின் பள்ளிக் கூடத்துக்கும் அழைப்பு வந்தது. போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தமிழாசிரியரை அணுகுமாறு அறிவித்தார், தலைமையாசிரியர்.

பரதன் அதை அறிந்ததும் நேரே தமிழாசிரியரிடம் சென்றான். ''ஐயா, நான் பேச்சுப் போட்டியிலே கலந்துக்க ஆசைப்படறேனுங்க'' என்று கூறினான்.

பரதன் பள்ளிக்குப் புதிய மாணவன். ஆனாலும், யானை பலம் கொண்ட அந்தோணிசாமியை வீழ்த்தி வென்று புகழ்பெற்று விட்டவன். அதைத் தவிர தனது அறிவுத் திறமையால் அவன் வகுப்புக்கு வரும் ஒவ்வொரு ஆசிரியரின் கவனத்தையும் கவர்ந்தவன். தமிழாசிரியருக்கும் பரதனின் படிப்புத் திறமை தெரியும். ஆனால் பேச்சுத் திறமை அவனுக்கு இருக்கிறதா என்பது தெரியாது.




''பரதனைப் பேசச் சொல்லிக் கேட்டுப் பார்ப்போமா?'' ஒருகணம் நினைத்த தமிழாசிரியர் அந்தக் கருத்தை மறுகணமே மாற்றிக் கொண்டார். ''பரதன் தனக்குத் தெரியாததைத் தெரியும் என்று சொல்லிக் கொள்பவன் அல்ல. அதனால் அவனை அனுப்புவோம்'' என்று முடிவு செய்தார். அதன்படி பரதனையும் வேறொரு மாணவனையும் போட்டிக்கு அனுப்பினார்.

போட்டியை நடத்தும் சென்னைப் பள்ளி, இந்தப் பேச்சுப் போட்டியை பெரிய மாநாடுகள், நாடகங்கள் நடக்கும் மாநகராட்சிக் கலைமன்றம் என்னும் பெரிய ஹாலில் நடத்தியது. கோவை மாவட்டப் பள்ளி ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டிரண்டு மாணவர்கள் கலந்து கொண்டனர்.

போட்டியன்று கலைமன்றம் நிறைந்து வழிந்தது. குள்ள உருவத்தை உடைய பரதனின் பேச்சைக் கேட்க, அவனுடைய பள்ளியிலிருந்து ஒரு மாணவர் பட்டாளமே வந்திருந்தது. ஞானசம்பந்தம், நாகேந்திரன், அந்தோணிசாமி ஆகிய மூவரும் மூன்றாம் வரிசையில் உட்கார்ந்திருந்தார்கள். பரதனின் பேச்சைக் கேட்க ஆசிரியர்கள் சிலரும் வந்திருந்தனர்.

பேச்சுப் போட்டியின் தலைப்பு, ''இந்தக் காலத்துக்கு, அறிவைக் காட்டிலும் பணமே மிகவும் தேவை'' இதை ஒட்டியும் வெட்டியும் மாணவர்கள் பேசினார்கள்.

பரதன் பேசுவதற்காக மேடைக்கு வந்ததும் அந்த அரங்கமே அதிரும்படி கைதட்டல் எழுந்தது. அந்த உற்சாகத்தில் தலைப்பை வெட்டி, பணத்தைக் காட்டிலும் அறிவே தேவை என்று மிக அற்புதமாக ஐந்து நிமிடம் பேசினான் பரதன். பேச்சின் முடிவில் மீண்டும் கலைமன்றம் அதிர்ந்தது. நடுவர்கள் முதற்பரிசு பெற்றவன் பரதன் என்று அறிவித்த போது, கலைமன்றம் அதிர்ந்ததோடு, அது உதிர்ந்து விடுமோ என்று ஐயுறுமளவு கைதட்டல் பிறந்து, வெகுநேரம் தொடர்ந்தது.



பரதனை எந்தக் கேள்வியும் கேட்காமல் தேர்ந்தெடுத்ததற்காகத் தமிழாசிரியர் தம்மைத் தாமே பாராட்டிக் கொண்டார்.

போட்டியில் முதற்பரிசும் இரண்டாம் பரிசும் பெறும் மாணவர்கள் அடுத்த வாரம் சென்னையில் நடக்கும் இறுதிப் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும். விழா நடத்தும் பள்ளி, போட்டிக்குப் போகும் மாணவனுக்கு வண்டி செலவு தந்து, அவன் சென்னையில் தங்கும் செலவுக்காக இருபத்தைந்து ரூபாயும் தரும். இதைத் தமிழாசிரியர் அறிவித்தார்.

''பரதா, சென்னை ஓட்டலில் இருபத்தைந்து ரூபாய்க்கு அறையே கிடைக்காது. யாராவது தெரிந்தவர்கள் வீட்டில் தங்கிக் கொண்டால், இருபத்தைந்து ரூபாய் உணவுச் செலவுக்குப் பயன்படும். சென்னையில் உன் சொந்தக்காரர்கள் யாராவது இருக்கிறார்களா?''

பரதனுக்குச் சொந்தக்காரர்கள் என்று சிலர் கோவையில் இருந்தார்கள். பரதனின் குடும்பம் வறுமையடைய அடைய, சொந்தக்காரர்கள் விலகிக் கொண்டார்கள். அதனால் அவனுக்கு வெள்ளியங்கிரி தவிர வேறு யாரும் இல்லை.

இதைத் தமிழாசிரியரிடம் தெரிவித்தான் பரதன்.


''அப்படியா, சரி. நான் தலைமையாசிரியரிடம் சொல்லி, நமது பள்ளியிலிருந்து ஏதாவது பணம் தர முடியுமா என்று கேட்கிறேன். அப்போதும் நீ தனியாகவே சென்னைக்குச் சென்று வர வேண்டும்.''

தமிழாசிரியர் சொல்வதைக் கேட்டுக் கொண்டே அங்கே வந்தான் நாகேந்திரன்.

''ஐயா, சென்னையில் எங்கள் மில்லின் கஸ்ட் ஹவுஸ் இருக்கு. அங்கே அல்லது வேறொரு ஓட்டலில் பரதனைத் தங்கச் செய்யும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதே போலச் சென்னையில் பரதனை வரவேற்று வழி காட்டவும் யாராவது ஒருவரை ஏற்பாடு செய்கிறேன்.''

நாகேந்திரன் சொன்னதைக் கேட்டுத் தமிழாசிரியர் மகிழ்ந்தார். பிறருக்கு உபத்திரவம் தந்தே உவகை அடைந்து வந்த நாகேந்திரன் பிறருக்கு உதவி செய்து உவகையடைய முன்வருகிறான். இந்த மாற்றமும் ஏற்றமும் பரதனின் நட்பால் ஏற்பட்டவை என்பது தமிழாசிரியருக்குத் தெரியும். அதனால் அவர், ''சரி. அப்படியே செய்'' என்று நாகனிடம் தெரிவித்தார். ''பரதா, இனி உனக்குக் கவலை இல்லை. பேச்சுப் போட்டிக்கு இரண்டு நாள் கழித்து இந்தப் பள்ளியின் நூற்றாண்டு விழா. அந்த விழாவிலே போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளிக்கிறார்கள். நீ போட்டியில் வெற்றி பெற்றால், மேலும் இரண்டு நாள் சென்னையில் தங்கி, பரிசையும் வாங்கிக் கொண்டு வா'' என்றவர், நாகனிடம், ''பரதன் உங்கள் கஸ்ட் ஹவுஸில் மூன்று நாள் தங்கலாமா?'' என்று கேட்டார்.




Std C

''தங்கலாம். நான் ஏற்பாடு செய்கிறேன்.''

நாகன் மகிழ்ச்சியுடன் கூறினான்.

அன்றே நாகன் தன் தந்தையிடம் அது பற்றிப் பேசினான். காளியப்பரும் தன் மகனிடம் தோன்றிய நல்ல மாற்றத்துக்கு பரதனின் நட்பே காரணம் என்பதை அறிந்திருந்தார். பரதனையும் அவர் சந்தித்து, அவன் முகத்தில் தவழும் அறிவு, ஆற்றல், அடக்கம் ஆகிய மூன்றையும் கண்டிருக்கிறார். அதனால், ''நாகா, உன் நண்பனுக்கு வி.ஐ.பி. டீரிட்மெண்ட் கொடுத்துக் கவனிக்குமாறு கஸ்ட் ஹவுஸ் நிர்வாகியிடம் சொல்லி விடுகிறேன்'' என்று கூறினார்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை நீலகிரி எக்ஸ்பிரஸில், ரிசர்வ்ட் பெட்டியில் பரதன் சென்னைக்குப் பயணமானான். நாகன், ஞானம், அந்தோணி ஆகிய மூவரும் ரயில் நிலையம் வந்து அவனை வழியனுப்பினர்.

நாகேந்திரன் குறிப்பிட்ட கஸ்ட் ஹவுஸ் நிர்வாகி முரளி, பிளாட்பாரத்துக்கு வந்து பரதனை வரவேற்றார். பரதனை அழைத்துச் செல்லப் படகு போன்ற ஏர்கண்டிஷன் கார் வந்திருந்தது. கஸ்ட் ஹவுஸிலும், காளியப்பர் தங்கும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட அறையில் பரதனைத் தங்க வைத்தார்.


அந்தக் குளிர்ப்பதன அறையால் பரதனின் உடல் குளிர்ந்தது. நாகனின் அன்பையும், நாகனுடைய தந்தை காட்டிய அக்கறையையும் எண்ணிய போது அவன் உள்ளம் குளிர்ந்தது.

''சென்னையில் பார்க்க வேண்டிய இடங்கள் நிறைய இருக்கு தம்பி. முதலாளி உன்னை எல்லா இடத்துக்கும் அழைத்துச் செல்லுமாறு கூறியிருக்கிறார். போட்டியில் நீ வெற்றி பெற்றாலும், பெறாவிட்டாலும் உன்னை மூன்று நாள் தங்க வைத்து, புதன் கிழமை இரவுதான் அனுப்பச் சொன்னார். டிக்கெட்டும் புதன் கிழமை சேரனில் எடுத்திருக்கிறேன். இன்று நகரத்துக்குள்ளே உள்ள இடங்களைப் பார்ப்போமா?''

முரளி கேட்டார்.

''வேண்டாங்க. நாளைக்குப் பார்த்துக்கலாம். முதலில் வந்த வேலையைக் கவனிக்கிறேன்.''


பரதன் இப்படிச் சொன்னதற்கு ஒரு காரணம் இருந்தது. கோவையில் நடந்த பேச்சுப் போட்டிக்கு உரிய தலைப்பை முன்கூட்டியே அறிவித்திருந்தனர். ஆனால் இந்த இறுதிப் போட்டிக்கு உரிய தலைப்பை முன்னரே அறிவிக்கவில்லை. போட்டி நடப்பதற்குப் பத்து நிமிடம் முன்புதான் தலைப்பு அறிவிக்கப்படும். அதனால் பரதன் சில தலைப்புகளை எதிர்பார்த்து, அவற்றுக்கேற்ற பேச்சைத் தயாரித்திருந்தான். மேலும் சில தலைப்புகளில் பேசக் குறிப்புக்களைத் தயார் செய்ய விரும்பினான். அதனால் வெளியில் செல்ல விரும்பவில்லை.



காலைச் சிற்றுண்டியும், பகல் உணவும் அவன் அறைக்கு வந்தன.

பிற்பகல் மூன்று மணிக்குப் போட்டி தொடங்குகிறது.

முரளி இரண்டரை மணிக்கே வந்து பரதனை அமழந்துச் சென்றார். அவரும் பரதனின் பேச்சைக் கேட்க அவையிலே உட்கார்ந்து விட்டார்.



போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களைத் தனியே ஒரு அறையில் உட்கார வைத்தனர். உரிய நேரத்தில் தலைப்பை ஒரு ஆசிரியர் கரும்பலகையில் எழுதினார்.

தலைப்பு : பிறந்த மண்.

இதைப் படித்ததும் அந்த அறையில் சலசலப்பு ஏற்பட்டது. தற்காலச் சூழலையும், நாட்டு நடப்பையும் ஒட்டிய தலைப்பை எதிர்பார்த்தனர். இந்தத் தலைப்பு எளிது போலத் தோன்றினாலும் போட்டிக்கு வந்தவர்கள் போதுமான புள்ளி விவரம் இல்லையே என்று வருத்தப்பட்டார்கள்.

மணி மூன்று. பேச்சுப் போட்டி தொடங்கியது.

பன்னிரண்டாம் மாணவனாகப் பரதன் அரங்கில் நுழைந்ததும் அவையில் பெருஞ்சிரிப்பும் புறப்பட்டது.

பரதனின் உருவத்துக்கேற்ப ஒலி பெருக்கியின் உயரத்தைக் குறைப்பதில் சில நிமிடம் செல்ல, சிரிப்பு அதுவரை தொடர்ந்தது.

பள்ளியின் தலைமையாசிரியர் 'அமைதி அமைதி' என்று கையமர்த்திக் கூறிய பிறகு, அமைதி நிலவியது. அவரே, "இப்போது கோயமுத்தூர் மாணவன் பரதன் பேசுகிறான்" என்று மீண்டும் அறிவித்தார்.

பரதன் அவையினரின் சிரிப்பால் அரண்டு போயிருப்பானோ என்று முரளி நினைத்தார். அவர் நினைத்தது தவறு என்று நிரூபித்தது பரதனின் பேச்சு.

"போட்டியின் நடுவர்களே, அரங்கிலே இருப்பவர்களே! வணக்கமுங்கோ."

பரதன் சொன்னதும் அதிலே தெரிந்த மண்வாசனையைப் புரிந்த கொண்ட அவை கைதட்டி ஆரவாரித்தது.

பரதன் தொடர்ந்து பேசினான் :

"உலகத்திலே சிறந்த ஊர் எது என்று கேட்ட போது, ஒருவன் பிறந்த ஊர்" என்று பெருமையுடன் பதில் கூறினான் ஒரு அறிஞன். எனக்குச் சிறந்த மண், நான் பிறந்த மண்! அது பண்பும் பாசமும் ஏன், பணமும் பொங்கித் ததும்பும் கொங்கு நாட்டு மண்.

பிறந்த குழந்தையின் மூச்சிலேயே மரியாதை கலந்து விடுகிறது. ஏனுங்க, என்ன வேணுமுங்க, வாங்க, உட்காருங்க என்ற பண்புப் பேச்சு, பணக்காரர் ஏழை என்ற பேதமில்லாமல் எல்லோரிடமும் இருக்கச் செய்யும் மண்தான் கொங்கு நாட்டு மண்.

"ஒரு மில் முதலாளி கூட தன் தோட்டக்காரனைப் பார்த்து, "என்னங்க இந்தச் செடி வாடியிருக்குங்களே! இதைச் சரியா கவனியுங்க" என்று மரியாதையுடன் பேசும் இயல்பை இந்த 1992 ஆம் ஆண்டிலும் பார்க்கலாம்...."

பரதன் தொடர்ந்து கொங்கு நாட்டின் பெருமையைப் பட்டியலிட்டான். சூலூர் வெற்றிலை, மேட்டுப்பாளையப் பாக்கு, கொள்ளேகாலப் பட்டு, பவானி

விரிப்பு, திருப்பூர் பனியன், ஊத்துக்குளி வெண்ணெய், ஈரோட்டு மஞ்சள், மதுக்கரை சிமெண்ட், காங்கேயம் மாடு....

பட்டியல் சுவையோடு தொடர்ந்தது.

கோவையைக் காக்கும் கோணியம்மன், பேரூர் பெருமான், வெள்ளியங்கிரி ஈசன், ஈச்சனாரி விநாயகன், மருதமலை முருகன் என்று தெய்வீகச் சிறப்பைப் பேசினான்.

இறுதியாக, கொங்கு மண்ணின் கொடைச் சிறப்பைக் கூறினான்.

''கொங்கு மண்ணிலே அடையாத நெடுங்கதவு உண்டு. அணையாத அடுப்பு உண்டு. வந்தவரை வரவேற்று உபசரிப்பதில் கொங்கு மக்கள் சங்ககால வள்ளல்களே.''

குடிப்பதற்கு நீர் கேட்டால்
குவளையிலே பால் தருவோம்!
படுப்பதற்குப் பாய் கேட்டால்
பஞ்சணையை முன்விரிப்போம்

என்கிறார் கொங்கு நாட்டுக் குழந்தைக் கவிஞர், முன்னாள் வானொலி அண்ணா அமரர். ர. அய்யாசாமி அவர்கள்.

கவிஞர் சொன்னது உயர்வு நவிற்சியல்ல! உண்மை உரை! இதற்கு நானே எடுத்துக்காட்டு!

வழங்கிய வள்ளன்மைக்கு நான் எடுத்துக்காட்டல்ல!

வாங்கிக் கொண்டு வளம் பெற்றமைக்கு நான் எடுத்துக்காட்டு.

கூட்டத்தில் ஒரு சிரிப்பு!

''சென்னையில் தங்க ஆறடி அறை கிடைக்குமா என்று ஏங்கிய என்னை ஐந்து நட்சத்திர அந்தஸ்துள்ள அறையிலே தங்கச் செய்து, ஏசி காரிலே ஏற்றியனுப்பினார் காளியப்பர் என்ற வள்ளல்... இந்தப் பள்ளியின் வெளியே அந்தப் படகுக் கார் நிற்கிறது...'' என்று, நாகேந்திரன் - காளியப்பர் பற்றிப் பேசினான் பரதன்.

''கொங்குமண்ணின் மரியாதையும் கொடையும் பழம்பெருமை மட்டுமல்ல; நிகழ்கால உண்மைகள்... அந்த மண் என் பிறந்த மண் என்று சொல்வதிலே நான் பெறும் சுகம், இங்கே முதற்பரிசு பெற்றாலும் எனக்குக் கிடைக்காது... என் ஆசையெல்லாம் என் பிறந்த மண்ணிலேயே இறந்து, அந்த மண்ணோடு மண்ணாய் மாற வேண்டும் என்பதுதான்.... வணக்கம்!''

போட்டியின் முடிவு அப்போதே தெரிந்து விட்டது.

மாலை ஆறு மணிக்கு, பரதனே முதற்பரிசு பெற்றான் என்பது அறிவிக்கப்பட்டது.

வியாழக் கிழமை காலை ஆறரை மணிக்குச் சேரன் எக்ஸ்பிரஸ் கோயமுத்தூர் ஜங்கஷனைச் சேர்ந்த போது, பரதனின் பள்ளி மாணவர்கள் பலரும், தமிழாசிரியரும் அவனை வரவேற்றனர்.

பரதனின் கண்கள் நாகேந்திரனைத் தேடின.

''நாகன் வர்றதா சொன்னான், ஏன் வரலைன்னு தெரியலே'' என்று கூறினான் ஞானம்.

பரதன் ரயில் நிலையத்திலிருந்து முதலில் தன் வீட்டுக்குச் சென்று தன் குருநாதர் வெள்ளியங்கிரிக்கு தங்கப் பதக்கத்தைக் காட்டி விட்டு நாகனின் வீடு நோக்கி ஓடினான்.

எப்போதும் கலகலப்புடன் இருக்கும் நாகனின் வீடு அன்று ஏதோ சோகத்திலிருப்பது போலத் தெரிந்தது.

வெளிக் கதவைத் திறந்து உள்ளே அனுப்பிய வாட்ச்மேன் முகத்திலே வாட்டம். வாட்டம் மட்டுமா, அவன் கண்களில் கண்ணீர்...

ஏன்?

யாருக்கு என்ன நடந்தது?

பரதன் மாளிகையை நோக்கிக் கவலையோடும் கலவரத்தோடும் ஓடினான்.

(தொடரும்)

''பாட்டி இறந்து போனதுக்குக் கூடவா ஆசிரியர் லீவ் தரமாட்டேன்னுட்டார்?''

''ஆமாம்! இறந்து போனது பக்கத்து வீட்டுப் பாட்டி ஆச்சே!''

- கபிஸ்தலம் ஏ. கே. ஆனந்தப்ரியா



"முன்னேற்றம் என்ற சொல்லுக்கு எதிர்ப்பதத்தை யாராவது சொல்ல முடியுமா?''

யாரும் கைதூக்கவில்லை. வகுப்பே மௌனமாகி இருந்தது. மாணவர்களின் பார்வை ஒட்டு மொத்தமாக என் பக்கம் திரும்பியது. பள்ளியில் முதல் வகுப்பில் சேர்ந்த போதிலிருந்தே எல்லாப் பாடங்களிலும் முதலாவதாக வந்து கொண்டிருப்பதால் மட்டுமல்ல. நல்லது என்று எதற்கு உதாரணமாகக் காட்ட வேண்டுமென்றாலும் ஆசிரியர்கள் என்னையே முன் உதாரணமாகக் கூறிப் பெருமைப் படுத்துவார்கள்.

ஆனால் - இப்பொழுது எழுப்பப் பட்ட கேள்விக்கு எனக்கும் விடை தெரியவில்லை என்று உதட்டைப் பிதுக்

நீயா  நண்பா!

கிய போது, வகுப்பில் ஒரு கை உயர்ந்தது.

''தாழ்ந்துவிடல்'' என்று பதில் உரைத்தது. கூறியது, அந்த ஆண்டுதான் வந்து சேர்ந்த ஒரு புதிய மாணவன் ஹூ கங். எனக்கு எங்காவது மறைந்து கொள்ள வேண்டும் போல் அவ்வளவு தலைகுனிவாக இருந்தது. எப்போதுமே நடந்திராத ஒன்று இன்று நடந்து என்னை அதிரவைத்து விட்டது.

சில நாட்களுக்குப் பிறகு விழுந்தது இரண்டாவது இடி.

ஹூ கங் என்னை விடக் கூடுதல் மதிப்பெண் பெற்று வகுப்பிலே முதலாவதாக வந்து விட்டான். அன்றிரவு முழுவதும் நான் அழுதேன் அழுதேன் அப்படி அழுதேன்.

கொஞ்சம் கொஞ்சமாக என் சக மாணவர்களின் கவனமும் முதல் மரியாதையும் அவன் பக்கம் திரும்பிக் கொண்டிருந்தது. எப்பாடு பட்டாவது பழைய ஹீரோ நிலையை அடைந்தே தீருவது என்ற வைராக்கியம் என்னுள் எழுந்தது.

நன்றாகப் படித்தேன். என் கவனத்தை எதிலும் சிதற விடவில்லை. முடிவு! அடுத்த தேர்வில் நான் வெற்றி பெற வேண்டும். ஆனால் பெற்றேனா! இல்லை, நான்கே மதிப்பெண்களில் இரண்டாவது இடத்தைத்தான் பெற்றேன். சொல்லித்தானா தெரிய வேண்டும். முதல் இடத்தைத் தட்டிக் கொண்டவன் ஹூ கங்தான்.

எதிலெல்லாம் நான் திறமைசாலி என்று பெயர் எடுத்திருந்தேனோ, அதிலெல்லாம் ஹூ கங் என்னைப் பின்னுக்குத் தள்ளிவிட்டான்.

கட்டுரைப் போட்டியென்றால் எனக்கு உயிர். அந்த ஆண்டு என்னோடு அவனும் கலந்து கொண்டான்.

தலைப்பு : வாழ்வில் உன் குறிக்கோள் என்ன?


நான் ஒரு டாக்டராக வேண்டும் என விரும்புபவன். எவ்வளவோ உதவி செய்யலாம் சமுதாயத்திற்கு என்பது எனது எண்ணம். நானே கண்ணீர் உகுக்கும் விதத்தில் கட்டுரையை எழுதினேன்.

அடுத்த வாரம் போட்டியின் முடிவைத் தலையை ஆசிரியர் அறிவித்த போது -

ஹூ கங் முதல் இடம். எனக்கு இரண்டாவது இடம்

''ஹூ கங்! நீ எதைப் பற்றி எழுதினாய்?'' என்று கேட்டேன்.

கைலாஸ்



''நான் ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரிய னாக ஆக வேண்டும் என்று விரும்பு வதைப் பற்றி.''

எனக்குப் புரிந்துவிட்டது. கட்டுரை களைத் திருத்தியவர்கள் ஆசிரியர்கள் தானே! அவர்கள் தொழிலின் புனிதத் தையல்லவா அவன் உயர்த்தியிருக் கிறான்! அவன் புத்திசாலிதான் உண்மை யில்!

படிப்பு மட்டுமா, கால்பந்தாட்டத் திலும் என் தலைவன் பதவி ஹூ கங்கிடம் பறிபோய் விட்டது. வர வர எனக்குப் பள்ளிக்குச் செல்லக் கூடப் பிடிக்காமல் போய் விட்டது.

ஒரு நாள்.

குண்டு மணியின் கைக் கடிகாரத் தைக் காணோம்!

எங்கள் பள்ளியில் எதையாவது காணவில்லையென்றால் எல்லா ருடைய பைகளும் சோதனையிடப்படு வது வழக்கம். விளையாடப் போகை யில் கழற்றி வைக்கப்பட்ட பொருள் எங்கு போய்விடும்! ஆனாலும் எவ் வளவு தேடியும் அது கிடைக்கவே இல்லை.

மறுவாரம், வேறு ஒருவனுடைய பேனா.

அதற்கடுத்த வாரம்!

இந்த முறை காணாமற் போனது விலை உயர்ந்த ஒரு மோதிரம். சாப் பிடும்போது கழற்றி மேசைக்குள் வைத் ததைக் கைகழுவி வந்து பார்த்தால் காண வில்லை.

எல்லோர் பைகளையும் நன்கு சோதனையிட்டபோது - இரு மாணவர் கள் கூவினார்கள்.

ஹூ கங்கின் முகம் வெளிறி விட்டது. ஆசிரியர் அவனைத் தலைமை ஆசிரியரிடம் அழைத்துச் சென்றார்.

''படிச்சு என்னடா பிரயோஜனம்? திருட்டுப் பயலாக இருப்பது கேவலம் இல்லே! சீ!''

பலரும் பலவிதமாகப் பேசத் தொடங்கியதும் எனக்குப் பொறுக்க முடியவில்லை.

''டேய்! ஹூ கங் ஒருக்காலும் திருடி இருக்கமாட்டான். அப்படியே இருந்

தாலும் மன்னிக்கும் மனப்பான்மை உடையவன் தாண்டா மனிதன்'' அநட்டிக் கூறினேன்.

அன்றிலிருந்து யார் ஹூ கங்கைப் பற்றி அனாவசியமாக என்ன பேசி னாலும் அவனுக்கு ஆதரவாக அவர் களை நான் எதிர்த்தேன்.

அடுத்த தேர்வில் பாவம் ஹூ கங்! எல்லாப் பாடங்களிலுமே பூஜ்யம் வாங் கும் அளவிற்கு நொந்து போய் விட்டான்.

அந்த ஆண்டின் இறுதித் தேர்வு முடிந்ததும் ஆசிரியரின் அனுமதியோடு ஹூ கங் மேடை மீது ஏறி நின்றான்.

அவனுடைய கண்கள் கலங்கியிருந் தன.

''அன்பு நண்பர்களே! என்னுடைய நாணயத்தை நம்பும்படி உங்களைக் கேட்க நான் முயலவில்லை. மாறாக, என் ஊருக்கே போய் முன்பு நான் படித்த அதே பள்ளியிலேயே சேர்ந்து படிப் பைத் தொடர இருக்கிறேன். நான் போய் வருகிறேன், வணக்கம்.''

அவன் சென்று விட்டான். மறுநாள் முதல் கோடை விடுமுறை.

மூன்றாவது நாள் எனக்கொரு தபால் வந்தது. அது ஒரு அஞ்சல் கூடு! 'யார் எழுதியிருப்பார்கள்' என யோசித்த படியே ஓரம் கிழித்து உள்ளே விரல் விட்டு கடிதத்தை இழுத்தேன்.


ஹூ கங்தான் எழுதியிருந்தான். கூடவே ஒரு நாட் குறிப்பு! ஆமாம். என்னுடைய பள்ளி நாட் குறிப்பேதான். அதை எங்கேயோ தவறவிட்டிருந்தேன்.

அதில் 'முன்னேற்றத்திற்கு' எதிர்ப் பதம் கூறி, முதல் மார்க் வாங்கி ஹூ கங் மாணவர்களிடையே ஹீரோவான நாளில் இருந்து நான் அவனைக் கவிழ்க்க ஒழிக்கச் செய்ததையெல்லாம் தேதிவாரியாக எழுதிவைத்திருந்தேன். பங்குவின் மோதிரத்தைத் திருடி, ஹூ கங்கின் பையில் போட்டதைக்கூட எழுதியிருந்தேன். நண்பனைப் போல் நடித்து அவனை உறவாடிக் கெடுக்க நான் எடுத்த முடிவையும், வெற்றி யையும் கூட அதில் எழுதியிருந்தேன். என் வரை அது சாதனைதானே? அப்





"ஆமை அண்ணா, ஆட்டம்பாம் பத்திக்கிச்சு, சீக்கிரம் போ?"



"மத்தவங்களைப் போல நானும் எப்பப்பா பட்டாசு வெடிப்பேன்?"



"என்னக்கா! நம்ப மாப்பிள்ளை, மொத்த பட்டாசுகளையும் தின்னே தீர்த்துட்டாரே!"


படிப்பட்ட சாதனை நாட்குறிப்பு! நீச்சல் வகுப்பின் போது அது காணாமல் போய் விட்டது. அதைத்தான் ஹூசு கங் அனுப்பியிருந்தான்!

"கடிதத்தைப் படித்தேன்.


"அன்பு நண்ப, இதை என்ன செய்ய என யோசித்து உனக்கே அனுப்பியிருக்கிறேன். என் மீது திருட்டுப் பட்டம் கட்டப்பட்டு எல்லோராலும் கேவலப் படுத்தப்பட்டது பொறாமல், அன்று மாலை தனியா வகுப்பு முடிந்த போது வருத்தத்தோடு சற்று நேரம் நீச்சல் குளத்திலேயே உட்கார்ந்திருந்தேன். அப்போதுதான் இதைக் கண்டெடுத்தேன். யாருடையது என் பதை அறியப் படித்தபோது என்னால் நம்பவே முடிய வில்லை நண்பா! நான் குற்றமற்றவன் என நிருபிக்க வேறு என்ன வேண்டும் எனக்கு? ஆனால், எனதருமை நண் பனே! நான் அப்படிச் செய்யவில்லை. தவறு இழைத்தவன் எவ்வளவு கேவலப் படுத்தப்படுவான் என்பதை அனுபவ பூர்வமாக நானே உணர்ந்தபின், அந்தத் துன்பத்தை என் நண்பனாக நடித்து உன்னை அனுபவிக் கும்படி விட எனக்கு மனமில்லை. அதனால்தான் இன்று இதை உனக்கு அனுப்பியுள் ளேன். உறவாடிக் கெடுத்த உன் வார்த்தையின் படி தவறு செய்பவனை மன்னிப்பவன்தான் மனிதன் என்றும் உன் உயிர் நண்பன் ஹூசு கங்."

என் கண்களில் கண்ணீர் தளும்பியது. ஹூசு கங் உன்னை நேர்வழியில் வெல்ல என்னால் முடிய வில்லை. அதனால்தான் உறவாடி உனக்குத் திருட்டுப் பட்டம் கட்டினேன். நீ மனம் வைத்திருந்தால் என் நயவஞ்சக நடிப்பை உரித்துக் காட்டி என் முகத்தில் கரிபூசியிருக்கலாம். ஆனால் நீ அப்படிச் செய்யவில்லை. ஏன் என்றால் நீ என்னைப் போல் கயமை உள்ளம் கொண்டவன். அல்ல; குறுக்கு வழியில் வெற்றி காண்பவன் அல்ல. சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பதை நிரூபித்து விட்டாய். நான் தோற்று விட்டேன் என் பதை உணர்கிறேன். இப்பொழுதும் வென்றவன் நீயேதான்!


(தாய்வான் கதை)


தங்கம் தான் எனக்கு!
கதை: ஈசாப் /....
அமைப்பு: ரே/படம்:
பொன்னனிடம் இரண்டு கழுதைகள் இருந்தன
ஒன்றின் பெயர் சாம்பன், மற்றொன்று கருப்பன்-
ஏ...
கருப்பன் பொறுமைக்கு பெயர் போனது-
ஒருநாள்-
பகட்டு ஆசை கொண்ட சாம்பன் கருப்பனிடம்-
பட்டுத் துணியெல்லாம் மட்டும் தான் சுமப்பேன்! எசமான் பருத்தித் துணியை யெல்லாம் நீ சுமந்து வா!



காட்டின் பாதி வழியில் - எதிரே இரண்டு திருடர்கள் வந்தனர்
ஐயோ திருடர்கள்!


திருடன் மற்றவனிடம் -
தங்கமும், வைரமும் பட்டாடையும் எந்தக் கழுதை மேல் இருக்கு?
அதோ அந்தக் கழுதை மேல்!


அப்படியா! அதை மட்டும் குகைக்குள் பூட்டுங்கள் மற்றதை விரட்டுங்கள்!



திருடனிடம் மாட்டிக்கொண்ட சாம்பன் வருத்தத்துடன்–
பதவிக்கு ஆசைப்பட்டு நானே அபாயத்தில் சிக்கிக் கொண்டேன்! எனக்கு புத்தி வந்தது–

கேளுங்கள் சொல்லப்படும்



★ வ. புண்ணியகோடி, சாத்தூர்.


ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகள் ஒரே அலைவரிசையில் வானொலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பினால் என்னவாகும்? இதைத் தடுக்க ஏதாவது வழிமுறை இருக்கிறதா?




ஒன்றுக்கு மேற்பட்ட நிலையங்கள் ஒரே அலைவரிசையில் ஒலிபரப்பு செய்தால் நிகழ்ச்சிகள் சிதையும். (JAMMING). இதைத் தவிர்க்க, புதிதாக ஒலிபரப்பும் அலைவரிசை குறித்து உலக நாடுகள் எல்லாம் International Frequency Registration Bd' என்ற உலக அமைப்புக்கு எழுதி அனுமதி பெற வேண்டும் என்ற ஒரு விதி இருந்து வருகிறது.

★ ஆ. கதிஜா, தாராபுரம்.

குவார்ட்ஸ் கிளாக் (QUARTZ CLOCK) என்று போடுகிறார்களே கடிகாரங்களில் அப்படியென்றால் என்ன?





வானிலை ஆராய்ச்சி, அதன் பதிவுகள் ஆகியவைகளுக்கும் பயன்படக் கூடியவை; அந்த அளவுக்குத் துல்லியமாகக் காலம் காட்டுபவை என்பது பொருள்.

★ கி. முத்துராக்கு, சிறுதாம்பூர்.

டேகட்டிலோ கிரேஃபி என்பது என்ன?




சேரநம்பி

விரல் ரேகை இயலின் பெயர்தான் DACTYLOGRAPHY.

★ கு. சுந்தரபாண்டி, திருமங்கலம்.

ராஜாஜி அவார்டை யார் வழங்குகிறார்கள்? கல்வி ஸ்தாபனமா?



இல்லை. பாரதீய வித்யா பவான் என்ற அமைப்பு.

★ ரு. சின்னமாணிக்கம், திருக்கோவிலூர்.


வெள்ளை அறிக்கை என்கிறார்களே, அது என்ன?



குறிப்பிட்ட ஒரு பிரச்சனை குறித்து, தெரிந்த எந்த ஒரு சிறு தகவலையும் மூடி மறைக்காது சட்ட/பாராளுமன்றத்தில் தெளிவாகத் தரப்பட வேண்டிய அறிக்கையையே வெள்ளை அறிக்கை என்கிறார்கள். இந்தப் பெயர் பிறந்தது பாராளுமன்றத்தின் பிறப்பிடமாகிய இங்கிலாந்தில்தான்.

★ வெ. தண்ணீர்மலை, புதுக்கோட்டை.


இங்க் பட்டதும் பிளாட்டிங் பேப்பர் அப்படியே உறிஞ்சிக் கொள்கிறதே! இது எப்படி?



பிளாட்டிங் பேப்பரில், கண்ணுக்குப் புலப்படாத மயிரிழை அளவுக்கான துவாரங்கள் இணைந்துள்ளன. இவை ஈர்ப்புச் சக்தி உள்ளவை. இங்க் இதில் பட்டு நனைந்ததும், பிளாட்டிங் பேப்பரின் மேல் பரப்பில் ஏற்படும் பெருக்கம், மயிரிழை அளவுக்கான ஓட்டை இணைப்புகளை இயக்கி தொடர்ந்து இங்க்கை உறிஞ்ச வைக்கிறது.

★ மு. கதிர்வேல், பூம்புகார்.

ஒரு பெரிய படகு அல்லது கப்பல், நதியில் இருந்து கடலில் இறங்கிய உடனே, ஆற்றில் இருந்ததை விட உயர்ந்து இருப்பது போல் தோன்றுகிறதே! இது பொய்த் தோற்றமா?



இது பொய்த் தோற்றம் அல்ல. உண்மைதான். நதி நீரை விடக் கடல் நீருக்கு அடர்த்தி அதிகம். அதனால் ஏற்படும் மேல்நோக்கி அழுத்தம் காரணமாக, கப்பல் சற்று உயர்ந்தே மேல் மட்டத்தில் நிற்கிறது.

★ கு. கலைமதி, திண்டிவனம்.

சென்சார் போர்டு என்பது என்ன?

சினிமாட்டோகிராப் சட்டத்தின்படி இந்த போர்டு பம்பாயைத் தலைமை



யிடமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. கிளைகள் கல்கத்தா, சென்னை. எந்த ஓர் திரைப்படத்தையும் இந்த போர்டின் அனுமதி பெறாது இந்தியா வில் திரையிட முடியாது. இதன் உறுப்பினர்கள் படங்களைப் பார்த்து, 'ஓகே' சொல்லி, சர்ட்டிபிகேட் தந்த பிறகுதான் படத்தைத் திரையிடலாம். படத்தில் முதலில் இந்த 'ஓ.கே.' செய்த சர்டிபிகேட்டைத்தான் பெரிதாகக் காட்டுவார்கள்.

★ கு. மல்லிகா, திருமழிசை.

மக்சேசே அவார்ட் என்பது என்ன?




ஒரு விமான விபத்தில் மறைந்த பிலிபைன்ஸ் ஜனாதிபதி ராமோன் மகசேசே (RAMON MAGSAYSAY) யின் நினைவாக வழங்கப்படுவது இப் பரிசு. இதை ஆசியாவின் நோபல் பரிசு எனலாம். ராமோன் மகசேசேயின் பிறந்த நாளான ஆகஸ்ட் 31 ஆம் தேதியன்று ஒரு தங்கப் பதக்கமும், 20,000 பவுன்களும் பரிசாகத் தரப்படுகின்றன.

தமிழ்நாட்டில் இதைப் பெற்றிருக்கும் பெருமைக்கு உரியவர் எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் மட்டுமே.

★ கோ. அடைக்கலசாமி,
வேளாங் கண்ணி.

எங்கள் வீட்டுக் கிணற்று நீரை அப்படியே குடித்தால் சுவையாக இருக்கிறது. கொதிக்க வைத்துக் குடித்தால் அதன் சுவை போய் விடுகிறதே! எதனால் இது?




நீருக்குச் சுவை கிடையாது. அதில் கரையும் கூட்டு தாதுப் பொருள்களே அதற்குச் சுவையூட்டுகின்றது. நீரைக் கொதிக்க வைத்ததும் இதில் கலந்துள்ள தாதுப் பொருள்களில் உருகக்கூடியவை உருகி ஆவி வடிவில் வெளியேறி விடுகின்றன. உருக இயலாதவை பிரிக்கப்பட்டு அடியிலும், பக்கங்களிலும் தங்கி விடுகின்றன. இதனால்தான் கொதிக்க வைத்த நீர் சுவையில்லாமல் போய் விடுகிறது.

★ கா. சேதுமாதவன், பட்டுக்கோட்டை.

நீட்டு மிளகாய் நாக்கில் பட்டு விட்டாலே காரத்தைத் தாங்க முடிவதில்லை! ஆனால் குடைமிளகாயைக் கடித்துக் கூடத் தின்ன முடிகிறதே! எதனால்? ஒருவேளை குடை மிளகாய், மிளகாய் வகையைச் சேர்ந்தது இல்லையோ?


குடை மிளகாயும் மிளகாய் இனமே. ஆனால் நீட்டு மிளகாயில் CAPSAISIN



என்ற ஓர் பொருள் இருக்கிறது. இதுவே மிளகாய்க்குக் கார குணத்தைத் தருகிறது. இந்தப் பொருள் குடை மிளகாயில் மிக மிகக் குறைவு. அதனால்தான் குடை மிளகாயைக் கடித்துக் கூடத் தின்ன முடிகிறது.

★ கு. பரணிகுமார், ஊஞ்சலூர்.

மிகச் சிறிய முட்டையை எந்தப் பறவை இடுகிறது?



ஹம்மிங் பேர்ட் என்னும் பாடும் பறவைதான் மிகச் சிறிய முட்டையை இடுகிறது. இதன் முட்டையின் நீளம் 6 மி.மீ.

★ வ. கமலநாதன், சிக்கல்.

இன்று பரவலாகப் பயன்படுத்தப் படும் 'வேகுவம் கிளீனரை' யார் கண்டு



பிடித்தார்கள்?

இங்கிலாந்தின் மின் இயல்துறை அறிஞரான டாக்டர் ஜான் ஹூக் என்பவரே இதைக் கண்டுபிடித்தார். இவர் சவுத் ஹாம்ப்டன் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்.

★ போளூர் நாகராஜன் மற்றும் பலர்.

அக்டோபர் இதழில் ஆழியின் "நாக்குகள் பலவிதம்" சித்திர மடலில் கூறப் பட்டுள்ள செய்திகளுக்கும், சேரநம்பியால் தரப்பட்டுள்ள பதிலுக்கும் முரண்பாடு இருக்கிறதே?

ஆழியின் கருத்து ஆராய்ச்சியாளர்களால் ஏற்கெனவே ஏற்கப்பட்ட தகவல். சேரநம்பியின் பதில் - இன்னும் ஆராய்ச்சி நிலையிலேயே உள்ள அதிசயத் தகவல். சேரநம்பியின் பதிலை மீண்டும் படியுங்கள்.

★ மா. பழனிவேல் மற்றும் பலர், தஞ்சை.

★ மனிதனின் விஞ்ஞானப் பெயர் "ஹோமா சேபியன்" என்று கூறப்பட்டுள்ளதே? "ஹோமோ சாபியன்" என்றல்லவா இருக்க வேண்டும்?

சேரநம்பி சரியாகத்தான் எழுதினார். கோட்டை விட்டது நாங்கள் தான்!

- ஆசிரியர்.

"டாக்டர், எனக்கு வர வரக் காது சரியாகக் கேட்பதில்லை!"

"கவலையே வேண்டாம். நான் மருந்து கொடுத்துத் தலைவலியை சரிப்படுத்திடறேன்."

- ஏ. ஹரிகிருஷ்ணன்



நேருவை ஏன் பிடிக்கும்?

குழந்தைகள் மனதில் நீங்காத ஓர் இடத்தைப் பெற்றுள்ளவர் நேரு. "நேருவை உங்களுக்கு ஏன் பிடிக்கும்?" என்று கேட்ட போது குழந்தைகள் அளித்த பதில் இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளது. நேருவைப் பற்றிப் பெரியவர்களுக்குக் கூடத் தெரியாத, நேருவைப் பற்றிய புதிய கண்ணோட்டத்தில் பல அருமையான நிகழ்ச்சிகளை அவர்கள் நினைவுகூர்கிறார்கள்.



எப்ப மழைபெய்யறதைப் பார்த்தாலும் நேரு மாமா ஞாபகம்தான் வரும்!
- மா. ஞானமுருகன்

எனக்கு நேருவை ரொம்பப் பிடிக்கும். ஏன்னா, தான் பொறந்த நாளே குழந்தைங்க தினமாக் கொண்டாடச் சொன்னவரு அவருதானே? உலகத்துல வேறு யாருங்க இதுபோல குழந்தைங்களை நெனைச்சி சொன்னாங்க? யாருமே இல்லியே...? அவருக்கு குழந்தைங்களை ரொம்பப் பிடிக்கும். அதனாலத்தானே எல்லாக் குழந்தைங்களும் அவரை நேரு மாமான்னு செல்லமாக் கூப்பிட்டாங்க. அவரும் குழந்தைங்க கிட்ட ரொம்ப பாசமா - அன்பா இருப்பாரு.

ஒருதரம் அவரு பள்ளிக்கூடத்துக் குழந்தை ஒன்று மழையில நனைஞ்சிண்டு போறதைப் பார்த்தாரு. ரொம்பப் பரிதாபப்பட்டாரு. அதனால அந்தப் பள்ளிக்கூடத்துல படிக்கிற குழந்தைங்க எல்லாருக்கும் ரெய்ன் கோர்ட் வாங்கிக் கொடுத்தாரு. அதுல இருந்து -

முல்லைக் கொடிய பார்த்ததும் பாரி வள்ளல் ஞாபகம் வர்ற மாதிரி எனக்கு எப்ப மழை பெயறதைப் பார்த்தாலும் நம்ப நேரு மாமா ஞாபகம்தான் வரும். இதனாலேயே எனக்கு நேருவை ரொம்பப் பிடிக்கும்.

சின்ன வயசுலேயே நேரு ரொம்ப புத்திக் கூர்மை உடையவராய் இருந்தாராம். ஒரு தடவை சிறுவன் நேரு, குழந்தைங்களோட பந்து விளையாடிக்கிட்டிருந்தப்போ பந்து ஒரு வளைக்குள்ளாற போயிடிச்சாம். எல்லாரும் எப்படி எடுக்கிறதுன்னு தவிச்சப்போ, நம்ம நேரு உடனே ஒரு பக்கெட் தண்ணியைக் கொண்டு வரச் சொல்லி அந்த வளைக்குள்ளாற தண்ணியை ஊத்தினாராம். உடனே பந்து வெளியே வந்திடுச்சாம்! எத்தனை சமயோசித புத்தி பார்த்தீர்களா?

தான் இறந்த பிறகு தன்னோட சாம்பல விமானத்துல இருந்து பாரத நாடு முழுவதும் தூவச் சொன்னாரு. அவருக்கு இந்த நாட்டின் மேல இருந்த பற்றும் பாசமும் யாருக்குங்க வரும்?

நேரு மாமாவைப் பத்தி சொல்றதுன்னா எவ்வளவோ சொல்லலாம். அதுக்கு ஒரு அளவே கிடையாது. அவரைப் போல் குழந்தைங்களிடம் அன்பா இருந்தவரை இனி எங்கே காணப் போகி

றோம்னு நினைத்தால் அழுகையே வருது.

நாட்டு விடுதலைக்காக ரொம்பக் கஷ்டங்களை அனுபவிச்சாரு. பெரிய பணக்காரரு. ரொம்ப வசதியா வாழ்ந்து சுகத்த அனுபவிச்சிருக்கலாம். ஆனா தன் னோட சுகத்தை மறந்து, வீட்டை மறந்து ஜெயிலுக்கெல்லாம் போய், நாட்டுக் காகப் பாடுபட்டாருன்னா அவருக்கு எத்தனை பெரிய தியாக மனசு?

எல்லாக் குழந்தைங்களுக்கும், அவ மாதிரி எல்லாக் குழந்தைகளுக்கும் நாட்டுப் பற்றும் தியாகமும் வரணும்னு நான் ஆசைப்படறேன்.



எங்கே பலூனைப் பார்த்தாலும்
நேரு மாமா நினைப்புத்தான்
வரும் - ஆர். வசந்தி

நேரு மாமா படம் வரையறேனே. தெரியலே? ஏன்னா அவரை ரொம்பப் பிடிக்கும்.

நேருஜி சிறுவனா இருந்தப்போ குதிரைச் சவாரி செய்யறதில் ரொம்ப ஆசையாம். யோகாசனம், தேகப் பயிற்சி இதெல்லாம் கூட அவருக்குப் பிடிக்கு மாம். ஒரு தடவை ராவி நதி தீரத்துல நடந்த மாநாட்டுக்கு நேருஜி வெள்ளைக் குதிரை மேலே சாவரி செய்துகிட்டே வந்தாராம்! அவரோட கம்பீரத்தையும், துணிச்சலையும் பார்த்து எல்லாரும் ஆச் சரியப்பட்டாங்களாம். எத்தனை வித்தி யாசமானவர் பார்த்தீர்களா?

இயற்கைக் காட்சிகளை ரசிப்பதில் நேருவுக்கு ரொம்ப இஷ்டமாம். காஷ் மீர், இமயமலைச் சாரல் இங்கெல்லாம் பனிபடர்ந்த மலைகளையும், அடர்ந்த காடுகளையும் பார்த்துப் பார்த்து ரசிப் பாராம். பனிக்கரடி, புலிக்குட்டி போன் றவைகளுடன் பயமில்லாமல் விளை யாடுவாராம். எனக்கு ஓவியம் வரைய வும், இயற்கைக் காட்சிகளை ரசிக்கவும் ரொம்பப் பிடிக்கும். நேருஜிக்கும் இப்படித்தான்னு தெரிஞ்சதுலேருந்து எனக்கு அவரை ரொம்ப பிடிச்சுப் போச்சு.

நேரு மாமாவோட ஒவ்வொரு பிறந்த நாளுக்கும், அவரைத் தராசு தட்டுல உக்கார வைச்சு அவரோட எடைக்கு எடை தானியங்களை நிறுத்தி, அதை ஏழைகளுக்கு தானம் பண்ணு வாங்களாம். நேருவுக்கு இது ரொம்பப் பிடிக்கும். மத்தவங்களுக்கு ஏதாவது உதவி செய்து கொண்டிருக் கவே விரும்பிய அவர், ''என் பிறந்த நாளை தினமும் ஏன் கொண்டாடக் கூடாதான்னு?'' மோதிலால் நேரு கிட்டே கேட்டாராம்! எத்தனை நல்ல உள்ளம் பார்த்தீர்களா?

ஏழைகளிடம் அவருக்குப் பரிவு ஜாஸ்தி. வேலைக்காரங்ககிட்டே பிரிய மாவும், மரியாதையாவும் நடந்துக்கு வார். ஒரு தடவை வயதான தாத்தா ஒருத்தர் பலூன் வித்துக்கிட்டு வந்தார். பலூன் விற்காததால தாத்தா கவலை யோட இருந்தார். அவராலே ரொம்ப தூரம் அலைய முடியலை. நேரு அந்த வழியா வந்தார். எல்லா பலூனை யும் விலை பேசி வாங்கிக்கிட்டார். தன் னிடம் பணம் இல்லாம, நண்பர் கிட்டே கடன் வாங்கி அந்தத் தாத்தா வுக்குக் கொடுத்தார். எல்லாக் குழந் தைகளுக்கும் ஆளுக்கொரு பலூனைக் கொடுத்தார். பலூன் தாத்தாவுக்கும் லாபம். குழந்தைகளுக்கும் மகிழ்ச்சி. நேருவுக்கும் குழந்தைகளுக்கு பலூன் வாங்கித் தந்ததில் மகிழ்ச்சி. இத்தனை பெரிய மனது எந்தத் தலைவருக்கு இருந்தது? குழந்தைகளைப் பொறுத்த வரை நேருவுக்கு இணை வேறு யார்?



சிறைச்சாலையை திருத்தலம்னு
சொன்னவரு நேரு - ஜி. தேவன்

நேருவை எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஏன்னா அவரோட கள்ளமில்லாத மனம் - கள்ளமிற்ற சிரிப்பு யாருக்கு வரும்? வெள்ளையர்களை வீரத்தோட எதிர்த்தாரு. ரொம்ப அழகாகவும், புத்திசாலித்தனமாகவும் படிக்காதவங்க கூட பாராட்டறபடியும் பேசுவாரு. சிந்திச்சுப் பேசுவாரு. தேசபக்தி மிக்கவரு. பெரியவங்களை மதிக்கும் பண்பு உடையவரு. அவரை நவபாரதச் சிற்பின்னு சொல்லுவாங்க. உழைப்பாளிகளை மதிச்சவரு நேரு. இந்தியா பொருளாதரத் துறை அறிவியல் துறை, தொழில் துறை இப்படிப் பல துறையிலேயும் முன்னேற ணும்னு ஒரே கொள்கையோடு உழைச்சவரு நேரு.

அன்னை இந்திரா காந்தியை, நம்ம ராஜீவ் காந்தியை நம்மால மறக்க முடியுமா? முடியாதே. அப்படிப்பட்ட ஒப்பற்ற இந்திராவைத் தந்தவரு நேரு. இந்தியத் தாயா இந்த நாட்டுக்கு உழைச்சு அதுக்காக உயிரையும் கொடுத்த இந்திராவுக்குத் தந்தை யாச்சே. அவரை எப்படி மறக்க முடியும்? அவரை குழந்தைங்க எல்லாரும் நேரு மாமான்னு கூப்புடுவாங்க. குழந்தைங்கன்னா அவருக்கும் பிடிக்கும். அவரை குழந்தைங்களுக்கும் பிடிக்கும்.

அதனால எனக்கு நேருவை ரொம்பப் பிடிக்கும். நாட்டுக்காக விடுதலைக்குப் பாடுபட்டவர். பொதுச் சேவை செய்யறதுல அவரை மாதிரி வேற யாரும் இருக்க முடியாது. சின்ன வயசுலேயிருந்தே அவருக்கு இந்த பொதுப் பணியெல்லாம் பிடிக்கும். பிறருக்குச் சேவை செய்தவரு. தனக்காக வாழாம, நாட்டுக்காகவே அல்லும் பகலும் அயராம உழைச்சவரு. சிறைச்சாலையே திருத்தலம்னு சொன்னவரு. காந்தியிடத்துல ரொம்ப பிரியமா இருந்தார்.

படிப்பதில் நீண்ட நேரம் செலவு செய்வார். வீண்பொழுது போக்க மாட்டார். இந்த ஒன்றுக்காகவே எனக்கு நேருவை ரொம்பப் பிடிக்கும். சுறுசுறுப்பா இருப்பாரு.

உலகம் பூரா சமாதானமா இருக்கணும்னு உழைச்சாரு. நேர்மை, நாணயம், நம்பிக்கை, கட்டுப்பாடு, மனிதப் பண்பு, குழந்தைகளிடம் அன்பு இத்தனைக்கும் மொத்த உருவம்தான் நேரு மாமா. அதனால எனக்கு நேரு மாமாவை ரொம்பப் பிடிக்கும்.



தன் பிறந்த நாளைக் குழந்தைகள்
தினமாகக்கொண்டாடச் சொன்னவர்
நேரு மாமா - சே. அஸ்வினி.

நேரு மாமாவை ஏன் பிடிக்கும் தெரியுமா? நேரு மாமாவுக்குக் குழந்தைகள் என்றால் பிடிக்கும். இன்றைய குழந்தைகள்தான் நாளைய இந்திய நாட்டின் தலைவர்கள் என்று அடிக்கடி அவர் கூறுவாரே!

பொறுமையில்லா மனிதரிடையே பொறுமையின் சிகரமாகத் திகழ்ந்தவர் நேரு மாமா. உலகமே பாராட்டும் மனிதருள் மாணிக்கமான அவர், தாய் தந்தையரிடம் மிகவும் அன்பும் பக்தியும் கொண்டவர்.

நாள் முழுவதும் வேலை செய்த பின்னர், மாமா நேரு தம் சகோதரியின் குழந்தைகளோடும், மற்றக் குழந்தை

களோடும் விளையாடுவதைக் கண்டால் நேருவின் குழந்தை உள்ளம் நன்கு புரியும் என்பதை அறிந்த பிறகும் நேரு மாமாவைப் பிடிக்காமல் இருக்குமா?

வெள்ளை ஆடை உடுத்தி, ரோஜா மலர் அணிந்து, குழந்தைகளோடு அமர்ந்து எப்போதும் புன்னகை புரிந்து கொண்டிருக்கும் நேரு மாமாவை விரும்பாத குழந்தைகளும் இருப்பார்களா?


குழந்தைகளோடு இருக்கும் சமயத்தில் நேரு மாமா எல்லாக் கவலையும் மறந்து விடுவார். தாமும் ஒரு குழந்தையைப் போலக் குதிப்பார்; ஓடுவார்; துள்ளுவார்; துடிப்பார்; விளையாடுவார். உலகத் தலைவரான நேரு குழந்தைகளுடன் மகிழவும் சிறிது நேரம் ஒதுக்கி தினமும் அவர்களோடு மகிழ்ந்திருப்பார். இப்படிப்பட்ட நேரு மாமாவை எனக்குப் பிடிப்பதில் என்ன ஆச்சரியம் உள்ளது?

தன் பிறந்தநாளைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடச் சொன்ன நேரு மாமா, மென்மையான இதயம் உடையவர். பெரியவர்களை மதிக்கும் தன்மை கொண்டவர். இயற்கையை ரசிப்பவர். தன் நண்பர்களுக்கோ, பழகியவர்களுக்கோ பிறந்த நாளோ திருமண நாளோ என்றால் மறக்காமல் வாழ்த்தி பரிசுப் பொருள் தருவார்.

இத்தகைய உயர்ந்த குணங்களைக் கொண்ட நேரு மாமாவை எனக்கு மிகவும் பிடிக்கும் என்றால் வியப்பில்லை.

''அதோ பார் காரு
காருக்குள்ள யாரு
நம் நாட்டு நேரு''

என்று நாங்கள் சிறு வயது முதலே நம் நேரு மாமாவைப் பற்றிப் பாடி வருகிறோம். அனைவரும் தெரிந்து வைத்துள்ள நேரு மாமாவை எனக்கு மட்டும் அல்ல; குழந்தைகள் அனைவர்க்குமே பிடிக்கும். எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும்.



சின்னப் பொண்ணுதானேன்னு அலட்சியப்படுத்தாம சிறுமி இந்திராவுக்குக் கடிதம் எழுதியிருக்காரே!
- எஸ். வி. குமாரவிஜயன்

நேரு மாமாவை எனக்கு ஏன் பிடிக்கும் தெரியுமா? எப்பவும் சிரித்த முகத்தோடவே இருப்பாரு அதனாலதான். அவரைப் பார்க்கற போது நம்மகிட்ட அன்பைக் கொட்ட ஓடி வர ஒரு குழந்தையைப் பார்ப்பது போலவே இருக்கும். அவருக்குக் குழந்தைகன்னா உயிராம். குழந்தைகள்கிட்டதான் எதிர்கால இந்தியா இருக்குன்னு அடிக்கடி சொல்வாராம். வெளியில அவசர வேலையாகப் போகும் போது கூட, வழியில குழந்தைகளைப் பார்த்துட்டா, காரை நிறுத்தச் சொல்லி இறங்கிடுவாராம். அவங்ககிட்டே ரெண்டு வார்த்தைகளாவது பேசி, சிரிச்சுட்டுப் போனாத்தான் அவருக்கு மகிழ்ச்சியாம்.

வீட்டுல அம்மாவுக்கு எப்பப் பாரு வேலை. அப்பாவுக்கும் எப்பப் பாரு ஆபீஸ் வேலை. நம்ம கூட சிரிச்சு பேசவே மாட்டேங்கறாங்க. கேட்டா, நேரமே இல்லேங்கறாங்க. ஆனா இந்தியாவின் பிரதம மந்திரியா பெரிய பதவியில இருந்த நேரு மாமா, தனது ஏராளமான வேலைகளுக்கு நடுவுல கூட, குழந்தைகளோட சில நிமிடங்களாவது இருந்தாருன்னு படிக்கிற போது எனக்கு அழுகையே வந்துடறது. எத்தனை பெரிய அன்பு காட்டும் மனசு?

எங்கப்பா வெளியூர் போனா எம் பேருக்கு அங்கிருந்து கடிதம் போட மாட்டாரு. அம்மா பேருக்குத்தான்

எழுதுவாரு. என் பேரைப் போட்டு, எனக்கும் ஒரு கடிதம் எழுதினா எனக்கு எவ்வளவு பெருமையா இருக்கும்? நேரு மாமா ஜெயில்ல இருந்த போது கூட இந்திரா பேருக்குக் கடிதம் எழுதி இருக்காரே! சின்னப் பொண்ணுதா னேன்னு அலட்சியப்படுத்தாம எப்படிப் பெருமைப்படுத்தியிருக்காரு பார்த்தீர்களா இந்த மாதிரி யாரு செஞ்சிருக்காங்க?

நேரு மாமாவைப் பத்தி எத்தனையோ சொல்லிகிட்டே போகலாம். எனக்குப் பிடித்த ஒண்ணை சொல்றேன்.

நம்ம நாடு விடுதலை அடையறதுக்கு முன்னே, ஒரு கூட்டத்துல போலீஸ்காரங்க தடியடி செய்துகிட்டு இருந்தாங்க. அந்த வழியா கார்ல போன நேரு மாமா இதைப் பார்த்தாராம். கார்லேர்ந்து குதிச்சு, போலீஸ்காரர் கிட்டே ஓடிப் போய், அவரோட தொப்பியை பிடுங்கிக்கிட்டு, இப்படியா ஜனங்களை கண்மூடித்தனமா அடிக்கிறது எவன் உனக்குப் போலீஸ் வேலை குடுத்ததுன்னு கோபமா கேட்டாராம்.

கூட வந்த அவரோட நண்பர்கள் ''உன் கோபம் நியாயமானதுதான், இருந் தாலும் போலீஸ்காரரோட தொப்பியைப் பறிக்க, உனக்கு என்ன அதிகாரம் இருக்குன்னு?'' கேட்டாங்களாம்.

தனது தவறை உணர்ந்த நேரு மாமா, தொப்பியை போலீஸ்காரர்கிட்டே கொடுத்துட்டு ''சாரி'' சொன்னாராம். எத்தனை பெரிய மனசு! தவறு செய்தா ஒப்புக்கிற குணமும், அதுக்காக மன்னிப்புக் கேட்டு வருந்தற பெருந்தன்மையும் நினைச்சு நினைச்சு உருக வேண்டியவை. அது நமக்கும் வரணும்.


நேரு மாமா ரொம்ப நல்லவர். வல்லவர். தன்னலம் இல்லாம உழைச்ச தலைவர். எப்பவும் பிறர் நலம் காப்பதில் கண்ணும் கருத்துமா இருப்பார். அவரைப் பத்தி நான் நிறையப் படிச்சி தெரிஞ்சுக்கிட்டேன். மழலை மொழி பேசும் குழந்தைங்கன்னா அவருக்கு உசிரு. ரொம்பப் பிரியமா இருப்பாரு. அவரு எந்த நாட்டுக்குப் போனாலும் அவரைச் சுத்திக் குழந்தைங்கதான் நிறைய இருப்பாங்க. அதனால எனக்கு



நேருவை ரொம்பப் பிடிக்கும். நாட்டுக்காக உழைத்தாரு. ஜெயிலுக்கெல்லாம் போயிருக்காரு. காந்தித் தாத்தாவோட கூட இருந்து நாட்டு விடுதலைக்குப் போராடினாரு. துன்பத்தை இன்பமா நினைச்சு ஏத்துப்பாரு. உயர்ந்த உள்ளம் கொண்டவரு நேரு. கடமை தவறாதவரு. இனிமையாப் பேசுவாரு. நல்ல துணிச்சல்காரரு. உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பது இல்லையேன்னு சொன்ன மகாகவி பாரதியார் பாட்டுக்கு உதாரணமா வாழ்ந்தவரு நேரு.

தொழில் வளர்ச்சிக்கு ரொம்பப் பாடுபட்டாரு. பாரத நாடு பல துறைகளிலும் முன்னேறணும்னு ஆசைப்பட்டாரு. இரவு பகலா சிந்திச்சு செயல்படுவாரு. இவரு மாதிரி வேற ஒரு தலைவரு கிடைக்கிறதே அருமை. அவரோட நாட்டுப்பற்றும், குழந்தைங்ககிட்ட அவருக்கிருந்த பாசமும், பற்றும் - வேறு யாருக்குங்க வரும். நேருன்னா நேருதாங்க. அவரு உலகம் பூரா சுத்தியிருக்காரு. பாரத நாட்டை முன்னுக்குக் கொண்டு வரணும்னு நெனைச்சி பல திட்டங்களைத் தீட்டி அரும்பாடுபட்டவரு நேரு. அதோட இந்த உலகமெல்லாமே சண்டையில்லாம சமாதானமா இருக்கணும்னு ஆசைப்பட்டு உழைச்சாரு. நம்ம நாட்டுக்கு நீண்ட நாளு பிரதமரா இருந்தாரு. அவரை எனக்கு ரொம்ப ரொம்ப புடிக்குங்க.

பேட்டி, புகைப்படம் :
பாலகிருஷ்ணன்



கால்களைத் தேய்ப்பது ஏன்?

சர்க்கரைப் பொங்கலைத் தின்றபடி குமார் படித்துக் கொண்டிருந்தான். படிக்கும் சுவையில், பொங்கலுக்கு என்ன நடக்கிறது என்பதை அவன் கவனிக்கவில்லை.

தட்டில் இருந்த பொங்கலில், பொங்கலே தெரியாத அளவுக்கு மொய்த்திருந்தது ஈக்கள் கூட்டம். சாக்கடையில் உட்கார்ந்து விட்டு, அதே காலோடு பறந்து வந்த புதிய ஈ ஒன்று, அந்தக் கும்பலுக்கு இடையே புகுந்து இடம்பிடித்துக் கொண்டது!

''ஏற்கெனவே ஒரே நெரிசல். நீ வேற இப்படிப் புகுந்து உட்கார்ந்துக்கறியே!'' என்று சாடியது ஒரு பெரிய ஈ.

''சாக்கடையை விட இந்தப் பொங்கல் ஒன்றும் ரொம்ப சுவையானது இல்லே. இந்தப் பையன் குமார், ஈ அடிச்சான் காப்பிக்காரனாம்! அதான், அவன் எப்படி நம்மை அடிக்கிறான்னு பார்க்க, அவன் சாப்பிடும் பொங்கலுக்கு வந்திருக்கேன்'' என்று தன் நூற்றுக்கணக்கான கூட்டுக் கண்கள் நிறைந்த இரண்டு பெரிய வட்டக் கண்களை உருட்டிப் பார்த்தது சாக்கடை ஈ! அது முன்பக்கக் கால்களைத் தேய்த்த போது கால்களின் நுனி விரல்களில் செறிந்திருந்த மெல்லிய மயிர்க்கால்களில் ஒட்டியிருந்த கிருமிகள், பொலபொலவென்று பொங்கலில் உதிர்ந்தன! முன் பக்கக் கால்களால் தலை, கழுத்துப் பகுதிகளைத் தேய்க்க, பின்பக்கக் கால்கள் இறக்கை வால் பகுதிகளைத் தேய்த்து தன்னை சுத்தப்படுத்திக் கொண்டது சாக்கடை ஈ!

''எத்தனை கி ரு மி க ளை உதிர்த்தே?'' என்று கேட்டது பெரிய ஈ.

''முன்பக்கக் கால்களை உதிர்த்த போது கவனிச்சுட்டியா?'' என் று பாராட்டிய சாக்கடை ஈ, ''இரண்டு கால்களிலுமாகச் சேர்த்து நாற்பது இலட்சம் கிருமிகளைத்தான் கொண்டு வந்து

ரேவதி

உதிர்க்க முடிந்தது'' என்று குறைப் பட்டது.

உள்ளேயிருந்து ஒரு வயதுக் குழந்தை ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்தாள் குமாரின் அம்மா. அந்தக் குழந்தை குமாரின் தம்பிதான். அது வாய் ஓயாமல் இருமிக் கொண்டே இருந்தது. இருமல் என்றால் சாதாரணமான இரு மல் அல்ல. அடுக்கடுக்காக, தொடர்ந்து இரண்டு மூன்று நிமிடங்களுக்கு, மூச்சே போய் விட்டுத் திரும்பி வருவது போன்ற தவிப்புடன் கூடிய கக்குவான் இருமல்!

''இந்தக் குழந்தை, இப்படிக் கக்கு வான் இருமலால் கஷ்டப்படறதே... இதற்கு யார் காரணம்னு தெரியுமா?'' - பெரிய ஈ கேட்டது.

''நான்தான்னு தெரியும். போன மாதம் பக்கத்து வீட்டு காசநோய்க்கார ரின் எச்சிலில் உட்கார்ந்த போது, என் கால்களில் கிருமிகள் தொற்றிக் கொண்டு விட்டன. அது தெரியாமல் நான் போய் இந்தக் குழந்தை சாப்பிடும் பாலில் உட்கார்ந்து விட்டேன். காசக் கிருமிகள் பாலில் கலந்து போச்சு. அந்தப் பாலைக் குடித்து, இந்தக் குழந்தை கக்குவான் நோய்க்கு இலக் காகி விட்டது'' என்றது சாக்கடை ஈ.

கூட்டமாகப் பறந்த ஈக்கள் குமாரின் காதுக்கு அருகே சென்று 'நொய்' என்று சத்தமிட்டுப் பறந்தன. ''சை, சனியன்!'' என்று புத்தகத்தில் இருந்து கவனத்தைத் திருப்பி விரட்டினான் குமார்.

''உடம்பை அதிக மாக அலட்டிக்காமல் பறக்கும் புறாவோ, கிளியோ, பட்டாம்பூச் சியோ பறந்தால் ஆசை யோடு பார்க்கிறாங்க. நாம நிமிஷத்துக்கு பன் னிரண்டாயிரம் முறை இறகுகளை அடிச்சிக்



கிட்டு, உடம்பை வருத்திப் பறக்கிறோம். இந்தக் குமார் பையனுக்கு இதை ரசிக்கத் தெரியலையே! சனியன்னு விரட்டறானே?'' என்று அலுத்துக்கொண்டது பெரிய ஈ.

''சமையலறையில் கொஞ்சம் சர்க்கரை சிந்தியிருந்ததே... அதை யாராவது போய்த் தின்கிறது தானே?'' என்று கேட்டது சாக்கடை ஈ.

''அதை அந்த வெல்லக் கட்டிக் கூட்டம் கும்பலா மொய்த்து, திரவமாக்கி எடுத்துக்கிட்டுப் போய்டுத்து'' என்றது குளியலறை ஈ.

''அந்தச் சிந்திய சர்க்கரையை நம்ம இனத்தார்தான் திரவத்தைச் சுரந்து, கரைய வைத்து, உறிஞ்சிக்கிட்டாங்க என்பது வீட்டுக்கார அம்மாவுக்குத் தெரியலே. அந்த மளிகைக் கடைக்காரன்தான் கசிவு சர்க் கரையைக் கொடுத்து ஏமாத்திட் டான்னு திட்டிக்கிட்டேயிருந் தாங்க'' என்றது பெரிய ஈ.



அறிவியல் உண்மைகள்

★ இரண்டு இறக்கைகள் இருந்தாலும் ஈ பூச்சி இனமே (DIPTERA)

★ இதன் இரண்டு பெரிய கண்களும், நூற்றுக்கணக்கான கூட்டுக் கண்களின் தொகுப்பே!

★ ஈ ஒரே சமயத்தில் ஒரு காலில் இருபது இலட்சம் கிருமிகளைக் கொண்டு வந்து தான் உட்காரும் பண்டத்தில் உதிர்க்கும்!

★ ஈ பறக்கும் போது ஒரு நிமிடத்திற்கு 12,000 முறை இறகுகளை அடிக்கிறது!

★ எதையும் திரவமாக்கிய பிறகு தான் ஈயினால் உறிஞ்சிக் குடிக்க முடியும். திரவமாக மாற்றிக் கரைய வைக்கும் சக்தியுடைய திரவம் இதன் உறிஞ்சு குழாயில் சுரக்கிறது.

★ மூக்கு, வாய், பல் எதுவுமே இல்லாத ஈக்கு மோப்ப சக்தி உண்டு. முகத்திற்கு முன்னால் இருக்கும் உணர் கொம்புகள் இப் பணியைச் செய்கின்றன.

★ நான்கு முதல் ஐந்து நிமிடங்களுக்கு ஒருமுறை, ஈ தான் உட்காரும் பொருளில் மலம் கழித்து நோயைப் பரப்புகிறது.

★ இருட்டில் ஈக்குக் கண் தெரியாது.

★ ஈயின் ஆறு கால்களிலும் சுரக்கும் திரவம், தலைகீழாக எதிலும் ஒட்டிக் கொண்டு உட்கார, அப்படியே நகர வசதியை அதற்குத் தருகிறது!

★ ஈயின் ஆயுட்காலம் அதிக அளவு இரண்டு மாதங்களே!

"பக்கத்து வீட்டில் பால் பாயசம் பண்றாங்க. கமகமன்னு வாசனை மூக்கைத் துளைக்கிறது!" என்று பறந்து வந்து சேர்ந்து கொண்டது கிணற்று ஈ.

"என்னது! மனிதர்கள் சொல்ற மாதிரியே சொல்றே! நமக்கு ஏது மூக்கு, வாய், பல் எல்லாம்?" என்று குறுக்குக் கேள்வி கேட்டது பெரிய ஈ.

"மனிதர்களோட பழகிப் பழகி அவர்கள் பேச்சே வந்து விட்டது. உணர்வு கொம்புகள் துடிக்கின்றனன்னு சொல்லணும். சரிதானே?" என்று திருத்திக் கொண்டது கிணற்று ஈ.

"போன வாரம் இந்தக் குமாரோட அப்பா நம்மை ஒழித்துக் கட்ட பூச்சி மருந்து வாங்கி வந்து அடிச்சார் இல்லையா? நாமதான் தப்பிச்சுக்கிட்டோமே... அவருக்குத் தண்டனை தர நான் என்ன பண்ணினேன் தெரியுமா? கொடியில் அவர் தன்னுடைய சட்டையைத் தோய்த்துப் போட்டிருந்தார். அதில் போய் நம்ம இனத்தோடே உட்கார்ந்து காயும் வரை இருந்தோம். நான்கு நிமிடங்களுக்கு ஒருமுறை நம்ம இனத்தாருங்க போன மலம், சட்டையில புள்ளி புள்ளியா காய்ந்து போச்சு. அதைப் போட்டுக்கிட்டு அவர் உடம்பைச் சொறிந்து கொண்ட காட்சியை இப்போ நினைச்சாலும் ஆனந்தமாக இருக்கு" என்றது பெரிய ஈ.

ஈ மொய்த்திருந்த பொங்கலை அருவருப்புடன் பார்த்த குமார், தட்டுடன் அதைக் கொண்டு போய் சாக்கடையில் வீசி விட்டு வந்தான்.

"இவன் புத்திசாலி. இந்தப் பொங்கலை மட்டும் இவன் தின்றிருந்தால், டைபாய்டு, காலரா, சீதபேதி, மஞ்சள் காமாலை என்று இதில் ஏதாவது ஒன்று இவனுக்கு வந்திருக்கும்" என்றது சாக்கடை ஈ.

"இருட்டிக்கிட்டே வருது," என்று பறந்த ஈக்கள், தோட்டத்தில் மரக் கிளைகளிலும், துணி உலர்த்தும் கொடிகளிலும், உத்தரத்திலும் உட்கார்ந்து கொண்டன.

நோயைப் பரப்பும் ஈ இனம், எப்படி எல்லா இடங்களிலும் தலைகீழாகக் கூட உட்கார்ந்து கொள்கிறதா என்று வியந்தான் குமார்.

புளியோ புளி



'புளியம் பழம்' ஆகா! நினைத்த மாத்திரத்திலேயே எச்சில் ஊறும் சுவை கொண்ட பழமாயிற்றே! கிராமத்துச் சிறுவர்களுக்கு சாலை ஓரமாக வளர்ந்திருக்கும் புளியங்காய்களையும், நண்பர்களின் மண்டையையும் பதம் பார்த்து அதன் விளைவுகளை அனுபவித்த அனுபவம் கிட்டியிருக்கும். இந்தப் புளியமரம் பிறந்த இடம் மத்திய ஆப்பிரிக்கா. வெகு காலம் வரை இந்நாட்டு மக்கள் மட்டுமே இதன் புளிப்புச் சுவையை ஆனந்தமாக அனுபவித்து வந்தனர். பின்னர் மெல்ல, மெல்ல.. யாத்ரீகர்களின் உதவியால் இந்தியா மற்றும் மேலை நாடுகளில் இம் மரம் பரவியது.

இன்று உலகம் முழுவதிலும் காணப்படும் ஒவ்வொரு புளிய மரமும் 80 லிருந்து 100 அடி உயரம் வரை வளர்கிறது. 'புடிச்சாலும் புளியங் கொம்பா புடி' என்கிறார்களே அது என்ன தெரியுமா? புளியமரத்தின் ஒரு கொம்பைப் பிடித்தால், 'மளமள' வென்று பிடித்துக் கொண்டு ஏறி உச்சிக் கிளைக்குப் போய் உயரமான இடத்தைப் பிடித்துவிடலாம். புளியங்கொம்பைப் போன்ற ஒருவரைப் பிடித்து விட்டால் அதே போல் அதிக சிரமம் இல்லாது முன்னுக்கு வந்து விடலாம் என்பதே இதன் பொருள். இதன் ஆயுள் ரொம்ப ரொம்ப கெட்டியாகும். உதாரணத்திற்கு மைசூர் பிருந்தாவனத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முந்திய எள்ளுத் தாத்தாவுக்கு எள்ளுத் தாத்தா காலத்திய புளிய மரம் இன்றும் தளதள வென்று செழிப்பாகக் காய்த்துக் கொண்டிருக்கிறது!

ஆங்கிலேயர்கள் சுதந்திரத் தியாகிகளையும், அரசர்கள் ராஜத் துரோகிகளையும் புளிய மரங்களில்தான் தூக்கில் இட்டனர்.

இரண்டு முதல் ஐந்து அங்குலம் வரை வளரும் இதன் இலைகள் கூடப்





புளிப்புத் தன்மை உடையவைதான். இம் மரத்தில் மற்றுமோர் சிறப்பு என்ன வென்றால் மற்ற மரங்களைப் போல் இலையுதிர் காலத்தில் 'பொலபொல' வென்று தன் இலைகளையெல்லாம் உதிர்த்துவிட்டு 'மொட்டை'யாக இது காட்சியளிப்பதில்லை! எப்பொழுதுமே இலைகளுடன் பச்சைப் பசேல்தான்!

சிவப்பு மற்றும் மஞ்சள் நிறம் கலந்த புளியம் பூக்கள் ஏப்ரல் மாதத்திலிருந்து ஜூன் வரை மலர்கின்றன. காய் பிடிப்பது பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை. அதாவது குளு குளு சீசனில்.

இந்தியாவில் அதிலும் தென்னிந்தியாவில்தான் மிகமிகஅதிக அளவு 'புளி' உணவுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. புளியங்கொட்டைகள் தாயம் ஆடுவதற்கு மட்டுமல்லாமல் கோந்துடன் சேர்ந்து சிமெண்ட்டாகவும், மருந்துக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. புளிய இலைகளிலிருந்து வர்ணம் தயாரிக்கப்படுகிறது. மரமானது பல்வேறு மரச்சாமான்கள் தயாரிக்க உதவுகிறது.

பகலில் ஆக்ஸிஜனை வெளிப்படுத்தி சுற்றுப்புற சூழலை இனிமையாக்குகிறது புளிய மரம்.

– சத்தி ஏ.ஜே. ஜப்பார்.

"உன் பாடு பரவாயில்லை நீர் யானை அண்ணா. உன் வாய்க்குப் பக்கத்திலேயே வயிறும் இருக்கு. ஆகாரத்தை லபக் லபக் குன்னு முழுங்கிடுவே! நான் சாப்பிட ஆரம்பிச்சா ஆகாரம் வயிற்றுக்குள்ளே போகவே அரை மணி நேரம் ஆயிடுதே!"





"தாத்தா! நாம ரெண்டு பேரும் ஒரு ஒப்பந்தம் செஞ்சுப்போம். நீங்க என்னோட ப்ரோக்ரஸ் ரிப் போர்ட்ல அப்பாவோட கையெழுத்தை வாங்கித் தர்றீங்க. நான் உங்க ப்ரோக்ரஸ் ரிப்போர்ட்ல அப்பா கையெழுத்தை வாங்கித் தர்றேன், சரிதானே?"

– கே. சோமசேகர்

லிதுவேனியன் கதை



பிழைத்துப் போ!

ஒரு ஏரித்துறையிலே மூன்று சலவைத் தொழிலாளர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். மூவரும் பெண்கள். மூவரின் பேச்சும் திருமணத்தைப் பற்றித் திரும்பியது.

''நல்ல அழகான மாப்பிள்ளை கிடைத்தால் நான் கல்யாணம் செய்து கொள்ளுவேன்'' என்றாள் ஒருத்தி.

''அழகு இருக்கிறதோ இல்லையோ. பணமும் பட்டாடையும் நிறைய எவன் தருவானோ, அவனுக்கே நான் மாலையிடுவேன்'' என்றாள் இரண்டாமவள். ''நீ ஏன் சும்மா இருக்கிறாய்? நீ எப்படிப் பட்டவனைக் கல்யாணம் செய்து கொள்வாய்?'' என்று மூன்றாவது பெண்ணை இருவரும் கேட்டனர்.

மூன்றாவது பெண் அழகாக இருந்தாள். மூவரில் இளையவள் அவளே. அவள் அடக்கமான குரலில், ''எனக்கு அழகனும் வேண்டாம். பணக்காரனும் வேண்டாம். அன்பாக இருப்பவன்தான் வேண்டும். அப்படிப்பட்ட ஒருவனைத்தான் நான் நேசிக்க முடியும்'' என்றாள்.

''அடியே! என்ன பேச்சுப் பேசுகிறாய்? நாம் எல்லாரும் இந்தப் பேட்டை நாயக்கின் (தலைவரின்) குடிகள். அவர் என்ன சொல்கிறாரோ அதைக் கேட்க கடமைப்பட்டிருக்கிறோம். உன்னைப் போன்ற அழகியைக் கண்டால்

தமிழில்: தம்பிசீனிவாசன்

யாரும் விரும்புவார்கள். அவரே வந்து பெண் கேட்டால் கூட நீ மாட்டேன் என்பாயா!'' என்று பேச்சைத் தொடர்ந்தனர் இருவரும்.

சிறியவள் சற்றும் தயங்கவில்லை. ''ஆமாம். நாம் நாயக்கின் குடிமக்கள் தான். அவர் ஏவும் எந்த வேலையையும் செய்யக் கடமைப்பட்டவர்கள்தான். ஆனால், நம்முடைய திருமணம் கூட அவர் விரும்பும்படிதானா நடக்க வேண்டும்? இது அநியாயம். எனக்குப் பணமும் வேண்டாம், அழகும் வேண்டாம். அன்பு காட்டும் குணமுடையவன் தான் வேண்டும்'' என்று சற்றே உரத்த குரலில் சொல்லி விட்டாள்.

அந்தச் சமயம் பார்த்து நாயகரும் (தலைவர்) அவரது மெய்க்காப்பாளனும் பணிகளைக் கண்காணிக்க வந்தார்கள். ஏரிக்கரைப் புதருக்கு அந்தப்புறம் இருந்த அவர்கள் காதிலே, இந்த மூன்று பெண் தொழிலாளர்களின் பேச்சும் நன்றாகக் கேட்டது. நாயகருக்குக் கோபமான கோபம்.

''அடேய்! அந்தச் சின்னப் பெண்ணை அடையாளம் பார்த்துக் கொள். நாளை காலை நமது மாளிகைக்கு அவளை அழைத்து வா'' என்றார் நாயக் தனது மெய்க்காப்பாளனிடம்.


அடுத்த நாள் காலை நாயக் தன் மாளிகையின் பெரிய கூடம் நிறைய நல்ல நல்ல பட்டாடைகளைப் பரப்பி வைத்தார். வெள்ளித் தட்டுகளிலே தங்க ஆபரணங்களை அடுக்கி வைத்தார். காதுக்குக் குண்டலங்கள். கழுத்துக்கு ஆரங்கள். காலுக்குத் தண்டை, கூந்தலுக்கு அணிகள் என்று எத்தனையோ விதவிதமான பளபளக்கும் நகைகள் எடுத்து வைத்தார்.

மெய்க்காப்பாளன் சின்னப் பெண்ணை அழைத்து வந்தான்.

''வா. இளவழகியே. இந்தப் பட்டாடைகளையும் நகைகளையும் பார்த்தாயா! இதெல்லாம் உனக்குத்தான். எல்லாம் திருமணப் பரிசு. உனக்குப் பரிசம் போடுகிறேன். நான்தான் மாப்பிள்ளை. என்னைக் கல்யாணம் செய்து கொள்'' என்றார் நாயக்.

''ஐயா, எனக்கு நகையும் வேண்டாம், பட்டாடைகளும் வேண்டாம். இதெல்லாம் எனக்குத் தேவையில்லை. நான் மணக்க விரும்புவது என் மீது நேசம் காட்டும் ஒருவரைத்தான். நான் இதைக் கூறுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும்'' என்று பணிவாகப் பேசினாள் சின்னப் பொண்ணு.

நாயக் வெகுண்டார். நமது ஆளுகைக்குக் கீழே உள்ள ஒரு சின்னப் பெண். நமது ஆசையை மறுப்பதாவது என்று கொதித்தார். ''அப்படியா! சரி! இதற்கு ஏற்ற தண்டனையை கண்டிப்பாக உனக்கு நான் தர வேண்டும். நாளை காலை உன் தலையைச் சீவப் போகிறேன். ஆனாலும் நீ அழகி. உலக அனுபவ அறிவு இல்லாத இளம்பெண். இந்த முறை உன்னை மன்னிக்கிறேன். போனால் போகிறது. இனியாவது நான் சொன்னபடி கேட்டால் நீ பிழைப்பாய். எங்கே, நாளை காலைக்குள் எனக்கு மூன்று இரும்புப் பட்டைகளைத் தயார் செய்து பார்க்கலாம். நீ கை வேலையில் கெட்டிக்



காரியாமே? பட்டைகள் சூரியன் போல பளபளப்பாக இருக்க வேண்டும். அதே சமயம் சந்திரன் போல குளுமையாகவும் இருக்க வேண்டும். நட்சத்திரங்களைப் போல மின்ன வேண்டும். இப்படி உறுதியாக மூன்று இரும்புப் பட்டைகளைத் தயார் செய். உன்னை மன்னித்து விடுகிறேன்'' என்று சொல்லி விட்டு 'விடு விடு'வென்று உள்ளே போய் விட்டார்.

மரண தண்டனை நிச்சயம் என உறுதி செய்து கொண்டாள் சின்னப் பெண் இளவழகி. ஒரே இரவில் உறுதி மிக்கதாக மூன்று இரும்புப் பட்டைகளைத் தயார் செய்வதாமே! இது ஆகக் கூடிய காரியமா எனக் கலங்கினாள். வாழ்வின் கடைசி நாளையாவது அமைதியாகக் கழிப்போம் என்று ஏரிக் கரைக்குப் போனாள். தனது விதியை நினைக்கவும் அழுகை வந்தது. விக்கி



விக்கி அழுதாள். கேவிக் கேவி அழுதாள்.

ஏரிக் கரைப் புதரில் உருவம் தெரியாது அருவமாக இருந்த நீர்தேவதைகள் சின்னப் பெண்ணின் அழுகையைக் கேட்டு மனம் இரங்கின. 'லாமு' என்ற அந்தத் தேவதைகள் அவளுடைய அழுகையைக் கேட்டு மனமிரங்கின. உருவம் எடுத்துக் கொண்டு சின்னப் பெண் முன்பு வந்து அவளைத் தேற்றின. அவள் கதையைக் கேட்டு ஆறுதல் கூறின. ''நீ எதற்கும் கவலைப்படாது கம்மா தூங்கு பெண்ணே. களைத்துப் போயிருக்கிறாய்'' என்று சொல்லித் தமது மந்திர சக்தியால் ஓர் ஆடும் கட்டிலை வரவழைத்து அதிலே அவளைப் படுக்கச் செய்தன. ஒரு தேவதை தாலாட்ட, மற்றொன்று தொட்டில் போன்ற கட்டிலை ஆட்ட சின்னப் பெண் தன் கவலைகளை மறந்து கண்ணயர்ந்தாள். காலையில் தான் கண் விழித்தாள்.

விழித்துப் பார்த்தால், புதர் அருகே மரக் கிளையில் மூன்று இரும்புப் பட்டைகள் தொங்கக் கண்டாள். சூரியன் போன்ற ஒளி; சந்திரன் போன்ற குளுமை; நட்சத்திரம் போல் மினுமினுப்பு. தேவதைகளுக்கு நன்றி கூறி வணங்கினாள். பட்டைகளை எடுத்துக் கொண்டு நாயக்கின் மாளிகைக்குச் சென்றாள்.

நாயக்குக்குத் திகைப்பு; மகிழ்ச்சி. ஆனாலும் இந்தப் பெண்ணைத் தண்டிக்க முடியவில்லையே என்று ஏமாற்றம். ''சரி.. சரி. இதைச் செய்து விட்டால் ஆயிற்றா? எனக்குச் சவாரி போக நல்ல ரதம் வேண்டும். அவற்றை இழுக்க உயர்ந்த சாதிக் குதிரைகள் வேண்டும். எல்லாம் வைக்க கையடக்கமான கூடு வேண்டும். இதெல்லாவற்றையும் கொண்டு வா. இல்லையென்றால் நாளை காலை உன் கை கால்களை வெட்டி விடுவேன்'' என்று மிரட்டினார் நாயக்.

சின்னப் பெண் மறுபடி ஏரிக்கரை போனாள். தனது கைகளை நீட்டி, என் கைகளே! நாளையோடு உங்கள் வாழ்வு தீர்ந்தது. ஏ, விரல்களே நாளை உங்களது இறுதி நாள். எனக்கு வேண்டியதெல்லாம் செய்து உதவிய கைகளும், விரலும், காலும் இனி எனக்கு இல்லை'' என்று புலம்பினாள்.

லாமு தேவதைகள் இதைக் கேட்டு அவள் முன்னே தோன்றின. விஷயம் என்ன என்று தெரிந்ததும், ''நீ கவலைப் படாதே. நிம்மதியாகத் தூங்கு'' என்று சொல்லி அவை பரபரவென்று வேலை செய்யலாயின.

விடிவதற்கு முன்னே எழுந்து பார்த்தாள் சின்னப் பெண். அவள் அருகே அற்புதமான குதிரை பூட்டிய ரதம் ஒன்று நின்று கொண்டிருந்தது. உள்ளங்கை மூடியபடியே இருந்ததால், அதைப் பிரித்தாள். அங்கே இருந்தது முந்திரிப் பருப்பு ஓடு! சற்று நேரத்தில் சூரியன் உதித்தது. முதல் கதிர் அவள் கரத்தில் பட்டு முந்திரிப் பருப்பு ஓட்டிலே பட்டது. உடனே, என்ன மாயம்! அது பிரிந்தது. சரசர வென்று குதிரை பூட்டிய ரதம் சிறியதாகி நேராக அந்த ஓட்டுக்குள்ளே அடக்கமாகப் பொருந்தி விட்டது. ஓடும் மூடிக் கொண்டு விட்டது!

நாயக்கின் மாளிகைக்கு ஓட்டமாக ஓடினாள் சின்னப் பெண்.



"ஏண்டா, ஸ்கூலுக்குப் போனவன் உடனே திரும்பிட்டே?"


"பாட்டி செத்துப் போச்சு!"

"உனக்கேதுடா பாட்டி?"

"வாத்தியாரோட பாட்டி!"

– எஸ். பாண்டியராஜ்

நாயக் திகைத்தாலும் மகிழ்ச்சியை வெளிக்க ாட்டவில்லை. ''இதென்ன பிரமாதம்? ஏதாவது மந்திர மாயம் தெரிந்தவர்கள் உனக்கு உதவியிருக்கலாம். இது போதாது. உன் தலை உருளத்தான் போகிறது. நாளைக் காலை எனக்கு காலம் காட்டும் மாயக் கண்ணாடியைக் கொண்டு வந்து தர வேண்டும். அது இது வரை நடந்ததையெல்லாம் காட்டுவ தோடு இனி நடக்கப் போவதையும் காட்ட வேண்டும். இப்படிப்பட்ட ஒரு மந்திரக் கண்ணாடியைக் கொண்டு வா. போ! தவறினால் உன் தலை உருளுவது நிச்சயம்'' என்று துரத்தினார் நாயக்.



''என்னக்கா கோலம் போடற, ஜொலைக்குப் போயிட்டு வர்றியா...?''

ஏரிக்கரை வாழும் தேவதை நண்பர் களிடம் தனது துயரத்தைக் கொட்டி னாள் சின்னப் பொண்ணு. ''இது கஷ்ட மான வேலைதான். ஆனாலும் எப்படி யாவது இதைத் தயாரிக்கிறோம். ஆனால், அவன் இப்படிக் கேட்டுக் கொண்டே போவதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். இனி அவன் உன் வம்புக்கு வராதபடி செய்கிறோம்'' என்றன தேவதைகள்.

பொழுது விடிந்ததும் தனது அருகே இருந்த சித்திர விசித்திர கண்ணாடி யைப் பார்த்து சின்னப் பொண்ணு புரிந்து கொண்டாள். அதைப் பத்திரமாக எடுத்துப் போய் நாயக்கிடம் கொடுத் தாள்.

''ஆகா. மாயக் கண்ணாடியே! எனது இளமைக் காலத்தைக் காட்டு!'' என்று மகிழ்ச்சியுடன் கூவினார் நாயக். கண் ணாடிக்கு உள்ளே படம் படமாகத் தெரிந்தது. ''அடடா! நான் விளையாடு கிறேனே, நான் மாமன் வீட்டிலே கொட் டம் போடுகிறேனே! குதிரை ஏற்றம் கற்கிறேனே! இதோ நீச்சல் ஆடுகி றேனே'' என்றெல்லாம் காட்சிகளைப் பார்த்து மகிழ்ச்சிக் கூச்சல் போட்டார் நாயக்.


''சரி சரி. கடந்த காலம் போதும். இனி நடக்கப் போவது என்ன?'' என்று முகக் கண்ணாடியை மறுபுறம் திருப்பி னார் நாயக். அந்தப் பக்கமும் கண்ணாடி பளபளவென்று இருந்தது. அதிலே தோன்றிய முதல் படத்தைக் கண்டதும் நாயக் பதறிப் போய் விட்டான்! காரணம் அவர் ஒரு தூக்குமரத்திலே தொங்கிக் கொண்டிருந்தார். ''ஐயோ, ஐயோ!'' என்று கதறிப் பதறிய அவர் அந்தக் கண்ணாடியைக் கீழே போட்டு விட் டார். அது சுக்குநூறாக உடைந்து தெறித் தது.

''ஐயா. இது மந்திரக் கண்ணாடி யாச்சே! இதை உடைத்தால் தேவதை களுக்குக் கோபம் வரும். சபிக்கும்'' என் றாள் சின்னப் பொண்ணு.

நாயக் கத்தினார். ''போ. போ! சின்னப் பொண்ணே! நீ எங்கேயாவது போ! இனி உன் வம்புக்கு நான் வர மாட்டேன். நீ அந்த தேவதைகளிடம் போய் இதைச் சொல்லி விடு. நான் பிழைத்துப் போகிறேன்'' என்று கதறி னார்.

சின்னப் பொண்ணுக்கு ஒன்றும் புரியவில்லை. அவள்தான் கண்ணாடி யில் தோன்றியதைப் பார்க்கவில் லையே.

ஆனால் அவளுக்கு ஒன்று மட்டும் புரிந்தது. இந்த நாயக்கின் தொல்லை இனி இருக்காது.





கவிதாவும், வனிதாவும் சகோதரிகள். இருவரும் ஒரே பள்ளியில் பயின்று வந்தனர். கவிதா பத்தாம் வகுப்பு, வனிதா எட்டாம் வகுப்பு.

கவிதா படித்துக் கொண்டிருந்தாள்.

'அக்கா' என்றாள் வனிதா.

'என்ன? ஏதாவது சந்தேகமா? கேள்' சொல்லிக் கொடுக்கிறேன்.'

'இல்லை அக்கா, பள்ளியில் கல்விச் சுற்றுலா செல்கிறார்களாம் உனக்குத் தெரியுமா?' என்று கேட்டாள் வனிதா.

''தெரியாதே. எப்பொழுது சொன்னார்கள்? எங்கே செல்கின்றார்களாம்?''

''நீ மதியம் பள்ளிக்கு வரவில்லையே. அதனால்தான் தெரியவில்லை. இயற்கை எழில் பூத்துக் குலுங்கி அருவிகளின் உறைவிடமாய்த் திகழும் திருக்குற்றால மலைக்குத்தான் போகிறார்களாம்.''

''எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டபடி வந்தார் அப்பா.

''எங்கள் பள்ளியில் சுற்றுலாவாக குற்றாலம் செல்கிறார்கள். அதைத்தான் அக்காவிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்.''

''எவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்று சொன்னார்களா?''

''எழுபத்தைந்து ரூபாய் கட்ட வேண்டுமாம் அப்பா'' என்றாள் வனிதா.

ஆர். கே. விஜயலக்ஷ்மி

''நம் வீட்டில் உங்கள் இருவரையும் அனுப்புகின்ற அளவிற்கு பண வசதி இல்லையே. என்ன செய்வது?'' என்று யோசனையில் ஆழ்ந்தார் அப்பா.

'அப்பா! தங்கையை மட்டும் அனுப்புங்கள். நான் போகவில்லை என்றாள்' கவிதா.

'இல்லை! இல்லை! அக்காவை அனுப்புங்கள். ஏனென்றால் அக்கா அடுத்த ஆண்டு வேறு பள்ளிக்குப் போனாலும் போய் விடலாம். நான் அடுத்த வருடம் முடிந்தால் செல்கிறேன்.

'உங்கள் இருவரையும் பார்க்கும் போது எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறதும்மா. ஒருவருக்காக மற்றொருவர் விட்டுக் கொடுத்துச் செல்கிறீர்களே! இருவரையும் அனுப்ப முடியவில்லையே என்று வருத்தமா இருக்கு. கவிதா நீயே இந்த வருடம் சுற்றுலா செல். அடுத்த வருடம் வனிதா போகட்டும்'' என்று முடிவு கூறி விட்டுச் சென்றார் அப்பா.

மறுநாள் சுற்றுலா செல்பவர்களின் பெயர் இறைவணக்க முடிவில் வாசிக்கப்பட்டது.

அக்காவின் பெயர் அதில் இடம் பெறாததைக் கண்டு கவிதாவிடம் விரைந்த வனிதா, ''அக்கா, ஏன் பெயர் கொடுக்கவில்லை? அப்பாதான் உன்னைப் போகச் சொன்னாரே?'' என்று கேட்டாள்.

''நீ இல்லாமல் எனக்கு மட்டும் செல்வதற்கு விருப்பமில்லை வனிதா. அதான்'' என்றாள் கவிதா.

''என்னக்கா இது! நான் இல்லையென்றால் என்ன? உன் தோழிகள் போறாங்கதானே? நானே போய் உன் பெயரை எழுதிக் கொள்ளச் சொல்கிறேன்'' என்று கூறி விட்டு தலைமை ஆசிரியரிடம் சென்றாள்.

கவிதாவின் பெயரை எழுதிக் கொள்ளுங்கள் என்று வனிதா கூறிய போது,


''ஏம்மா? நீ வரலையா?'' என்று ஆசிரியர் கேட்டார்.

''ஐயா, அப்பாவால் இருவருக்கும் பணம் கட்ட முடியாது. அதனால்தான் அக்காவை மட்டும் அனுப்புகிறோம். நான் அடுத்த ஆண்டு சுற்றுலாவில் கலந்து கொள்வேன்'' என்றாள் வனிதா.


''நான்தான் போவேன்னு போட்டி போடாம, அக்கா போகட்டும்னு பெருந்தன்மையா விட்டுக் கொடுத்த உன் பண்பை நினைத்துப் பெருமைப்படுகிறேம்மா'' என்று பாராட்டிய தலைமை ஆசிரியர், ''தியாக குணமுடைய ஒரு மாணவிக்கு இந்த ஆண்டுமுதல் நூறு ரூபாய் பரிசு தர பள்ளி நிர்வாகம் ஒப்புக் கொண்டிருக்கிறதும்மா. இந்த ஆண்டு பரிசு உனக்குத்தான். அதை முன் பணமாக நானே கொடுத்து உன்னையும் சுற்றுலாவில் சேர்த்து விடுகிறேன். நீயும் உங்க அக்காவுடன் மகிழ்ச்சியாகக் குற்றாலம் வரலாம்'' என்றார்.

அவள் பெயரையும் எழுதிக் கொண்டார்.

அப்பொழுதே குற்றால அருவியில் குளிப்பது போன்ற குளிர் உணர்வு ஏற்பட்டது வனிதாவுக்கு!



பந்து எங்கே? குறியுங்கள்



"கதைப் போட்டி, பாடல் போட்டி, விடுகதைப் போட்டி, ஓவியப் போட்டி, அறிவியல் போட்டி என்று எல்லாவிதமான போட்டிகளையும் வைக்கிறீர்கள். விளையாட்டு தொடர்பாக ஒரு போட்டி வைக்கக் கூடாதா?'' என்று விளையாட்டு ரசிகர்கள் நீண்ட நாட்களாக எழுதிக் கேட்டு வருகிறார்கள். இதோ அவர்களுடைய விருப்பம் நிறைவேறுகிறது.

இந்தப் புகைப்படத்தைப் பாருங்கள். பாகிஸ்தான் விளையாட்டுக்காரர் வாசிம் அக்ராம் பந்தை அடித்திருக்கும் காட்சி. பக்கத்தில் கிரண்மோர். அடிபட்ட பந்து கிரண்மோருக்கு அருகேதான் இருக்கிறது. இருவருடைய பார்வையும் பந்தில்தான் இருக்கிறது. இதை வைத்துக் கொண்டு பந்து எங்கே இருக்கிறது என்பதை குறித்துக் காட்டி, கூப்பனையும் பூர்த்தி செய்து ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97 என்ற முகவரிக்கு அனுப்புங்கள். பரிசு கண்டிப்பாக உண்டு. ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

பந்து எங்கே
குறியுங்கள் - போட்டி

பெயர் : ....

வயது : ....


முகவரி : ....

....

....

பின்கோடு : ....

முடிவு தேதி 15.11.92



பத்திரிகைகளுக்கு எழுதுவது எப்படி? – பி.சி. கணேசன் – பக் 96 – ரூ. 10/– வானதி பதிப்பகம், தீன தயாளு தெரு, தி. நகர், சென்னை – 600 017.

பத்திரிகைகளுக்கு எழுதவேண்டும் என்ற ஆர்வம் எல்லோரிடமும் இருக்கிறது. இந்த ஆர்வம் இல்லாதவர்கள் தான் குறைவு. எல்லோரிடமும் செய்திகள், கற்பனைகள் இருக்கும். அவற்றை எப்படி எழுதுவது, எந்தப் பத்திரிகைகளுக்கு அனுப்புவது, தலைப்பு எப்படி இருக்க வேண்டும், படங் களும் நாமே போட வேண்டுமா என்று எத்தனையோ சந்தேகங்கள் எழும். இவைகளுக் கெல்லாம் இந்த நூலில் நல்ல விடை தரப் பட்டுள்ளது. எழுத வேண்டும் என்ற துடிப் புடைய எல்லோரிடமும் இருக்க வேண்டிய புத்தகம்.

உங்கள் உடல் உறுப்புகளைத் தெரிந்து கொள்ளுங்கள் – டாக்டர் ரு. கணேசன், பக் 128, ரூ. 14/– வானதி பதிப்பகம், தீன தயாளு தெரு, தி.நகர், சென்னை – 600 017.

கோகுலம் டாக்டர் என்றே அன்புடன் அழைக்கப்படும் ராஜபாளையம் டாக்டர் ரு. கணேசன், சிறுவர்களுக்கு மருத்துவ அறிவு புகட்டுவதில் பெரும் பணி செய்து வருகிறார். கோகுலத்தில் தொடர்ந்து வெளி வரும் "கேட்கட்டுமா டாக்டர்?" பகுதிக்கு உள்ள வரவேற்பே இதை மெய்ப்பிக்கப் போதுமானது. இவரே, நமது உடல் உறுப் புக்களைக் கடித வாயிலாகக் குழந்தை களுக்கு அறிமுகம் செய்யும் கட்டுரைகளை சிறுவர் இதழான 'ரத்னபாலா'வில் தொட ராக எழுதி வந்தார். அதன் தொகுப்பே இந்தப் புத்தகம். உடல் உறுப்புகளைப் பற்றி நமக்குத் தெரியாத தகவல்கள் இதில் தரப்பட்டுள்ளன. நூல் குழந்தைகளுக்கே என்றாலும், அவசியம் பெரிவர்களும் படித் துப் பயனடைய வேண்டிய புத்தகம். விளக் கப்படங்கள் நூலுக்கு அழகு செய்கின்றன. பயனுள்ள படைப்பு.

விழா தந்த விழிப்பு – மணவை முஸ்தபா – பக் 74, ரூ. 8/– = மீரா பப்ளிகேஷன்ஸ், A.E அண்ணாநகர், சென்னை – 600 040.

தனக்கு பாக்கெட் மணியாகக் கிடைக்கும் சில்லரைக் காசுகளைத் தீனிக்குச் செலவழிக் காது சேமித்து வரும் அறிவானந்தம் என்ற சிறுவன், 'கஞ்சன்' என்ற பட்டப் பெயரையும் நண்பர்களிடையே பெறுகி றான். அவன் தாய் நோய் வாய்ப்படும் போது பெருந் தொகையாகப் பெருகியுள்ள அவனது சேமிப்பு கை கொடுக் கிறது. பரிசும் பாராட்டும் கிடைக்கிறது. சிறு சேமிப் பின் அவசியத்தை சிறுவர் களிடையே விளக்கும் நல்ல பயனுள்ள நாவல் படைப்பு.


நம்ப முடியாத விசித்திரங்கள் – மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, பக் 140, ரூ. 18/– மணிமேகலைப் பிரசு ரம், 4. தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை – 600 017.

மனித வாழ்க்கையில் நம்மால் சிறிதும் நம்ப முடியாத எத்தனையோ அதிசயமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இப்படி நடைபெற்ற விசித்திர நிகழ்ச்சிகளின் தொகுப்பே இந்த நூல். படிக்கத் தொடங்கி விட்டால் முடிக்கும் வரை கீழே வைக்கத் தோன்றாது.

முதல் எவரெஸ்ட் மனிதர்கள் – மணி மேகலைப் பிரசுர ஆசிரியர் குழு – பக், 168, ரூ. 22/– மணிமேகலைப் பிரசுரம், 4, தணி காசலம் சாலை, தி.நகர் சென்னை – 600 017.

இமய மலையின் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவது பெரிய சாதனையோ என்று எண்ணு பவர்களுக்கு நல்ல அருமையான விளக்க நூல். அதிலுள்ள துன்பங்கள், சிகரத்தை எட்டுவதன் பெருமை, முயற்சியில் ஏற் படும் அபாயங்கள், வெற்றிக்களிப்புகள் போன்றவை விளக்கப்பட்டுள்ளன. மலை யேற்றம் குறித்து அறிய விழைவோருக்கும் பயன்படும். நூலில் தரப்பட்டுள்ள விவ ரங்கள் பிரமிக்க வைக்கின்றன. ஆசிரியர் குழுவின் உழைப்பு நூலெங்கும் தெரிகிறது. பெருமை தரும் படைப்பு.

மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்பு வோர் இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை – 97 என்ற முகவரிக்கு அனுப்ப வேண் டும். கட்டணம் இல்லை. சிறுவர் நூல் களும் பொது அறிவியல் நூல்களும் மட்டுமே இப்பகுதியில் ஏற்கப்படும்.



★ 'கேட்கட்டுமா டாக்டர்' பகுதி மருத்துவத் தகவல் களைத் தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவுகிறது!
ஆர். சத்தியன்,
அகரக்கடம்பனூர்.

★ மரங்களை வெட்டும் சமூக விரோதிகளுக்கு சரியான பாடம் புகட்டியது "என்னை அரிக் காதே!"
ஜி. ஜி. கிருஷ்ணன்,
விசலூர் - 1.

★ இன்றைய நாட்டுச் சூழ் நிலைக்கு மகாத்மா காந்தி யின் வார்த்தைகளும், செய்திகளும் நல்ல மருந்தாக இருந்தன.
எஸ். நாகராஜன்,
மேலப்பாடி.

★ வானில் மிதந்த முதல் பலூன் என்ற கட்டுரையில் பா. ஜவகர் அவர்கள் 1766ல் ஹென்றிகேவன் டிஷ் ஹைட்ரஜன் வாயுவை கண்டுபிடித்ததாகக் கூறியிருந் தார். அது தவறு. 1776 என்பதே சரி. ஆதாரம் மேனிலை முதலாண்டு வேதியியல் தொகுதி இரண்டு. பாடம் 1.
வை. ஸ்ரீராம்,
மணப்பாறை.

கோட்டை விட்டீரே?

★ 'கதை சொன்ன நாற்காலி' சிவசி சூப்பர்! ஜெயராஜ் வரைந்த ஓவியங்கள், சம்ப வங்களை நேரில் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தி யது.
நா. சிந்துகுமார்,
திருவட்டார்.

★ நூறு ரூபாய் இரகசியம் கதை விறுவிறுப் பாகப் போய்க் கொண்டிருக்கிறது. தன்னம்பிக் கையும் விடாமுயற்சியும் இருந்தால் எந்தப் பேராபத்தி லிருந்தும் மீண்டு விடலாம் என்பதற்குப் பரதன் ஒரு சான்று.

பாரதியார் பாட்டில் ஒரு அச்சுப் பிழை இருந் ததே! கோட்டை விட்டிருக்கிறீர்களே!
கோகுலம் சிறுவர் சங்கம்,
முத்துராமலிங்க புரம்.
(தப்புதான்! - ஆசிரியர்.)

★ அண்டப் புளுகிக்கு கண்டைக்காய் மாலை அருமை. இதைப் படித்த பிறகு நாங்கள் பொய் சொல்லாமல் இருக்கிறோம்.
விழுந்தமாவடி,
சி. விஜயகுமார்.

★ "காந்தி மண்ணில்" சிறுகதை தமிழ்நாட்டி லுள்ள அனைத்து உயர்நிலைப் பள்ளிகளில் நடை பெறுகிற நிகழ்ச்சியின் அருமையான படப் பிடிப்பு.
முஸ்தபா,
தக்கோலம்.

★ காந்தியடிகள் நினைவுச் சிறப்பிதழையும், தீபாவளிச் சிறப்பிதழையும் ஒன்றாக வழங்கி எங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தந்துள்ளது கோகுலம்.
ச. உமர்கான்,
மொரப்பூர்.

★ கவிதையரங்கில் வெளியான காந்தியடி களைப் பற்றிய கவிதைகள் இரண்டும் உள் ளத்தைக் கொள்ளை கொண்டன.
எஸ். காமராஜ் மற்றும் கோகுலப்பிரியன்,
பெரம்பலூர்

★ தேர்வில் பிட் அடிக்கும் மாணவர்களுக்கு நல்லதொரு படிப்பினையாய் அமைந்திருந் தது த. ஜானகி அவர்களின் "காந்தி மண்ணில்" சிறுகதை. இக் கதையைப் படிக்கும் மாணவர்கள் திருந்து வார்கள் என்பதில் ஐயமில்லை.
ஜி. ஜி. கிருஷ்ணன்,
விசலூர் - 1.

★ 'அண்டப் புளுகிக்கு கண்டைக்காய் மாலை'யைப் படித்து சிரித்துச் சிரித்து மகிழ்ந் தோம்.
சி. மாதேஸ்வரன்,
ஆனைகல்மேடு.

★ "ஆனந்தா இங்கே வா!" பெரியோர்களை அவமதிப்பவர்களுக்கு "சவுக்கு அடி".
ப. ராகவன்,
சென்னை - 57.

★ 'பறப்பது எந்தக் கரப்பு' மூலம் ஆசிரியர் கரப்புகளைப் பற்றிய பல புதிய செய்திகளை அறிய வைத்திருக்கிறார்!
ஜெ. நெடுமாறன்,
குடியாத்தம்.

பரதன் அச்சகத்தில் பரத ் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் : ரூ. 360/-
ஆறுமாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் : ரூ. 180/-



MAGGI CLUBBERS
FUN LOVERS
MAGGI
CLUB
ஒன்று சோதியுங்கள்
மேகி ஜிக்-ஸா புதிர்
வானத்தில் விளையாடுங்கள்
செல்லுங்கள், உங்கள்
மேகி ஸ்கை
ப்ளேஸரில்!
கடல்-வானப்பயணத்தை பூர்த்தி
செய்வீர் மேகி
எஸ் அட்வென்ச்சரர்
கேமில்!
திருடனைப் பிடியுங்கள் மேகி
ஹூ-டன்-இட் மிஸ்டிரி
விளையாட்டில்
உல்லாசம் பெறுவீர், வியப்பூட்டும்
துணிகர விளையாட்டுகளில்!
இலவசப் பரிசுகள் – மேகி கிளப் உறுப்பினர்களுக்கு!
வஞ்சகமான எதிரிகளை
சாதுரியமாக முறியடியுங்கள்,
மேகி ரெய்டர்ஸ் ஆ∴ப்
தி ரெட் ஸ்டார்
விளையாட்டில்!
ஹல்லோ! மேகி கிளப்பில் சேருங்கள்: மேகியின்
துணிகர உலகிற்குள் செல்லுங்கள்.
ஐந்து மேகி நூடுல்ஸ் காலி பேக்குகளிலிருந்து அதன்
முன்பக்கத்தில் உள்ள இந்த முத்திரையை வெட்டி
எடுத்து எங்களுக்கு அனுப்புங்கள் - உங்களுக்குப் பிடித்த
இலவசப் பரிசைப் பெற, ஆறு முதல் எட்டு
வாரங்களுக்குள் மேகி கிளப்பில் இருந்து
குதூகலமளிக்கும் பரிசு உங்களுக்கு அனுப்பி
வைக்கப்படும்.
மறவாதீர்! உங்களுக்கு விருப்பமானப் பரிசைக்
குறிப்பிட்டு எழுதும்போது, உங்கள் பெயர், முகவரி,
பிறந்த தேதி ஆகியவற்றையும் எழுதுங்கள். ஏற்கனவே
நீங்கள் மேகி கிளப் உறுப்பினராக இருந்தால்,
உறுப்பினர் எண்ணையும் எழுதுங்கள். இதுவரை
உறுப்பினராக ஆகவில்லை என்றால் இப்போது
வருகிறது வாய்ப்பு! மேலே உள்ள விவரங்களை
எழுதும்போது, உறுப்பினராக விரும்புவதையும்
தெரிவியுங்கள். இலவசப் பரிசுடன், இலவச மேகி
கிளப் உறுப்பினர் அட்டையையும் உங்களுக்கு
அனுப்புவோம்.
எங்கள் முகவரி :
MAGGI CLUB
P.O. Box 5788 New Delhi-110 055
இலவசம்! மேகி "வேர்ல்ட் ஆ∴ப்
அனிமல்ஸ்" புதிர்! ஒவ்வொரு 2 இலவசப்
பரிசுகளுக்கும் உங்களுக்கு ஒரு மேகி "வேர்ல்ட்
ஆ∴ப் அனிமல்ஸ்" புதிர் இலவசமாகக் கிடைக்கும்.
MAGGI
2-Minute noodles
FAST TO COOK! GOOD TO EAT!
மேலும் ஒரு சலுகை: இதுவரை மேகி போட்டோ ஹவுஸைப் பெறாதவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை என்றால், இப்போதே பெற்றுக் கொள்ளுங்கள்.
HTA 7778TAM

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

